உ

சிவமயம்

# திருவருட்பயன் வசனரூபம்



ஆக்கம் :

திருமதி மாதேவிப்பிள்ளை கதிர்காமத்தம்பி

ஆசிரியை

உதவி : சிவகவிமாமணி ஆ. கதிர்காமத்தம்பி

வல்வெட்டி விநாயகர் அருள்கூர்

சைவநூற் பதிப்பகம்

வல்வெட்டித்துறை.

உ

சிவமயம்

# திருவருட் பயன் வசனரூபம்



## துதி

வேதாகமம் முதலிய கலைகளை நன்கு
அறிதற்கு நன்மையைச் செய்கின்றவரும்
யானை முகத்தை உடையவருமாகிய
விநாயகப் பெருமானை வழிபடுவோமாக.

## நூல்

சைவ சமயப் பிரமாண நூல்களாகக் கருதப்படுகின்ற சித்தாந்த சாத்திரங்கள் பதினான்கினுள், திருவருட்பயன் என்பதும் ஒன்றாகும். இது சந்தான குரவர்களில் ஒருவராகிய, உமாபதி சிவாச்சாரியரால் இயற்றப்பட்டது. எமது முழுமுதற் கடவுளாகிய சிவபெருமானது திருவருள், ஆன்மாக்களுக்குப் பயன்படும் வகையை இந்நூல் விளக்குவதால், திருவருட்பயன் என்னும் பெயரைப் பெற்றது என்பர். இந்நூல் குறட்பாக்களினாலானது. அவற்றின் பொருளைச் சகலர்க்கும் விளங்கும் வகையில், இலகுவான வசனநடையிற் தருவதே திருவருட்பயன் வசனரூபம் என்னும் இந்நூலின் குறிக்கோளாகும்.

## முதலாவது அதிகாரம்

## பத்து அதிகாரங்களைக் கொண்ட திருவருட்பயன் வசனரூபமாகிய இந்நூலின் முதலாவது அதிகாரம் பதிமுது நிலையாகும்.

**இது இறைவனுடைய இயல்புகள் பற்றிக் கூறுவதாகும்.**

**இறைவனுடைய பரிபூரண வியாபக இயல்பு:-** எழுத்துக்களுள்ளே, அகர உயிர் எழுத்து, ஏனைய எழுத்துக்கள் ஒன்றினையுஞ் சாராது தனித்தும், ஏனைய எல்லா எழுத்துக்களிலுங் கலந்து நின்றும் இயங்குவது போல, இறைவனும் உயிருள்ள உயிரற்ற- அசைவுள்ள அசைவற்ற எல்லாப் பொருள்களையுங் கடந்து நின்று அறிவுமயமாக விளங்கியும், மேற்கூறப்பட்ட எல்லாவற்றிலுங் கலந்து பிரிப்பின்றி அவற்றிற்கு ஆதாரமாக நின்று இயங்கியும் மிளிரும் பரிபூரணனாவர். பிறிதொன்றும் ஒப்பில்லாதவர் எல்லாவிடத்தும் எஞ்ஞான்றும் நிறைந்து நின்று நிலைபெற்று நிற்பவர்.

எனவே இறைவன் எல்லாவற்றையுங் கடந்து தனித்துச் சுயம் பிரகாசமாக நிற்குந் தன்மையும், எல்லாவற்றிலுங் கலந்து பிரிப்பின்றி நிற்குந் தன்மையும் உடையவர் ஆவர்.

***சிவசக்தியுடன் இறைவனுக்குடைய தொடர்பு:-*** மேற்போந்த தன்மைகளை உடையவராயினும், எம் இறைவனாகிய சிவபெருமான், வாக்கினாலே உரைக்கவும், மனதினாலே உணரவும் முடியாததும், மல வாசனை அற்றதும் பேரானந்தம் உடையதுமாகிய தனது நிலையை, ஆன்மாக்கள் அடையும் படியாகச் செய்கின்ற சிவசக்தியின் - திருவருட் சக்தியின் - நின்றும் எஞ்ஞான்றும் வேறாகாது பிரிப்பின்றிக் கலந்து நிற்பவராவர்.

***சிவத்தின் மாண்பு:-*** எல்லா இடங்களிலும் நிறைந்து நிற்கின்ற தன்மையாலும், ஆன்மாக்கள் இலகுவில் அடைவதற்கு அருமை யுடைமையினாலும், வேறொருவரால் அடைவதற்கு அருமையுடைமை யினாலுந் தமக்குத் தாமேயன்றி வேறொருவரும் ஒப்பில்லாதவராவர்.

***சிவத்தின் அருட்செயல்கள்:-*** ஓர் உழவனானவன், நெற் பயிரை உரிய காலத்தில் நட்டு, நீர் உரம் இட்டுப் பாதுகாத்து அப்பயிர் முற்றிய காலத்தில், தான் நட்ட பயிரையே, பயன் கருதி வெட்டுவதுபோல, ஆன்மாக்கள் மலபரிபாகம் பெற்று உய்யும் வழிச்செல்ல உதவியாக, அவற்றிற்குப் பிறவிகளைக் கொடுத்துப்

படைத்துத், தனு, கரண, புவன, போகங்களைக் கொடுத்துக் காத்துப், பிராரத்துவ வினைமுடிவில், அவை இப்பிறவியிற் செய்த வினைப் பயன்களைக் கொண்டு, மேலும் வீட்டின்ப நெறியை நோக்கி முன்னேறுவதற்கு வழி செய்யும் முகமாகக், கொடுத்த உடல்களை அழித்தும், என்றும் உயிர்களை விட்டு நீங்காது அவற்றிற்கு ஆதாரமாக நிற்பவராவர்.

**இறைவனின் திருமேனிகள்:-** சிவம், சக்தி, நாதம், விந்து ஆகிய நான்கு அருவத்திருமேனிகளும் பிரம்மா, விஷ்ணு, உருத்திரன், மகேஸ்வரன் ஆகிய நான்கு உருவத்திருமேனிகளும், சதாசிவம் எனப்படுஞ் சிவலிங்கமாகிய ஒரு அருவுருவத்திருமேனியும், ஆகிய ஒன்பது வகைத்திருமேனிகளுடன், ஞானமார்க்கத்தில் நிற்பவர்களுக்கு ஏற்ப, ஞானமாகிய திருமேனியையும் உடையவராக எம் இறைவன் விளங்குகிறார்.

**வேறொரு தலைவர் இல்லாதவர்:-** தலைவராகிய தாங் கொடுக்குந் தனு கரண புவன போகங்களைக் கொண்டு, ஆன்மாக்கள் அறிதலைப்போல, அறிதற்கு வேறொரு தலைவர் இல்லாதவர். அதனாலே எல்லாவற்றையுந் தானே ஆக்கித் தானே அறிபவராவர்.

**அறிவிற்கு அறிவாய் நிற்பவர்:-** தேவராலுங் காணுதற்கு அருமையுடையவராகிய எம் இறைவராகும் சிவபெருமான், எவ்விடத்தும் ஞானவடிவாக நிறைந்து நிற்பவராவர். தம்மையே அடைக்கலமாக உடைய மெய் அடியார்களுக்கு, வெளிப்பட்டுத் தோன்றி, அவர்களை என்றும் விட்டு நீங்காதிருப்பவராவர். இதற்குச் சமயாச் சாரியார்களுடைய வரலாறுகள் சான்றாக அமைவனவாம்.

**வியாபகராய் நிற்குந் தன்மை:-** முழுமுதற் கடவுளாக விளங்குகின்ற சிவபெருமான், எல்லா உலகங்களிலும், எண்ணிறைந்த எல்லா உயிர்களிலுஞ், சூடுபொருந்திய நீர்போலக் கலந்து நிற்பவராயினும், அவ்வுலகங்களின் தன்மையையோ, அவ்வுயிர்களின் தன்மைகளையோ சாராது, தனித்தன்மையோடு விளங்குபவராவர்.

சூடுபொருந்திய நீர் என்னும் உவமையைச் சிந்திக்கும் போது, நெருப்பினாலே சூட்டினைப் பெற்ற நீரானது, அச்சூட்டினாலே வெந்நீராகிறது. அப்பொழுது சூடென்னும் நெருப்பின் தன்மை நீரின் அணுக்கள் ஒவ்வொன்றிலும் பொருந்தி இருப்பினும் நெருப்பு ஒரு

பொருளை எரிக்கிறதுபோல நெருப்பென்ற சூட்டைப்பெற்ற வெந்நீரானது எப்பொருளையும் எரிக்கமாட்டாது. எனவே நீரோடு சூடு சேர்ந்து நிற்றலால், நீரில் நெருப்பின் எரித்தற்தன்மை இல்லாதது போல, பாசங்களும் உயிர்களும் பதியோடு சேர்ந்து நிற்பினும், அவற்றின் தன்மைகள் பதியைத் தாக்குவன அல்ல. அதனால் இறைவன் தனித்தன்மையோடு சுயம்பிரகாசமாக விளங்குகிறார்.

இறைவன் உலகங்களோடும் உயிர்களோடும் கலந்து நிற்பினும், அவற்றின் தன்மைகள் இறைவனைச் சாரா என்பதற்கு, உப்பு நீரில் வாழுகின்ற மீன்களின் உடம்பு, உப்புத்தன்மையைச் சாராதிருப்பதும் எடுத்தக்காட்டாகும்.

**இறைவன் நடுநிலையானவர்:-** தம்மை மெய்யன்போடு வழிபடுபவர்களுக்கு, அதன் பயனாகப் பிறவித்துன்பத்தை நீக்கிப் பேரின்பத்தைக் கொடுத்தும், தம்மை வழிபடாது உலக இன்பங்களில் அழுந்துபவர்களுக்கு, அதன் பயனாகப் பேரின்பத்தைக் கொடாமலும் விளங்குகின்ற இறைவன், ஆன்மாக்கள் தாம்தாஞ்செய்யும் நல்வினை தீவினைகளுக்கேற்ப, அவரவர்களுக்குரிய பலனைக் கொடுப்ப தினாலே, ஆன்மாக்களில் விருப்போ, வெறுப்போ இல்லாத நடு நிலைமையாளராவர்.

மேலும் கொடும் வெயிலிலே அலைந்து வருந்துபவன், அயலில் உள்ள நிழல் மரத்தை அடைந்தால், அந்நிழல் மரம் அவனுக்கு நிழலைக்கொடுத்து மகிழ்ச்சியடையச் செய்யும். அவன் நிழல் மரத்தைச் சென்றடையானாயின், நிழல்மரமும் அவனுக்கு நிழலை கொடுத்து மகிழ்ச்சியடையச் செய்வதுமில்லை அவனுக்குத் தீமையுஞ் செய்யாது. அதுபோலவே இறைவனும் பிறவித் துன்பங்களில் அழுந்தி வருத்தமடைந்து, தன்னை நாடி வருபவர்களுக்குப் பிறவித்துன்பங்களை நீக்கி இன்பத்தைக் கொடுப்பார். தம்மை நாடாதவர்களுக்கு, இன்பத்தைக் கொடுப்ப தில்லை. நிழல் மரத்தை ஒருவன் சேர்வதினால், நிழல் மரத்திற்கு நன்மையோ தீமையோ ஏற்படுவதில்லை. அதுபோல், நாம் இறை வனை வழிபடுதலாலோ, அன்றி வழிபடாது விடுவதாலோ, அவருக்கு எம்மீது விருப்பமோ, வெறுப்போ ஏற்படுவதுமில்லை. ஆயின் அவரவர் செய்யும் நல்வினை தீவினைகளுக்கேற்ப அவற்றிற்குரிய பயனை நல்கும் நடுநிலைமையாளர் ஆவர்.

**இறைவன் ஆன்மாக்களின் மீது என்றும் பெருங்கருணை உடையவர்:-** எமது அறிவிற்கு அறிவாகி விளங்கி, அநாதியாகவே தொடர்ந்து வருந்துகின்ற பிறவித்துன்பமாகிய நோயைத், திருவருளாகிய மருந்தைத், தம்மை நாடி வருபவர்களுக்கு ஊட்டி நீக்கியருளுகின்ற வைத்தியநாதராகிய சிவபெருமான், தம்மை மெய்யன்போடு இடைவிடாது வழிபடுகின்றவர்களுக்கு, நிலையான வீட்டின்பமாகிய செல்வத்தைக் கொடுத்தருளுவார்.

உலகின் கண்ணேயுள்ள வைத்தியர்கள் தம்மிடம் வரும் நோயாளர்களுக்கு, நோய்களின் தன்மைக்கேற்பக் கத்திவைத்தும் கசப்பு மருந்துகளைக் கொடுத்தும், அவர்களுக்கு உடனடியாகத் துன்பஞ்செய்யும் சிகிச்சைகளைச் செய்து, அவர்களின் நோயை மாற்றுவது போல, பெருங்கருணை வைத்தியநாதராகிய இறைவனும், அவரவர் செய்த வினைகளுக்கேற்பத் துன்பங்களையுந் தந்தே பிறவிப் பிணியை நீக்கிப் பேரின்பத்தைக் கொடுத்தருளுகின்றார். "நல்ல குருநாதர் நம்மை வருத்துவது கொல்லவல்ல கொல்லவல்லப் பொல்லாக் குணமறுக்க" என்னும் பெரியோர் வாக்கை ஈண்டு உணரற் பாலதாகும்.

**இறைவனின் இயல்புகளை மீட்டும் சேர்த்து நோக்குவது பயனுடைத்தாகும்:-** அகரமாகிய உயிர் எழுத்து, தான் ஓர் எழுத்தாகத் தனித்துநின்றும், ஏனைய எல்லா எழுத்துக்களோடு கலந்து நின்றும் விளங்குவது போல, இறைவனும் உலகுயிர்களோடு கலவாது தனித்தும், அவை எல்லாவற்றோடு கலந்து விளங்குபவராவர். அருட்சத்தியாகிய சிவசக்தியுடன் பிரிப்பின்றிக் கலந்து நிற்பவர். எங்கும் நிறைந்து நிற்குந் தன்மைக்கும், வேறொருவரால் அறியமுடியாத அருமைக்கும், ஒருவரால் பெறுதற்கு அருமையுடைமைக்குந், தனக்குத் தானேயன்றி வேறொருவர் ஒப்புவமையில்லாதவர். பேரின்பத்தை அடைதற்குதவியாக ஆன்மாக்களுக்குப் பிறவிகளைக் கொடுத்துப் படைத்துங், காத்தும், அழித்தும், மறைத்தும், அருளியும் ஆன்மாக்களுக்கு நீங்காத துணையாக நிற்பவர் ஆவார்.

சிவம் சக்தி நாதம் விந்து ஆகிய அருவத்திருமேனிகள் நான்கும், பிரம்மா விஷ்ணு உருத்திரன் மகேஸ்வரன் ஆகிய உருவத்திருமேனிகள் நான்கும், சதாசிவம் என்று சொல்லப்படுகின்ற

சிவலிங்கத் திருமேனியாகிய அருவுருவத்திருமேனி ஒன்றும், ஆகிய ஒன்பது வகைத் திருமேனிகளுடன் ஞானமாகிய திருமேனியையும் உடையவர். எல்லா உயிர்களுக்கும் ஒரு தலைவன் இருப்பது போலத் தனக்குமேல் வேறொரு தலைவன் இல்லாதவர். தேவர்களாலுங் காணமுடியாதவர். ஆயினும் தன்னையே சரணாக அடைந்தவர்களுக்கு, வெளிப்பட்டுத் தோன்றி அவர்களை விட்டு நீங்காதவர். சூடு பொருந்திய நீர்போல் உலகுயிர் எங்குங் கலந்து நிற்பவராயினும், அவற்றின் தன்மைகளாற் தாக்குறாது, வேறாகத் தனித்தன்மையோடு நிற்பவர். தம்மை வழிபட்டோர் வழிபடாதோர் யாவருக்கும், அவரவர்கள் செய்யும் வினைகளுக்கேற்ப, அவரவர்களுக்குரிய பயனை ஈயும் நடுநிலைமையாளர். தம்மை மெய்யன்போடு, வழிபட்டவர்களுக்குத் தவறாது பேரின்பத்தைக் கொடுப்பவர் ஆவர்.

அன்பர்களே! கருணைக்கடலாகிய சிவபெருமானுடைய இயல்புகளைப்பற்றி நோக்கினோம். அவற்றை மீட்டுச் சிந்திப்பதன் பயன், தன்னைச் சரணடைந்தவர்களுக்குத்தோன்றாத் துணையாக இருந்து, வெளிப்பட்டுத் தோன்றிப், பேரின்பப்பேற்றை அளித்தருளும் அப்பெருமானை, அடைந்துய்தற்குரிய வழிகளை நாடுதலேயாம்.

# திருவருட்பயன் வசனரூபம்

## இரண்டாம் அதிகாரம்

## ஆன்மாக்களின் தன்மைபற்றிக் கூறுகின்ற

## உயிரவை நிலையாகும்

**ஆன்மாக்களின் தொகை எண்ணிறந்தனவாம்:-** ஆன்மாக்கள் பல பிறவிகளில் பிறந்து வாழ்ந்த நாட்களின் தொகையையோ, இனிமேல் பல பிறவிகளில் வாழுகின்ற நாட்களின் தொகையையோ வீட்டின்பத்தை அடைந்த ஆன்மாக்களின் தொகையையோ இனிமேல் வீட்டின்பத்தைப்பெற இருக்கும் ஆன்மாக் களின் தொகையையோ, கணக்கிட்டுக் கூறமுடியாதனவாகும். அவை போல ஆன்மாக்களின் தொகையையுங் கணக்கிட்டுக் கூறமுடியாதனவாம் எனவே எண்ணிறைந்தனவாம்.

**ஆன்மாக்கள் மூவகைப்படும்:-** அவைகளுள் ஆணவம், கன்மம், மாயை ஆகிய மூன்று மலங்களையும் உடையவர்களைச்

சகலர் என்றும், ஆணவம், கன்மம் ஆகிய இரண்டு மலங்களை உடையவர்களைப் பிரளயாகலர் என்றும், ஆணவமலம் மாத்திர முடையவர்களை விஞ்ஞானகலர் என்றும் அழைக்கப்படுவர்.

**மூவகை ஆன்மாக்களுக்கிடையேயுள்ள வேறுபாடுகள்:-** அம் மூவகையினரும், ஆணவ மலத்தோடு சம்பந்தம் உடையவரே. ஆயினும், மாயா மலத்தைத் துணையாகவுடைய 'சகலர் தாம் மலங்களினாற் பிணிப்புண்டிருக்கும் நிலையை அறியார். ஏனைய பிரளயாகலரும், விஞ்ஞானகலரும் தங்கள் தங்கள் நிலையை உண்பவர்கள் ஆவர். இம்மூவகையினருள், சகலர்க்குக் குருமூர்த்தி யாக இறைவன் எழுந்தருளிவந்து அருள் செய்வார். பிரளயா கலருக்கு இறைவன் உருவத்திருமேனியுடன் நேரே வந்து அருள் செய்வார். இவர்களுக்குப் பிரளயத்திற் பிறந்த பின்பு, பிறவி இல்லை. விஞ்ஞான கலருக்கு, இறைவன் அவர்களின் அறிவினுள் அறிவாகி நின்று அருள் புரிவார். இவர்களுக்கு எடுத்த பிறவியேயன்றி மேலும் பிறவியில்லாதவராவர்.

**ஆன்மாக்களிடையே உள்ள பெலவீனமாவது:-** விழிப்பு நிலையில் நாளுங் கண்டவற்றை எல்லாம், கனவு நிலையில் மாறுபடக்காண்கின்றனவேயன்றி, உள்ளதை உள்ளவாறே காணும் வலிமை அற்றனவாம். எவ்வாறெனில், ஆன்மாக்கள் தாம் வருந்த வேண்டிய பலன் வருங்காலத்திற் கனவுகாணும்போது, உயிரோடு இருக்கின்ற நண்பன் ஒருவன் இறந்ததாகவும், இன்பம் அனுபவிக்க வேண்டிய காலங்களிலே, இறந்த நண்பன் ஒருவன் உயிரோடு வாழுதல் போலவுங் காணுகின்ற தன்மையுடையன. இங்ஙனம் நனவுநிலையில் கண்டவற்றை கனவு நிலையிலும் அவ்வாறே காணமுடியாது மாறுபடக் காண்கின்றன என்பதால், ஆன்மாக்களது ஆற்றல் இன்மை தெளிவாகிறது.

**ஆன்மாக்களின் அறியுந்தன்மை:-** மெய், வாய், கண், மூக்கு, செவி ஆகிய பொறிகளின் துணைகொண்டே ஆன்மாக்கள் பொருள்களை அறிகின்றன. பொறிகளின் துணையின்றி, எவற்றையும் அறியமாட்டா. எனவே ஆன்மாக்கள் தானாக அறியுந்தன்மை உடையனவல்ல. ஆன்மாக்கள் எப்பொழுதும் ஒன்றைச் சார்ந்தே நிற்கும் இயல்புடையன. அவை பாசத்தைச் சாரும்போது பாசத்துள் அழுந்தியும், பதியைச் சாரும்போது பதியுள் அமிழ்ந்தியும் நிற்கும்

நிலையுடையனவாம். ஆன்மாக்கள் உலகியலைச் சார்ந்து நிற்கும் போது தத்துவங்களின் துணையாலும், முத்திநிலையில் இறைவனது துணையாலும் பொருள்களை அறிகின்றன.

சூரியன் சந்திரன் அக்கினி உலகம் இருள் என்பன இருந்தாலும், பார்க்கும் ஒருவனுக்கு அவனது கண்களின் பார்க்குஞ் சக்தி இல்லையாயின், அவனால் ஒரு பொருளையும் பார்க்க முடியாது, அதுபோலப் பிரகாசமாய் விளங்குகின்ற சிவபெருமானது ஞானஒளியும், இருள்மயமான ஆணவமலமும் தத்துவங்களும் இருந்தாலும் ஆன்மாக்களிடம் ஞான உணர்வு இல்லையாயின், மெய்ப்பொருளை அறியமாட்டா. ஒளி, பொருள்களை விளக்க உணர்வினால் விளங்கிப் பொருளைக் காணுகின்ற கண்களைப் போல, இறைவனது ஒளி உணர்த்த உணர்த்தியவற்றை உணரும் உணர்வினை ஆன்மாக்கள் உடையனவாம்.

**ஆன்மாக்கள் அறிகின்ற தன்மையினால் சதசத்தாம்:-** சத்துப் பொருளாக விளங்குகின்ற சிவமோ, எல்லாவற்றையும், தானே அறியக் கூடியது. சடப்பொருள்களுக்கோ அறிவே இல்லை. நிலையான ஞானமாக விளங்குஞ் சிவம், நிலையில்லாத மாயை முதலாம் பொருள்களைப் பொருந்தி அறியவேண்டிய தேவையில்லை. அசத்தாகிய பாசமோ, சடப்பொருளாகையினாலே அறிவற்ற தன்மையினால், ஒன்றையும் அறியமாட்டாது. ஆயின் ஆன்மாக்களோ, அறியும் பொருளாகிய சிவத்தைச் சார்ந்து சித்தாகவும், அசத்தாகிய பாசங்களைச் சார்ந்து அசத்தாகவும் மாறும் இயல்புடையன. எனவே ஆன்மா, சத்துப் பொருளாகாமலும், அசத்துப் பொருளாகாமலும் இரண்டும் அற்ற சதசத்தாக விளங்குகிறது.

மேலும், இத்தன்மை, பளிங்குக் கண்ணாடியின் உவமானத் தால் தெளிவாகும். பளிங்குக் கண்ணாடிக்குத், தன் முன் வைக்கும் பொருள்களின் தன்மைகளை அப்படியே காட்டும் தன்மையுண்டு. அக்கண்ணாடியின் பரப்பு முழுவதும் கருமையான அழுக்குப் படிந்திருக்குமாயின் அப்பொழுது அது தன் முன் வைக்கப்பட்ட பொருள்களின் தன்மைகளைக் காட்டாது. காரணம், கண்ணாடியின் தன்மை அழுக்கினால் மறைக்கப்பட்டிருப்பதேயாகும். ஆகவே கண்ணாடிக்குஞ் சார்ந்ததின் வண்ணமாகத் தோற்றும் தன்மையுண்டு. அதுபோல அறியுந்தன்மையுடைய ஆன்மாவின் அறிவு, ஆணவமல

இருளினால் மறைக்கப்பட்டிருப்பதனால், அதனை ஆன்மா சார்ந் திருக்குந்தன்மையால், உண்மையை அறியமாட்டாமல் இருக்கிறது. பளிங்குக் கண்ணாடி தன்னை மூடியுள்ள அழுக்கு நீங்கியதும், தன் முன் உள்ள பொருள்களின் தன்மைகளை புலனாக்குவது போல, ஆன்மாவும் மலஇருள் நீங்கியதுஞ், சிவத்தைச் சார்ந்து அறிவு விளக்கம் பெறுவதால், சத்துப்பொருளாக் விளங்குகிறது.

கண்ணானது ஓர்நிறக் கண்ணாடியை அணியும்போது, அந்நிறமாகவே - சார்ந்ததின் வண்ணமாகவே - தோற்றுவதோடு, அக்கண்ணாடியின் தன்மையையும் உணருகிறது. அதுபோல ஆன்மா சடப்பொருள்களைச் சார்ந்து சடமாவதேயன்றிச் சடப்பொருள்களின் இயல்புகளையுஞ், சிவத்தைச் சார்ந்து, சத்தாகிறதேயன்றிச் சிவத்தின் இயல்புகளையும் அறியுஞ் சிறப்பம்சம் பொருந்தியது.

இவற்றால் ஆன்மா ஆணவத்தோடு கலந்து நிற்கும்போது, அறிவில்லாத அசத்துப் பொருளாகியும், சிவத்தோடு கலந்து நிற்கும்போது அறிவுடைய சித்துப் பொருளாகியும் விளங்குகிறது என்பது புலனாகிறது.

***ஆன்மா இயல்பாகவே சிவத்தைக்காணமுடியாமைக்குக் காரணம்:-*** ஆன்மாவின் தற்குறைவே அதற்குக் காரணம். சூரிய ஒளியை ஏற்றுப் பொருள்களைக் காணமுடியாத குறைபாடுடைய கூகையின் கண்களுக்குப், பகலில் பிரகாசமாக விளங்குஞ் சூரியனது ஒளி தெரிவதில்லை அவ்வாறு தெரியாமைக்குக் காரணம் கூகையினுடைய கண்ணிலுள்ள குறைபாடேயாகும். அதுபோலச் சுயம்பிரகாசமாக விளங்குகின்ற இறைவனது வியாபகத்திற் தங்கி இருக்கின்ற ஆன்மாக்களின் அறிவு, ஆணவமல இருளினால் மறைக்கப் பட்டிருக்கிறதற்குறைவினால், ஆன்மாக்கள் இறைவனைக் காணமுடியாமல் இருக்கின்றன. எனவே ஆணவச் சார்பாகிய தற்குறைவு நீங்கும் பொழுதே, சிவஞான ஒளியாற் சிவனை அறிந்து உய்யவழிபிறக்கும்.

***ஆன்மாக்கள் அருளைப்பெற்று உய்யவழி:-*** அநாதி தொடக்கம் இற்றைவரை பிறந்தும் இறந்தும் அளவற்ற துன்பங்களை அனுபவித்துவரும் ஆன்மாக்கள், துன்பங்கள் நீங்கி இறைவன் திருவருளை அடைந்து இன்புறுதற்கு, நிலையில்லாத உலக போகங்களைத் துறந்து நிலையான சிவத்தைப் பற்றுதலே வழியாகும்.

## திருவருட்பயன் வசனரூபம்

**ஆன்மாக்களின் இயல்புகளை மீண்டுந் தொகுத்து நோக்குவாம்:-** ஆன்மாக்கள் எண்ணிறந்தன. அவை ஆணவம், கன்மம், மாயை ஆகிய மூன்று மலங்களையுடைய சகலர் எனவும், ஆணவம் கன்மம் ஆகிய இருமலங்களையுடைய பிரளயாகலர் எனவும், ஆணவமலம் மாத்திரமுடைய விஞ்ஞானகலர் எனவும் மூவகைப்படும். அவ்மூவகை ஆன்மாக்களும் ஆணவமலத்தாற் பீடிக்கப்பட்டனவே. ஆன்மாக்கள் நனவிலே காண்பவற்றைக் கனவிலே மாறிக் காண்கின்ற வலிமையற்றனவாம். கண்முதலிய பொறிகளின்றித் தானாகவே அறியும் வல்லமை அற்றவை. கண்களாற் பார்க்குந்திறனற்ற குருடர்களுக்கு, உலகுயிர்கள் இருள்மயமாகத் தோற்றுவதுபோல, ஆணவமலப்பீடிப்பால் அறியுந்தன்மை அற்ற ஆன்மாக்களுக்குத் திருவருளுந் தத்துவங்களுந் தோற்றாவாம். சார்ந்ததன் வண்ணமாகத் தோன்றும் கண்ணாடிபோன்று சத்தாகிய சிவத்தைச் சார்ந்து சத்துப்பொருளாகியும், அசத்தாகிய சடப்பொருள்களைச் சார்ந்து, அசத்துப் பொருளாகவும் விளங்கும் ஆன்மா சதசத்து எனப்படும்.

பகலில் சூரியஒளியைக் காணமுடியாத குறைபாடுகளையுடைய கண்களைக் கொண்ட கூகைக்குச் சூரியஒளி இருள்மயமாகவே இருப்பதுபோல, ஆணவமலத்தால் மறைக்கப்பட்டு அறியுந் தன்மையிற் குறைபாடுடைய ஆன்மாக்களுக்குந் திருவருளாகிய சூரியன் தோன்றாது. பிறவித்துன்பத்துள் உழலுகின்ற ஆன்மாக்கள், எப்பொழுது திருவருளை உணருகின்றனவோ, அப்பொழுது தான் பிறவித் துன்பத்துள்நின்றும் நீங்கி விடுதலை பெறுவனவாம். எனவே ஆன்மாக்கள் நிலையில்லா உலகபோகங்களைத் துறந்து நிலையான சிவத்தைப் பற்றுதலே உய்யும் நெறியாகும்.

அன்பர்களே! ஆன்மாக்களாகிய நாம். மும்மலங்களாலுங் கட்டுப்பட்டவர்களாய், நிலையான அறிவோ வலிமையோ அற்றவர்களாய், ஆணவமல இருளினால் மறைக்கப்பெற்ற தன்மையினால், இறைவனையோ தத்துவங்களையோ அறியமுடியாதவர்களாய்ச், சார்ந்ததன் வண்ணமாக விளங்கும் பளிங்குக் கண்ணாடி போல, மலங்களைச் சார்ந்து அறிவில் பொருளாகியும், திருவருளைச் சார்ந்து சத்தாகிய அறிவுப்

பொருளாகியும் உழலுகின்ற நிலையில், எப்பொழுது திருவருளை நாடிப் பற்றுகிறோமோ, அப்பொழுதுதான் துன்பங்களின்நின்றும் நீங்கி விடுதலை பெறும் ஒளிக்கீற்றைக் காண்பவராவோம். அதற்கு நாம் உலக சுகபோகங்களிலுள்ள பற்றை நீக்கிச் சிவத்தை இறுகப் பற்றுதலே வழியாகும்.

## திருவருட் பயன் வசனரூபம்

## மூன்றாம் அதிகாரம்

## ஆணவ மலத்தின் தன்மைபற்றிக் கூறுகிற இருள்மல நிலையாகும்

அறியாமையே வடிவாகிய ஆணவமலமாம் இருள்மலத்தின் தன்மைபற்றிக் கூறுவதால் இருள்மலநிலை எனக் கூறப்பட்டது எனினும், ஆணவமலத்தை நீக்குவதற்குக் கருவியாகிய மாயையின் தன்மைகளும், ஆணவமலத்தால் உண்டாகும் கன்மலத்தின் தன்மைகளும் விளக்கப்படுகின்றன.

**ஆணவமலம் உள்ளிட்ட உள்பொருள்கள்:-** தொன்று தொட்டே இடைவிடாது வருகின்ற பிறவித் துன்பங்களும், பிறவித் துன்பங்களுக்குக் காரணங்களாகிய ஆணவம், கன்மம், மாயை ஆகிய மும்மலங்களும், வீட்டின்பமும், வீட்டின்பத்தைத் தருகின்ற சிவமும் உள்பொருள்களேயாம்.

**ஆணவமலத்தின் பொது இயல்புகள்:-** உலகிலுள்ள பல்வேறு பொருள்களின் வேறுபாடுகள் தோன்றா வண்ணம், அவை எல்லாவற்றையும் மறைத்து, இருளாகிய ஒரேயொரு பொருள்போலத் தோன்றச் செய்து நிற்கும் பொருள், இருள் என்பதேயாகும். இவ்விருளைப் போல ஆன்மாக்கள், பிறவித்துன்பம் வீடுபேறு அவற்றிற்கான காரணங்கள் என்பவற்றை அறிந்து உய்யும் நெறியை அறியாவண்ணம் மறைத்து, அவற்றின் அறிவை மயக்கிநிற்கும் பொருள் இருள்மலமாகிய ஆணவமலமே. ஆணவம் இருளைப் போலமருள் வடிவானது. ஆன்மாக்களின் வியாபகத் தன்மையை ஒடுக்கி, அவற்றின் அறிவை அணுவளவாகச் சுருங்கச் செய்வதனால் அதற்கு ஆணவமலம் என பெயர்வந்ததாகக் கூறுவர்.

**ஆணவமலம் இருளினும் பார்க்கக் கொடியது:-** இருளானது உலகிலுள்ள பொருள்களின் வேறுபாடு கண்களுக்குத்

தோன்றாவண்ணம், அவற்றை மறைத்து நின்றாலும், தனது இருளாகிய வடிவத்தை வெளிப்படையாகக் கண்களுக்கு காட்டி நிற்கும். ஆனால் ஆணவமோ ஆன்மாக்களை மயங்கச்செய்து நிற்கும்போது, தன்னையுங்காட்டாது, பிறபொருளையுங் காட்டாது நிற்றலால், அவ்வாணவமலம் இருளிலும் பார்க்கக் கொடியதாகும்.

ஆணவமலமானது, ஆன்மாக்களை மயக்கி நிற்கும் நிலையில் நற்செயல்களைத் தீயவை என்றுந் தீய செயல்களை நற்செயல்கள் என்றும், மாறுபட உணரவைத்து ஒவ்வொரு கணப்பொழுதும் ஆன்மாக்களை வஞ்சித்துக் கொண்டே இருக்கிறது.

**ஆன்மாக்களுடனான ஆணவமலத்தின் சேர்க்கை:-** அது அநாதியே பொருந்தியதாகும். உயிர்க்குயிராய் அதனுடன் கலந்து நிற்கின்ற சிவமும், அவ்வான்மாவுடன் கலந்து நிற்க, அச்சிவத்தைச் சாராது, ஆன்மாவையே அவ்வாணவமலமாகிய இருள்மலம் சார்ந்து இந்நாள் வரையும் நீங்காது இருக்கிறது.

இருளானது ஒளியை அடக்காது. அதனிடமுஞ் செல்லாது. அது போல இருள்மலமாகிய ஆணவமலம், ஒளிமயமாகிய சிவத்தை மறைக்கவோ, அதனிடஞ் செல்லவோமாட்டாது. ஆயின் சிவத்தின் உள்ளொளி பிரகாசிக்குமாயின், ஆணவத்தின் வலிமை அடங்கும். எனவே குருவருள் ஆன்மாவிற்குக் கிடைக்கும்வரை, ஆணவமலம் ஆன்மாவுடன் சேர்ந்தே இருக்கும்.

**ஆணவத்தின் இழிந்த தன்மையுடன் கூடிய வலிமை, மிகவும் வெறுக்கத் தக்கது:-** பல புருடர்களுடன் சேர்ந்து வாழும் விபசாரப் பெண்ணாணவள், அவரவர்களுடன் கூடிவாழும் பொழுது, அவரவர்க்குத் தன்னுருவத்தைக் காட்டியே வாழ்வாள். ஆணவமாகிய பெண்ணோ, எண்ணற்ற ஆன்மாக்களாகிய கணவர்களுடன் சேர்ந்து இருந்தாலும், அவர்களுக்குத் தனது வடிவத்தைக் காட்டாத இழிந்த தன்மையுடையவளாகும்.

அஃதாவது ஆணவமலம் எண்ணற்ற ஆன்மாக்களுடன் சேர்ந்து இருந்தாலும், அவற்றிற்குத் தனது வடிவத்தைக் காட்டாது. எனவே ஆணவத்தை நீக்குவதற்குரிய வழிவகைகளை நாடுவதே ஆன்மாக்களுக்குரிய கடனாகும்.

**ஆணவமே ஆன்மாக்களின் அறியாமைக்குக் காரணம்:-** ஆன்மாக்கள் பிறவியை அடையமுன் உடம்பு முதலியன

இன்றிக்கேவல நிலையிற் தனியே கிடக்கின்றன. அந்நிலையில் ஆன்மாக்களுக்கு அறிவு இருந்தபோதும், ஆணவத்தின் மறைப்பினாற் செயலின்றிக் கிடக்கின்றன. இந்நிலையில் இறைவன் ஆன்மாக் களுக்குத், தனு, கரண, புவன, போகங்களைக் கொடுத்து, அவற்றின் அறிவைத் தொழிற்படச்செய்கின்றான்.

இந்நிலையில் "இறைவன் ஒருவன் உளன். நம்மைப் பீடித்திருப்பவை மலங்கள். அவற்றின் நின்றும் நீங்கி நித்திய இன்பத்தை அடைவதே நாம் அடையவேண்டிய நிலை" ஆகியவற்றை, ஆன்மாக்கள் அறியாவண்ணம் அவற்றை மயக்கி வஞ்சித்து நிற்பது ஆணவமலமே.

**ஆணவமலம் ஆன்மாவின் குணமல்ல குற்றமே:-** ஆணவமலம், நெல்லில் மணியை மூடியிருக்கும் உமியும், செம்பிற் களிம்பும்போல, ஆன்மா என்றுள்தோ அன்றே, ஆன்மாவைத் தொடர்ந்திருக்கின்றது. ஆணவமலத்தின் சேர்க்கையினாலேயே, ஆன்மா துன்பத்தை அனுபவிக்கிறது.

அவ்வாறு நிகழ்வதற்கு ஆணவம் ஆன்மாவின் குணமென்று கருதுவோமாயின், நெருப்பின் குணமாகிய சூடு அழிந்தால், குணமாகிய நெருப்பும் அழிதல்போல, ஆன்மாவின் குணமென்று சொல்லக்கூடிய ஆணவமலம் முத்திநிலையில் திருவருளால் கெடும்போது, ஆணவத்தைக் குணமாகக்கொண்ட ஆன்மாவும் கெடுதல் வேண்டும். ஆனால் முத்திநிலையில் ஆணவமலம் நீங்க, ஆன்மா தனியே பேரின்பத்தை நுகருவதால், ஆணவம் ஆன்மாவின் குணமென்று கொள்ளமுடியாது. எனவே ஆணவம் இயல்பாக ஆன்மாவின் அறிவை மயக்குகின்ற ஓர்குற்றமே.

**ஆணவத்தின் சேர்க்கை இடையில் வந்ததென்பது பொருந்தாது:-** ஆணவமலம் ஆன்மாக்களை அநாதியே பற்றி நில்லாது இடையிலே வந்து சோந்தது என்று கொள்ளின், ஆணவம் ஆன்மாவுடன் இடையில் வந்து சேர்வதற்கு ஓர் காரணமுமில்லை. இறைவனே ஆணவத்தை ஆன்மாவுடன் இடையில் கூட்டி வைத்தான் என்று கூறுவோமானால், இறைவன் ஆன்மாக்களுக்குத் துன்பஞ் செய்யக் கருதான். ஆணவமலம் தானாகவே வந்து ஆன்மாவைச் சேர்ந்ததோ என்றால், அது அறிவற்ற சடப்பொருள் ஆதலால், தானாகவே அது ஆன்மாவோடு சேரமுடியாது. ஆன்மா அறிவுடைய

பொருள் ஆதலால், தனக்குத் துன்பத்தைச் செய்கின்ற ஆணவமலத்தைத், தானாகவே அணையாது. ஆகவே ஆணவத்தை ஆன்மாவுடன் சேர்த்து வைப்பதற்குக் காரணங்கள் ஒன்றும் இல்லை. ஆதலால் ஆணவம் ஆன்மாவை இடையில் வந்து சேர்ந்தது என்று கூறுதல் பொருந்தாததாகும்.

**ஆணவத்தின் வலியைக் கெடுத்தற்குக் கருவியாகப் பாவிக்கக் கூடியது மாயையேயாகும்:-** அதனைக் கருதியே கருணைக் கடலாகிய இறைவன், மாயையின் நின்றுந் தோற்றுகின்ற தனு, கரண, புவன, போகங்களைக் (உடம்பு, அந்தக்கரணங்கள் பூமி போகங்களைக்) கொடுத்தருளி இருக்கிறார். ஆன்மாக்கள் அவற்றை நன்முறையில் அனுபவித்து, ஞானத்தைப் பெறமுயன்று, ஆணவத்தின் வலிகெடுமாறு செய்தல் வேண்டும். அவ்வாறு முயன்று ஞானத்தைப் பெறாவிடின், ஆணவம் ஒருபோதும் ஆன்மாவை விட்டுநீங்காது.

**ஆணவம் வலிகெடுதற்கு மாயாகன்ம மலங்கள் உதவுகின்றன:-** பேரருட் கடலாகிய சிவபெருமான், ஆணவப் பிடியினின்றும் ஆன்மாக்கள் சிறிது சிறிதாக விடுதலையாகி, அவை கடைத்தேறும் பொருட்டு, மாயை கன்மங்களாகிய இரண்டு மலங்களையும், இடையில் அவற்றோடு சேர்த்து வைக்கிறார். இவ்வாறு சேர்த்து வைத்தலின் நோக்கம், ஆன்மாக்களைப் பிணித்துள்ள ஆணவமலத்தின் வலிமையைக் கெடுத்தலேயாம். அதற்கேற்ப ஆன்மாக்கள் பிறவிதோறுஞ் செய்கின்ற கன்மங்களாகிய நல்வினை தீவினைகளுக்கேற்ப, மாயையின் நின்றும் தோற்றுகின்ற தனு, கரண, புவன, போகங்களை அவற்றிற்குக் கொடுத்தருளுகிறார். ஆன்மாக்கள் அவற்றை அனுபவிக்கும் பொழுது, "முன்னைய பிறவிகளிற் செய்துகொண்ட புண்ணிய பாவங்களுக்கேற்ற பயன்களை அடைகின்றன. புண்ணியஞ் செய்தவர்கள் சிறந்த வாழ்க்கையைப் பெற்று உயர்ந்த போகங்களை அனுபவிப்பார்கள். பாவிகள் பேயுடம்பும் வறிய வாழ்க்கையும் பெற்று வருந்துவார்கள்" என்பதையும் அவைகள் தெளிகின்றன. அவ்வித அறிவுத் தெளிவினால் புண்ணியத்தில் விருப்பும், பாவத்தில் வெறுப்பும் உடையவராய்ச் சிவபுண்ணியங்களைச் செய்து வாழும். அவ்விதம்

வாழவே ஆணவத்தின் வலிமை சிறிது சிறிதாகக் குறையத் தொடங்க, அறிவு விளக்கம் பெறும் அதன் பலனாகத் திருவருளை நாடும். அதன்பயனாக ஞானஒளி தோன்ற ஆணவவலி அடங்கும்..

சூரியனது ஒளி தோன்றும் வரையும் இருளினைச் சிறிது விலக்கித் தொழில் செய்ய உதவுகின்ற கைவிளக்குப் போலத் திருவருளினால் ஞான ஒளிதோன்றி, ஆணவத்தின் வலிமை கெடும் வரைக்கும், மாயை கன்மங்கள் ஆகிய இருமலங்களும், ஆணவ இருளினிடையே, உயிர்களின் அறிவு சிறிது விளக்க முற்று, ஆணவப் பிணியின் தன்மையை அறிதற்குரிய அறிவை- ஆணவ இருளின் வலிமையைச் சிறிது குறைக்கத்தக்க அறிவைக்- கொடுக்கின்றன எனலாம்.

**இருள் மலங்களின் தன்மைகளை மீட்டுந் தொகுத்துப் பார்ப்போம்:-** உள்பொருள்களாகிய பிறவித்துன்பம், வீட்டின்பம் மும்மலங்கள் சிவம் ஆகிய ஆறனுள் ஆணவம் கன்மம் மாயை ஆகிய மலங்கள் அடங்குகின்றன. அவற்றின் ஆணவமலம் உலகிலுள்ள எல்லாப் பொருள்களையும் மறைக்கிற இருளைப் போல, உயிர்களின் அறிவுவிளக்கம் முழுவதையும் மறைக்கிறது. இருளானது உலகிலுள்ள எல்லாப்பொருள்களையும் மறைத்தாலுந் தன்னைக் காட்டிநிற்கும். ஆனால் ஆணவமலமோ, தன்னையுங் காட்டாது. தான் மறைத்துநிற்கும் பொருள்களையுங் காட்டாது. அதனாலே ஆணவமலம் இருளினும் பாக்கக் கொடியது என்பர். இவ்வாணவமலம் உயிர்களின் அகத்தில் உள்ளொளியாக விளங்குஞ் சிவத்தைச் சாராது, அநாதியே உயிர்களைப் பற்றி நிற்கிறது. அது ஆன்மாக்களுக்குத் தன்னைக் காட்டாது. அவை மெய்யுணர்வு பெறாது மயக்கத்தைப் பொருந்தி நிற்குந் தன்மையைக் கொடுக்கிறது.

ஆணவமலப் பிடிப்பு இன்றேல், அவ்வான்மாக்களுக்குப் பிறவித்துன்பம் இல்லையாகும். ஆணவமலமானது ஆன்மாவின் குணமல்ல. ஒர்குற்றமே. அது ஆன்மாக்களை இடையில் வந்து சேராது அநாதியே பற்றி நிற்கும் ஒன்றாகும். ஆன்மாக்கள் தமக்குக் கொடுக்கப்படுகின்ற தனு கரண புவன போகங்களை அனுபவித்து, அதன் பேறாய் ஞான ஒளியைப் பெறாவிடின், ஆணவம் ஒருபோதும் அவைகளை விட்டு நீங்காது.

இராக் காலத்தில் வேலைசெய்வதற்கு இருளை நீக்கவிளக்கு உதவுவது போல, இறைவனின் ஞானஒளி தோன்றும் வரைக்கும், ஆணவத்தின் வலிமையைச் சிறிது விலக்க மாயையும் கன்மமும் ஆன்மாக்களுக்குச் சிறிது அறிவு விளக்கம்பெற உதவுகின்றன எனலாம்.

அன்பர்களே! மும்மலங்களில் மிகவுங் கொடிதாகிய ஆணவமலத்தின் கொடுமையை இவ்வதிகாரம் விளக்குகிறது. அது எமது அறிவை மறைத்துச் சிவத்தை உணராமற் தடுத்து, உலகியலில் எம்மை அழுத்திப் பிறவித்துன்பங்களில் மூழ்க வைக்கிறது. இத்துன்பங்களினின்றும் நாம் நீங்குவதற்காகவே கருணைக்கடலாகிய சிவபெருமான் நாஞ்செய்யுங் கன்மங்களுக்கேற்ற தனு கரண புவன போகங்களை நமக்குத் தந்துள்ளார். அவை, கத்தியாகிய வெட்டுங்கருவி போல, நன்மைக்கும் பயன்படும் தீமைக்கும் பயன்படும். நாம் அக்கத்தியை நன்மையான காரியங்களுக்குப் பயன்படுத்தி நற்பயன்பெறுதல்போலத், தனு கரணம் முதலியவற்றை விடியும்வரை வேலைசெய்ய உதவும் விளக்குப் போலப்பாவிக்க, ஆணவமலத்துன்பத்தின் நின்று விடுவதற்கேற்ற அறிவைத் தரும்; திருவருளை நாடவைக்கும்; அதனால் ஆணவத்தின் வலிமை குறையத் தொடங்கச் சிவஞானஒளி பிரகாசிக்கத் தொடங்கும். அதன் பேறாய்த்துன்பங்கள் நீங்கும் என்பதை உணர்ந்து, நமக்குத் தரப்பட்ட தனு கரண புவன போகங்களை நல்வழியிற் பயன்படுத்துவோமாக.

## திருவருட் பயனின் வசனரூபம்
## நான்காம் அதிகாரம்
## ஆணவமலத்தின் வலியைக் கெடுத்துப் பேரின்பத்திற்கு வழிப்படுத்துகிற திருவருளின் தன்மைகள் பற்றிக் கூறும்அருளது நிலையாகும்

**திருவருளின் மேன்மை:-** ஒருவருக்கு ஒருபொருள் மிகவும் இன்றியமையாததாகத் தேவைப்படும் பொழுது அவருக்கு அப்பொருளிலும் மேலானபொருள் வேறொன்றும் இல்லாதது போலத்,

திருவருளையே நாடிநிற்கும் ஒருவருக்குத் திருவருளின் மேம்பட்ட பொருள் உலகிலேயே இல்லை எனலாம். இதனால் திருவருளின் மேன்மை தெளிவாகிறது.

சூரியனின் ஒளியின்றி உலகம் இயங்காதது. போலச் சிவபெருமானது திருவருள் இன்றி ஆன்மா இயங்கி ஒருபொழுதும் ஞானத்தைப் பெறமுடியாது. வித்து ஒன்று முளைத்துப் பயன்தர வேண்டுமாயின், அதற்கு நீரின்துணை மிகவும் அவசியமாகும். நீரின் குளிர்மை நிலத்தை நெகிழச் செய்து, அதனிடமுள்ள வித்தையும் முளைக்கச் செய்து பயன்பெறவைக்கிறது. அதுபோல ஆன்மாவாகிய வித்து பக்குவப்பட்டு நல்விளைவு தருவதற்குத், திருவருளாகிய நீர் மிகவும் இன்றியமையாததாகும். உலகில் வாழும் மனிதர்களுக்குச் சிற்சில வேளைகளிற் சிற்சிலபொருள்கள் மிகமிக இன்றியமை யாததாகத் தோன்றலாம். வனாந்தர மார்க்கமாகப் பயணஞ்செய்யும் ஓர் செல்வனுக்கு, அக்காலம் குடிநீர் மிகமிகத் தேவையான பொருளாகும். அப்பொழுது அங்கு அருமையான நீரைத் தேடிப் பெறுவதற்குத் தன்னுடைய பொருள்கள் யாவற்றையும் கொடுத் தேனும், நீரை வாங்கிப் பருகித், தனது தாகத்தைத் தீர்க்கமுயல்வான். அதுபோல உலகப்பற்றில் அமிழ்ந்தி வருந்தும் ஒருவன், துன்பத்தை நீக்கிப் பேரின்பத்தை அடைய விரும்புவானாயின், தன்னுடைய பொருள்கள் யாவற்றையும் அற்பமாக மதித்துத், திருவருளைநாடி முயற்சித்துப் பேரின்பத்தைப் பெறுவான் என்னும் இவ் எடுத்துக்காட்டு மேலும் திருவருளின் மகிமையை எடுத்து விளக்குவதாகும்.

**திருவருளை நாடி நிற்போருக்குத் திருவருள் பயன்படும் வகை:-** உலகின் கண்ணே உள்ள உயிர்கள், உணவு முதலிய வற்றை ஈட்டவுந் துய்க்கவும் காரணமாக இருக்கின்ற சூரியனது ஒளியைப் போல, ஆன்மாக்கள் வினைகளைச் செய்து, புண்ணிய பாவங்களை ஈட்டவும், அவற்றின் காரணமாகவரும் இன்பதுன்பங்களை அனுபவிக்கவுஞ் செய்கின்ற திருவருள், ஆன்மாக்களைப் பற்றி நிற்கும் ஆணவமலத்தின் ஆற்றலைக் கெடுத்து, அவற்றின் ஞான சத்தியை விளக்கமுறச் செய்யும் ஞானச்சுடராய், அவ்வான்மாக்க ளிடம் நிறைந்து நிற்கும்.

**திருவருள் ஆன்மாவிற்கு அறிவைப்புகட்டும் முறை:-** உயிர்களோடு சேர்ந்து நிற்கும் உடம்பு முதலியன அறிவற்ற

சடப்பொருள்களாகும். ஆகையால் அவைதாமே அறிவன அல்ல. ஆணவ மலத்தால் கட்டுண்டு நிற்கும் ஆன்மாக்கள், தானாக ஒன்றையும் அறியமாட்டா. ஆனால் உயிருக்கு உயிராக நின்று இயக்குந் திருவருள் அறிந்து அறிவிக்க அவை அறியுந் தன்மையுடையனவாம்.

இறைவன் உயிர்களுக்கு அவைகளின் அறிவிற் கறிவாகிநின்று உணர்த்துதலேயன்றி, உயிரினால் உணரப்படும் எல்லாப் பொருள்களிலும் நிறைந்து நின்று, உயிர்கள் அப்பொருள் களை உணரும்படி செய்பவனுமாவான்.

***திருவருளை அறியாமல் ஆன்மாக்கள் மயங்கிக் கிடத்தற்குக் காரணம்:-*** ஆணவமலப் பிடிப்பினாற் தாக்குண்டு கிடக்கும் ஆன்மாக்கள், தாந்தங்கி வாழுவதற்கு, இன்றியமையாததாக வேண்டப்படுகின்ற திருவருளைத் துணையாகக்கொண்டு, பேரின்பப் பெருவாழ்வை அடைதலைவிடுத்து, மயக்கத்தைத் தருகின்ற உலகப் பற்றாகிய பெருங்கடலில் அமிழ்ந்தித், திருப்பாற்கடலிற் தங்கி வாழுகின்ற மீன்கள், தமக்கு ஆதாரமான பாற்கடலிலுள்ள பாலைப் பருகி உயிர்வாழ வேண்டும் என்ற உணர்ச்சியில்லாமல், மிகத்தாழ்ந்த தரமான சிறுபிராணிகளையும் பிடித்து உண்டு வாழுதல் போல, என்றுந் தமக்காதாரமான திருவருளை மறந்து மயங்குகின்றன. எனவே திருவருளை ஆன்மாக்கள் அறியாது மயங்குவதற்குக் காரணம் ஆணவமலமே.

பாற்கடலிலுள்ள மீன்கள் பாலைக்கண்டும் அது சிறந்த பொருள் என்று எண்ணாமல் வாழுதல் போல, ஆன்மாக்களும் திருவருளின் அருஞ் செயல்களைக் கண்டும் அதனை அடைந்து உய்யாமல் மயங்குகின்றன.

***திருவருளின் துணையை ஆன்மா அறியாமைக்குக் காரணம்:-*** வழிப்போக்கன் ஒருவன், தனக்குத் துணையாகத் தனக்குப் பின்னாற் தன்னைத் தொடர்ந்து வருகின்றவனை அறியாது, தான் செல்லவேண்டிய இடத்தையே, குறிக்கோளாகக் கருதிக் கொண்டு செல்வதைப் போல, உலகஇன்பங்களையே குறிக் கோளாகக் கொண்டு அவற்றைப் பெறுவதிலேயே பெருமுயற்சி செய்கின்ற ஆன்மாக்கள், தமக்கு உயிர்க்குயிராய்த் தம்முடன் நின்று உணர்த்தும் திருவருளை அறிவதில்லை.

## நான்காம் அதிகாரம் அருளதுநிலை

**திருவருளின் நடத்துதலையும் ஆன்மாக்கள் அறிவதில்லை:-** தமக்கு முதலாய் நின்று, தம்மைச் செலுத்துகின்ற உயிர்களை, அறியாத மெய்,வாய், கண், மூக்குச் செவிகளாகிய ஐம்பொறிகளைப் போல, உயிர்களுந் தமக்கு உயிர்க்குயிராய் நின்று இயக்குகின்ற திருவருளை அறியாதனவாய் இருக்கின்றன.

நடத்தல் ஓடல் முதலிய தனது காரியங்களைச் செய்தற்குத் தமக்குத் தாமே ஆதாரம் என்று எண்ணுகிறவர்களின் அறியாமையைப் போல, ஆன்மாக்கள் திருவருள் தமக்கு ஆதாரமாய் இருக்கிற தென்பதையும், தாந்திருவருளினாலேயே தொழிற்படுகிறோம் என்பதையும் அறிவதில்லை.

**திருவருளைத்தேடி ஆன்மாக்கள் அலைவதற்குக் காரணம்:-** பிரத்தியட்சமாக விளங்கி, எங்குந் தெரிகின்றமலையின் மீது தாம் இருந்து கொண்டே, மலை எங்கு இருக்கின்றது? என்று மலையைத் தேடி அலைகின்றவர்களைப்போலவும், தமது வாழ்க்கைக்கு இன்றியமையாது உதவிக்கொண்டே இருக்கின்ற பூமியில் இருந்துகொண்டே, பூமி எங்கே இருக்கின்றது? என்று, பூமியைத் தேடி அலைகின்றவர்களைப் போலவும், எல்லாப் பக்கங்களிலுஞ் சூழ்ந்து அகன்று, எல்லாப் பொருள்களையும் அடக்கியிருக்கின்ற ஆகாயத்தில் இருந்துகொண்டே, ஆகாயம் எங்கே இருக்கின்றது? என்று ஆகாயத்தைத் தேடி அலைகின்றவர்களைப் போலவும், எங்கும் நிறைந்து உயிர்கள், உயிர்வாழ்வதற்கு ஆதாரமாக விளங்குந் திருவருளில் இருந்து கொண்டே திருவருளைத் தேடுபவர்கள், ஞானசூனியநிலையைப் பெற்ற தற்கேடர்களேயாவர். அவ்வாறிருந்தற்குக் காரணம் அறியாமையே.

**திருவருளை ஆதாரமாகவுடைய ஆன்மாக்கள் வருந்து வதற்குக்காரணம்:-** நல்ல தண்ணீரிடையே நிற்கின்ற ஒருவன், தண்ணீர்த்தாகம் உண்டாகும் போது, அந்த நீரைப் பருகித் தாகத்தைத் தீர்க்கமுடியாமல், குடிநீரைத்தேடி, வேறிடஞ்சென்று அலைதலைப்போலவும், 'எப்பொழுது இருள்நீங்கி விடியும், தான்வேலைக்குச் செல்லலாம் என்று எதிர்பார்த்து, இரவில் படுக்கையில் உறங்கும் ஒருவன், பொழுதுவிடிந்து இருள்நீங்கி இருந்தும், படுக்கையை விட்டெழுந்து தான் கண்விழித்துப் பாராமல், இன்னும் விடியவில்லையே என்று தடுமாறுவதைப் போலவும், தனக்கு

ஆதாரமாய் உய்யும் வழியில் நடத்திச் செல்லக்காட்டிய திருவருளில் இருந்து கொண்டே, திருவருளை அனுபவித்து உய்யவழிதெரியாமல் வருந்துகின்ற ஆன்மாக்களின் நிலை, அந்தோபரிதாபமே. அதற்கு அவற்றின் அறியாமையே காரணம்.

**திருவருளை ஆன்மா அறிதற்குரிய வழி:**~ மனத்தை உலக இன்பங்களின் வயப்பட்டு, உலகபோகங்களிலே நாடும் போக்கை அடக்கி, ஒருவழிப்பட்ட மனத்துடன் ஞானநூல்களைக் கேட்டுத் திருவருளை நாடுதலே, அதற்குரியவழியாகும்.

இவ்வாறன்றி உலக போகங்களிலே ஈடுபட்டுச் சிற்றின்பத்தை நாடிநின்று, ஞானநூல்களைக் கேட்போமாயின், திருவருளை அடையும் நெறிகைகூடாது. வீட்டின்பத்தை அடையும் நெறிகைகூடாது. இந்நிலை பாற்குடத்தின் மேல் இருக்கும் பூனைக்குச் சமமாகும்.

பாற்குடத்தின் மேல் இருக்கும் பூனை, பாலைப் பருகாது, இறப்பில் ஓடும் கரப்பொத்தான் பூச்சியைப் பிடிக்கத்தாவிப் பாய்ந்து இலக்குத் தவறி, பானையையும் கவிழ்த்துவிட்டுக் கரப் பொத்தானையும் தவறிப்போகவிட்டுத் தானுங் கீழேவிழுந்து ஏமாற்றம் அடைதலைப் போன்றதே, திருவருளில் தங்கியிருக்கின்ற ஆன்மாக்களின் நிலையாகும். திருவருளில் தங்கியிருக்கின்ற ஆன்மா. மனதை ஒரு வழிப்படுத்தித் திருவருளைநாடி வீடுபேறடைய முயலாது, பூனை பாலைப்பருகாது கரப்பொத்தான் பூச்சியைப் பிடிக்கமுயல்வது போல, உலக இன்பங்களை நாடிஅலைகிறது. எனவே ஒருவழிப்பட்ட மனதுடன் ஞானநூலைக் கேட்டு, அதன் வழி நின்று திருவருளை அடைதலே வேண்டற் பாலதாகும்.

ஞானநூல்களை ஒருவழிப்பட்ட சிந்தையுடன் கேளாமல் அடையுங் கேட்டிற்குத் திருவிளையாடற் புராணத்தில், சோமசுந்தரப்பெருமான் மீனாட்சியம்மையாருக்கு, வேதஇரகசியப் பொருளை ஓதும்போது, அம்மையார் கருத்தின்றிக் கேட்டதாலே, வலைச்சியாகப் பிறக்க நேரிட்ட வரலாறும், இயக்கப் பெண்களுக்குச் சிவபெருமான் அட்டமாசித்திகளை ஓதும்பொழுது, அவர்கள் தவறிளைத்ததால் பட்டமங்கையில் ஆயிரம் வருடம் கற்களாகக் கிடக்க நேரிட்ட வரலாறும், சான்றுகளாகும்.

**திருவருளை அறியாது வாழும் ஆன்மாக்களின் நிலை:**~ அநாதி தொடக்கம் இற்றைவரையுந் திருவருளோடு கலந்துநின்று,

பற்பல பிறவிகள் தோறும் ஈட்டிக் கொண்டவினைகளின் பயனால், எண்ணற்ற இன்பதுன்பங்களைஅனுபவித்து வருகின்ற ஆன்மாக்களின் உள்ளத்தில், திருவருளின் இன்றியமையாத உணர்ச்சி தோன்றி, வலுவடையாமல் இருக்குமேயானால், அந்நிலை வருந்தத்தக்கதாகும். அவர்களுக்கு வீடுபேறு என்பது எட்டாக்கனியாகும்.

எல்லாஞ் சிவன் செயல் என்றஎண்ணம் வலுப்பெறும் பொழுதுதான், திருவருளின் உணர்ச்சியுண்டாகும் ஒருவன் பிறவி எடுத்ததன் பயன், திருவருளை அறிதலும் அதனை அடைதலுமேயாம்.

**இதுவரை ஆராய்ந்த அருளது நிலையைத் தொகுத்து மீட்டுநோக்குவாம்:–** உலக வாழ்க்கையில் வாழும் ஒருவருக்கு, மிகமிக இன்றியமையாது தேவைப்படும் ஒருபொருள்போலத், திருவருளை விரும்பி நிற்கும் ஆன்மாக்களுக்குத் திருவருளே மிகமிக மேலான பொருள்ஆகும்.

திருவருள், சூரியனது ஒளிபோல, எல்லாஇடங்களிலும் பிரகாசிக்கும் இயல்பினை உடையதாய், அறிவை அறிந்து அறிவித்து, ஆன்மா அறிவைப் பெற உதவுகிறது. திருப்பாற் கடலிலுள்ள மீன்கள், அக்கடலிலுள்ள பாலைப்பருகாது, சிறுபிராணிகளைத் தேடித்திரிந்து புசித்து வாழுதல்போலத், திருவருளிற் தங்கியிருக்கின்ற ஆன்மாக்கள், அத்திருவருளின் வயப்பட்டுப் பேரின்பத்தை அடைய முயலாமல், உலகப் பற்றிலே அமிழ்ந்தி அலைகின்றன.

பூமியானது எல்லாப் பொருள்களையுந் தாங்கிநிற்பது போலத், திருவருளும் எல்லா ஆன்மாக்களைத் தாங்கி வழிநடத்துகிறது. திருவருள் எல்லைக்குள் தங்கி இருக்கின்ற ஆன்மாக்களுக்குத் திருவருளைத் தேடி அலையவேண்டியதில்லை. திருவருளிலேயே தங்கியிருந்தும், உய்யவழி தெரியாது வருந்துவதற்கு, அறியாமையே காரணமாகும். மனதை ஒருவழிப்படுத்தி அமைதியோடு ஞானநூல்களைக் கேட்டு அதன்வழி ஒழுகுவதே, திருவருளை அறியும் வழியாகும். ஆன்மா தீர்க்கமாக அடையவேண்டிய பலன் திருவருளை அறிதலும், அதனை அடைதலுமேயாம்.

அன்பர்களே! அடியார்களுக்கு மிகமிக உயர்ந்த பொருளாகும், இறைவனது கருணையாகிய திருவருள், எமக்கு ஞான அறிவினைக் கொடுத்து எப்பொருளையும் தாங்கி நிற்கும் நிலம்போல, எங்களைத் தாங்கிநின்று வழி நடத்துவதனால், நாம்

அடையவேண்டிய தீர்க்கமான பலன். திருவருளை அறிதலும் அதனை அடைதலுமேயாம் என உணர்வோமாக.

## திருவருட்பயன் வசனரூபம்

## ஐந்தாம் அதிகாரம்

## தோன்றாத் துணையாக இருந்துவரும் திருவருளே ஞானவடிவாகி வருகின்ற குருவினது தன்மை பற்றிக்கூறும் அருளுருநிலைஆகும்.

**திருவருளே குருவடிவாக வந்து ஆட்கொள்ளுதல்:–** ஆன்மாக்களின் புறக்கண்களுக்குத் தோற்றாது. அவற்றுடன் கலந்து நின்று, படைத்தல் காத்தல் அழித்தல் மறைத்தல் ஆகிய தொழில்களை ஆற்றிவருகின்ற திருவருளே, அருளல் ஆகிய தொழிலைச் செய்தற்குக் கண்களாற் காணப்படும் குருவடிவத்துடன் தோன்றி, அவற்றை ஆட்கொள்ளுகிறது.

இருவினை ஒப்பு மலபரிபாகம் என்னும் நிலையை ஆன்மாக்கள் எய்துதலும், அவற்றின் ஆணவவலி கெடத் திருவருட்சத்தி பதிந்து ஞானந்தோன்றும். ஆயினும் அந்த ஞானம் தானாகவே விளங்கமாட்டாது. அஞ்ஞானத்தை விளங்க வைக்கத் திருவருளே குருவடிவாக எழுந்தருளுகிறது.

**திருவருளே ஆணவத்தை வலிகெடுத்து நீக்க வல்லதாகும்:–** ஒருவனுக்கு இயல்பாகவே உடம்பிலுள்ள நோயை, அவனோடு சேர்ந்து வாழும் மனைவி மக்களே அறிந்து, அவன் நல்வாழ்வு வாழ அதனை நீக்கவேண்டும் என்று விரும்புவார்கள். அவனோடு சேர்ந்து வாழாத பிறர், அந்நோயின் தன்மையை அவன் கூறினாலன்றி அறியமாட்டார்கள். அதைப்போல, உயிர்களைப் பற்றி நின்று வருந்தும் ஆணவமலநோயை, அறிந்து நின்று நீக்க வல்லது உயிருடன் கலந்து நிற்குந் திருவருளே ஆகும்.

**திருவருளாகுங் குருவடிவை அறியவல்லவர்கள்:–** படைத்தல். காத்தல், அழித்தல், மறைத்தல் ஆகிய நான்கு தொழில்களையும் ஆன்மாக்களுக்குத் தோற்றாவண்ணம் மறைந்து நின்று செய்தருளியவாறுபோல, அருளுந் தொழிலையும் தான் ஆற்றும்போது, ஆன்மாக்களுக்குத் தோன்றாவண்ணம் செய்தருளுவற்காக, மானிடவடிவம் என்னும் போர்வையாற் தன்னை

மறைத்துக் கொண்டுவந்த திருவருளே, குருவடிவாகி வந்தது என்று உலகோர் அறியமாட்டார்கள். தம்மைப்போன்ற மனிதர்களே என்று எண்ணுவார்கள்.

ஏனெனில் இறைவனை அறிதலும், ஞானாசாரியாரை அறிதலும், மலபந்தமுடையவர்களால் அறியமுடியாது. இறைவனை அடையவேண்டும் என்னும் பெருவிருப்புடன், தொண்டு செய்தொழுகும் மெய்யன்பர்களே, குருவடிவாய் எழுந்தருளிவரும் திருவருளினது தன்மைகளை உணருவார்கள். திருவருளை நினையாது வாழ்பவர்கள். குருவடிவாக வந்த திருவருளை மானிடரில் ஒருவர் என்றே எண்ணுவார்கள்.

திருப்பெருந்துறைக்குக் குதிரை வாங்கச் சென்ற திருவாதவூரடிகள், குருந்த மரநீழலில் வீற்றிருந்தருளிய குருவடிவை இறைவனாகவே கருதித் தம்மை ஆட்கொண்டருளவேண்டியமை, மெய்யன்பர்களுக்கே திருவருளாகிய குருவடிவம் தோன்றும் என்பதற்கு ஓர் ஆதாரமாகிய வரலாற்றுச் சான்றாகும்.

***பக்குவமில்லாதோர் குருவடிவையுந் திருவருளையும் அறியமாட்டார்கள்:-*** உலக போகங்களிலே வேட்கை உள்ளவர்களாய், ஆணவத்தால் மறைக்கப்பட்ட உணர்வினை உடையவர்களாய், ஞானமென்னும் அருளொளியை எய்தாதவர்களாய் உள்ளவர்கள், அறிவுமயமாகிய திருவருளினையும், திருவருளாகிய குருவடிவையும் அறியும் பக்குவம் இல்லாதவராவர். இவர்களுக்குக் குருவடிவு மனிதவடிவாகவே தோன்றும்.

திருப்பெருந்துறையிலுள்ள குருந்தமரத்தடியில் குருவடிவைக் கண்ட மெய்யன்பராகிய வாதவூரடிகள் இறைவனாகவே கருதிவழிபட, அவருடன் சென்ற ஏனையோர், பக்குவம் இல்லாத தன்மையினால், அவரை ஓர் சந்நியாசியாகவே கருதிப் பாண்டியமன்னனிடம் கூறிய வரலாறும் இங்குநோக்கத் தக்கதாகும்.

***திருவருளே குருவடிவாக வருவதற்குரிய காரணம்:-*** திருவருள் குருவடிவாக வருவது பக்குவான்மாக்களைத் தன்பால் ஈர்த்து ஆட்கொள்வதற்கேயாம். பழக்கப்படாத காட்டுயானையைப் பிடிக்க விரும்புகிறவர்கள், பழக்கப்பட்ட யானை ஒன்றை முன்னே நடாத்தி, அதன் மூலம் புதிய யானையை வசப்படுத்திப் பிடிப்பார்கள். அவ்வாறன்றி நேரே சென்று பிடிக்க முயன்றால் அவ்யானையைப்

பிடிக்க முடியாத நிலை ஏற்படும். அதுபோல மக்களாகிய எங்களை ஆட்கொள்ள வருந்திருவருள், தமது பேரொளி வடிவந்தோன்றாது, எம்மோடொத்த மானுட வடிவத்தைத் தாங்கியே, வருகிறது அவ்வாறன்றி உண்மையான பேரொளிவடிவத்திற் தோன்றினால், நாம் அஞ்சிக் குருவை அடைய அஞ்சுவோம். குருவடிவாய் வந்ததன் பயன் கிட்டாமற் போகும். எம்மைப் போன்ற மானுடவடிவத்தில் வரும் பொழுதுதான், குருவை நண்ணிப் பயனடைவோம். அதனாலேயே திருவருள் எம்மைப் போன்ற மானுடவடிவில் குருவடிவாக வருகிறது.

பக்குவநிலையை அடைந்த மெய்யன்பராகிய வாதவூரடிகளை, ஆட்கொள்ளும் முகமாகத், திருவருள் அவரைப்போன்ற மானுடவடிவத்தையே தாங்கி, அவரது வரவை எதிர்பார்த்திருந்தமை, திருவருள் மானுடச்சட்டை தாங்கி வருவதற்கு ஓர் எடுத்துக் காட்டாகும்.

**குருவினாலாய பயன்:-** பக்குவான்மா ஞானஉணர்வினைப் பெறுவதே, குருவினாலாய பயனாகும். உயிர்கள் முற்றறிவினை உடையன அல்ல. அவை சிற்றறிவினை உடையனவே. பேரருள் வடிவாகிய குருவே, முற்றறிவினை உடையவராவர். அவர்க்கன்றி ஞானம் முற்றாகக் கைவராது. ஞானாசாரியாராகிய குருவின் மூலமே, சீடர்களுக்கு மெய்யுணர்வு கிடைக்கப் பெறுகிறது. சிற்றறிவினை உடைய நாம், பக்குவப்பட்டு ஞான உணர்வினைப் பெறுவதற்குக் குருவினது அருள் மிகமிக இன்றியமையாததாகும். ஞானநூல்களை ஞானாசாரியார் இன்றிக் கற்றால், உண்மைப்பொருள் விளங்காது.

நைமிசாரண்ய வாசிகளாகிய கண்ணுவ முனிவர் முதலானோர், வேதங்களை நன்குகற்றும், அவற்றின் உண்மைப் பொருள் விளங்காமையினால், மதுராபுரியிலுள்ள திருவாலவாயை அடைந்து, தட்சணாமூர்த்தியை வணங்கி விரதம் அனுட்டித்து வேண்டுதலும், எம்பெருமான் குருமூர்த்தியாக எழுந்தருளி உண்மைப் பொருள்களை அவர்களுக்கு விளக்கிய திருவிளையாடற் புராணவரலாறு குருவினது பயனை விளக்க நல்ல எடுத்துக் காட்டாகும்.

**குருவினது நயனதீட்சை:-** பாம்பினாற் கடியுண்டு நஞ்சேறிய ஒருவனது பாம்புகடித்த கடிவாயிலில், பாம்புக்குப் பகைவனாகிய

கீரியை நேரே கொண்டுவந்து தீண்டச் செய்தாலும், ஏறிய பாம்பின் விஷம் இறங்காது. ஆயின் மந்திரவாதி ஒருவன் தன்னைக் கீரியாகப் பாவனை செய்து, மந்திரத்தை ஜெபித்துத், தனது பார்வை யினாலேஅந்தநஞ்சை இறக்கி அவனைச் சுகப்படுத்துகிறான். அதே போலத் திருவருளும் ஆன்மாவைப் பிணித்துள்ள ஆணவமல நோயைத்தாம் நேரே வந்து போக்காது, பாம்பின் விடத்தை நீக்க, மந்திரவாதி தன்னைக் கீரியாகப் பாவனை செய்வது போலத் தம்மைக் குருவடிவாக மாற்றி, மந்திரவாதியின் பார்வை போலத்திருவருள் நோக்கஞ் செய்தலாகிய நயனதீட்சையைச் செய்து, ஆன்மாவின் ஆணவமலப் பிணியை நீக்கி, வீட்டின்பத்தைக் கொடுக்கிறது.

கீரி நேரே வந்தாலுங், கீரியாகத் தன்னைப் பாவிக்கின்ற மந்திரவாதியின் பார்வையினாலன்றி நஞ்சு நீங்காது, அதுபோலத் திருவருள் இருந்தாலும், திருவருளின் வடிவாகிய குருவின் பார்வையாலன்றி ஆணவப்பிணி நீங்காது.

***திருவருள் மூவகை ஆன்மாக்களுக்கும் அருள்செய்யும் முறை:-*** மூவகை ஆன்மாக்களுள், ஆணவமலப் பிடிப்பொன்றே யுடைய விஞ்ஞானகலருக்கு, அவர்களின் அறிவாகிக்கலந்து நின்று அவர்களின் ஆணவமலப் பிடிப்பை நீக்கி அருளுகிறார். ஆணவமும் கன்மமுமாகிய இருமலங்களை உடைய பிரளயாகலருக்குப் பக்குவநிலை நோக்கி, மான்மழுநீலகண்டம் ஆகிய பொருந்திய உருவத்திருமேனியுடன் எழுந்தருளிவந்து, அவர்களின் மலங்களை நீக்கி ஆட்கொள்ளுகிறார்.

மும்மலங்களையுமுடைய சகலரில் பக்குவநிலையடைந் தவர்களுக்குத், தாமே மானுடச் சட்டை தாங்கிக் குருவடிவாக வந்து, மும்மலங்களையும் நீக்கி ஆட்கொள்ளுகிறார். திருப்பெருந்துறையில் மாணிக்கவாசகரை ஆட்கொண்டமுறை இதுவேயாகும்.

**இறைவனே குருவடிவாக எழுந்தருளுதல்:-** ஆன்மாக்களாகிய நாம் அடைய வேண்டிய இறுதிநிலை வீட்டின்பமே. இவ்வீட்டின்பத்தை இறைவன் ஒருவனாலேயே நாம் அடையமுடியும். வீட்டின்பத்தை அருளுகின்ற முற்றறிவினையுடைய சிவபெருமானே, ஆன்மாக்களின்மேல், இயல்பாகவேயுள்ள கருணையினால்,

அவர்களை ஆட்கொள்ளும்படி குருவடிவாக எழுந்தருளுகிறார்.

**குருவடிவாகிவரும் இறைவனே ஞானத்தைக் கொடுத்தருளுகிறார்:-** சூரியகாந்தக்கல்லு நெருப்பை வெளிப்படுத்திக் காட்டுவதாயினும், அக்கல்லை ஓர் நிழலின் கீழ்வைத்து, அதன்கீழ் பஞ்சை வைத்தால் நெருப்பு வெளிப்படாது. அக்கல்லைச் சூரியஒளியின் கீழ்வைத்து அதன்கீழ் பஞ்சை வைத்தாலே, நெருப்பு வெளிப்பட்டுத் தோன்றி எரியும். இதனாற் சூரியகாந்தக் கல்லு, சூரியனுக்கு முன் எதிர்ப்பட்டாற்றான், நெருப்பை வெளிப்படுத்து மென்பது புலனாகிறது. அது போலச் சூரியகாந்தக்கல்லை ஒத்த பக்குவமுடைய ஆன்மா, சூரியனை ஒத்த திருவருளாகிய குருவருளுக்கு முன்னாகும் நிலையிற்றான், நெருப்பாகிய சிவஞானத்தைப் பெறும் என்பது பெறப்படுகிறது. எனவே இறைவன் பக்குவான்மாக்களுக்குக், குருவடிவாய் எழுந்தருளிப் பதிஞானத்தைக் கொடுத்து, வீட்டின்பத்தை அருளுகிறார் என்பது தெளிவாகும்.

**திருவருளாகிய குருவினது தன்மைகளை மீட்டுத் தொகுத்துப் பார்ப்போம்:-** ஆன்மாக்களுக்குத் தோன்றாத்துணையாக நின்று அருள்புரிகின்ற திருவருளே, குருவடிவாகத்தோன்றி, அவ்வான்மாக்களை நீங்காமல் நின்று அருள் புரிகின்றது. ஒருவனுக்குற்ற நோயை அவனோடு கூடிவாழ்கின்றவர்களே அறிய முடிவது போல, ஆன்மாக்களின் உள்நோயாக விளங்கும் ஆணவ மலப் பிணியை ஆன்மாக்களுடன் கலந்து, உயிருக்குயிராக விளங் குந் திருவருளே, அறியுந்தன்மை உடையதாகும். அத்திருவருளானது, ஏனைய நான்கு தொழில்களையும் மறைந்து நின்று செய்தல்போல, அருளளாகிய தொழிலையுஞ் செய்யும்பொழுது, அருளுதல் தோன்றா வண்ணம் குருவடிவாகி அதில்மறைந்து நின்று அவ்வருளலைச் செய்கிறது.

ஆணவ மலத்தாற் பீடிக்கப்பட்டுள்ள ஆன்மாக்கள், திருவருளையும், திருவருள் வடிவாகிய குருவடிவையும் அறியமாட்டா. அந்நிலையில் பக்குவப்பட்ட ஆன்மாக்களை ஆட்கொள்வதற்குப், பழக்கப்படாத விலங்குகளைப் பிடிப்பதற்குப், பழக்கப்பட்ட விலங்குகளைத் துணையாகக் கொள்ளுதல் போலத்திருவருளே குருவடிவாக மானுடவடிவத்தில் வருகிறது.

பாம்பினாற் கடிக்கப்பட்டவரின் நஞ்சு, கீரிப்பிள்ளை நேரே

வந்து கடிவாயிலின் கண்ணே தீண்டினாலும் நீங்காது. அந்த நஞ்சு, கீரியாகத் தன்னைப் பாவனை பண்ணிப் பார்வை பார்க்கின்ற மந்திரவாதியினாலேயே நீங்குகிறது போல, ஆன்மாக்களைப் பீடித்திருக்கின்ற நஞ்சு போன்ற ஆணவமலம், திருவருள் நேரே வந்து நோக்கினும் நீங்காது. திருவருள் வடிவாகிய குரு வந்து, திருநோக்கஞ் செய்தலாகிய தீட்சையினாலேயே நீங்குகிறது.

மூவகை ஆன்மாக்களுக்கும் இறைவன் அருள் செய்யும்பொழுது, விஞ்ஞானகலருக்கு அவர்களின் அறிவிற்கு அறிவாய் நின்றும், பிரளயாகலருக்கு உருவத் திருமேனியுடன் நேரே தோன்றியும், சகலருக்குக் குருவடிவாகவும் வந்து மலங்களை நீக்கியும் ஆட்கொள்ளுகிறார்.

சூரியகாந்தக் கல்லானது, சூரியனது முன்னிலையிலேயே நெருப்பை வெளிப்படுத்துவது போல, பக்குவான்மாக்களும் குருவின் அருளைப் பெறும்பொழுதே, ஞானத்தைப் பெறுகின்றன. எவ்வாறாயினும் இறைவனே பக்குவான்மாக்களுக்குக் குருவடிவாகி வந்து, ஞானத்தைக் கொடுத்து வீட்டின்பத்தை அருளுகிறார் என்பது தெளிவாகிறது.

அன்பர்களே! இவ்வதிகாரத்தில் கூறியவற்றால் நமக்குத் தோன்றாத் துணையாக விளங்குகின்ற திருவருள், எம்முடன் கூடியிருக்கின்ற தன்மையினாலே, எமது தன்மைகளை அறிந்து நாம் பக்குவப்படும் பொழுது, பார்வை மிருகம்போல, மானுடச்சட்டை தாங்கிப், பாம்பு கடித்த விடத்தை, மந்திரவாதி, தனது பார்வை யினாலே நீக்குவது போலக் குருவடிவாகவந்து, நயனதீட்சையினாலே எமது மலங்களை நீக்கிப் பேரின்பத்தைக் கொடுத்தருளுமாற்றைச் சிந்தித்து, அருள்வழி செல்லமுயல்வோமாக.

## திருவருட் பயன் வசனரூபம்
## ஆறாம் அதிகாரம்
## திருவருளாகிய குருவினது அருளினாலே மெய்ப்பொருளை அறியும் நெறியாகும்

**மெய்ப்பொருளை அறியும் நெறிக்கு முதலில் தோற்றுவது இருவினை ஒப்பு மலபரிபாகம் சத்திநிபாதம் ஆகும்:-** ஒன்றை ஒன்று ஒவ்வாது வளர்ந்துவரும் புண்ணிய பாவங்கள் இரண்டையும்,

ஓட்டையும் பொன்னையுஞ் சமமாகப் பாவித்தல் போன்று, சமமாகப் பாவிக்கும் எண்ணம், ஆன்மாக்களின் உள்ளத்திலே, உண்டாகும் நிலையில், மலபரிபாகம் ஏற்படத் திருவருட்சத்தி ஆன்மாவிற் பதியும்.

இதனைச் சிறிது விரிவாக நோக்குமிடத்து, ஆன்மாக்கள் செய்யும் நல்வினையாகிய இன்பங்களையுந், தீவினையாகிய துன்பங்களையும், இறைவன் அவர்களுக்கு ஊட்டி உணரவைக்க, அதனால் அவை அறிவுவிளக்கம் பெற்றுச் சிறிது சிறிதாக இன்பங்களையுந் துன்பங்களையும் சமமாக மதிக்கும் ஆற்றலைப் பெறும். இவ்வாற்றல் இறைவனது மேம்பாட்டை உணர்தற்கேதுவான நிலையை உண்டாக்குகிறது இங்ஙனம் இன்பதுன்பங்களைச் சமமாக மதிக்கும் நிலையை **இருவினைஒப்பு** என்பர்.

இந்நிலை எய்திய ஆன்மாக்களைப்பற்றிய ஆணவமலம் வலிமைகெடுதலே **மலபரிபாகம்** என்பர். மலபரிபாகம் ஏற்பட்ட ஆன்மாக்களிற், திருவருட்சக்தி பதிதலைச் **சத்திநிபாதம்** என்பர். சத்திநிபாதம் அடைந்த ஆன்மாக்கள் திருவருட்சத்தியினால் இறைவனோடு சேர்க்கப்படுகின்றன.

***ஆன்மாக்கள் சத்திநிபாதம் எய்தும்வரை அவற்றுடன் பொருந்தி நிற்பன:-*** ஆன்மாக்களாற் செய்யப்படுகின்ற புண்ணிய பாவங்களும், அப்புண்ணிய பாவங்களாற் பெறப்படும் இன்பதுன்பங்களும், அவ்வினையின் பயன்களை ஆன்மா நுகரும் வண்ணஞ் செய்யும் இறைவனும், ஆகியவற்றைத் தான் ஈடேறும்வரை ஆன்மா பொருந்திநிற்கும்.

***அவற்றுள் இறைவன் ஆன்மாவுடன் பொருந்தி நிற்கும்நிலை:-*** ஆன்மாவானது, தனது உடலுடன் வேறறக் கலந்து நிற்குந் தன்மைபோல, இறைவனுடனும் வேறில்லாமற் கலந்து நிற்கின்றது.

உயிரில்லையாயின் உடம்பானது அசையாது நிற்றல்போல, இறைவனுடன் உயிர் சேர்த்தி இல்லையாயின் உயிர் ஒரு செயலும் ஆற்றமுடியாது. உடம்போடு உயிர் ஒன்றாக இருத்தல் போல, இறைவனும் உயிரோடு வேறறக் கலந்து ஒன்றாக நிற்பவன் ஆவான்.

***இறைவன் உயிர்களுடன் கலந்து நின்று ஆற்றும்முறை:-*** பளிங்கானது இயல்பாகவே வெண்மை நிறமுடையது. சூரியஒளியின் முன் அச்சூரிய ஒளிக்கதிர்களில் அமைந்துள்ள பல நிறங்களையுந்

தன்பாற்காட்டி நிற்கின்றது. சூரியஒளி பளிங்கிற்குநேரே உச்சியில் நிற்கும் பொழுது, அப்பளிங்கு பலநிறங்களையுங் காட்டும் தன் மையினின்றும் விலகிச் சூரியக்கதிர் நிறமாகிய வெண்நிறத்தையே காட்டுகிறது. எனவே தனது இயல்பான நிறத்தையுஞ், சார்ந்துள்ள பொருள்களின் நிறங்களையுங்காட்டுகின்ற இயல்பைச் சூரியனது ஒளியே செய்விக்கின்றது. இதனாற் பளிங்கின் தன்னியல்பிற்குஞ், சார்ந்ததன் வண்ணம் நிற்கும் இயல்பிற்குஞ் சூரியஒளியே காரணமாகிறது என்பது புலனாகிறது. இவ்வாறே இறைவனும், ஆன்மா தன்னைக் காணும்படியும், பிறபொருளைக் காணும்படியும் உதவுகிறான். இங்ஙனம் இறைவன் துணைபுரியாவிடின், ஆன்மா எதனையும் அறிமுடியாது. சூரியனது ஒளி பளிங்கையும், அதனைச் சார்ந்த பொருட்களையும் விளங்கச்செய்து, அவற்றிற்கு வேறாகவும் விளங்குதல் போலச் சிவபெருமானது அருளானது, ஆன்மாவையும் அதனைச்சார்ந்த பொருட்களையும் விளக்குவதோடு, அவற்றிற்கு வேறாகவும் விளங்குகிறது.

**மெய்ஞானமாகிய இறைவனைக் காண்பதற்கு மெய்ஞான மாகிய கண் இன்றியமையாததாகும்:-** ஒளியினாற் பொருள்களைக் காணுகின்ற கண்ணானது, காணப்படும் பொருளுக்கும், ஆன்மாவிற்கும் நடுவில் அமைந்து நின்று பொருளைக்கண்டு, விரைவில் அப்பொருள்களை ஆன்மா அறியவழிசெய்கிறது. அதே போல ஞானஒளியானது, இறைவனுக்கும் ஆன்மாவிற்கும் நடுவில் நின்று அம்மெய்ப் பொருளாகிய இறைவனைக்கண்டு, அதனை ஆன்மா அறிய விரைவில் வழிசெய்கிறது. இங்ஙனம் மெய்ஞான ஒளி இல்லையாயின் ஆன்மா இறைவனைக் காணமுடியாது.

**மெய்ஞான ஒளியை அவாவும் ஆன்மா தன்செயலை இறைவன் செயலாக எண்ணுதல் வேண்டும்:-** பஞ்ச இந்திரியங்களுஞ் செய்கின்ற செயல்களை எல்லாந் தன்னுடைய செயல்களாகவே ஆன்மா நினைப்பதுபோலத், தன்னுடைய செயல்கள் யாவும் இறைவன் செயல்களாகவே கருதவேண்டும்.

ஐம்புலன்களின் இயக்கத்திற்கு, ஆன்மாவின் உள்இயக்கமே காரணமாதல்போல, ஆன்மாவின் செயற்பாடுகளுக்கு, ஆன்மாவினுள் நின்று இயக்குந் திருவருளே காரணமாகும். ஆன்மா, தங்களைச் செலுத்தும் தன்மையை, ஐம்புலங்களும் காணாதனபோல, உயிரினுள்

உயிராய் நின்று இயக்குந் திருவருளையும் ஆன்மா அறிவதில்லை.

**திருவருள் ஞானத்தைக் காணும்முறை:-** திருவருள் ஞானத்தைக் கல்வியால் ஆராய்ந்து காணலாம் என்பது தவறானமுடிபாகும். ஆயின் கல்வி அதற்கு உதவிசெய்யும். ஆன்மா தன்னுடைய அறிவையே, திருவருளின் அறிவென்று பாவித்து, அதன்வழியிற் சென்றால் திருவருள் எட்டாததாகிவிடும். ஆனால் ஆன்மா இறைவனின் அருளை முன்னிட்டு, அவனது அறிவு இச்சை செயல்வழியே, தனது அறிவு இச்சைகளைச் செலுத்திப், பின்னின்று வேண்டுதலே, திருவருளை அடைதற்கு வழியாகும். எனவே கல்வியறிவாலும் பாவனை அறிவாலும் ஆன்மாக்கள், திருவருள் ஞானத்தைக் காணமுடியாது.

ஆகையால் உலகவிடயங்களைச் சிந்திப்பதுபோல, ஞானமானது எப்படி இருக்கும்? எங்ஙனம் வந்தடையும்? என்று ஆராயாது, அதுவருமுன் முன்சென்று கண்டு கொள்ளமுனையாது, ஞானமானது தானாக வந்து தோன்றும் பொழுது அதனைக் காணுவதே முறையாகும்.

**திருவருள் ஞானத்தை அடையும் முறை:-** தாம் ஞானத்தை அடைந்தபின் உண்டாகும் பேரின்பமே, தாம் அனுபவிக்கும் பொருளாக நினைத்து, ஞானஒளியையே அறியுஞ் கருவியாகக் கொண்டு, அந்த இன்பத்துள் மூழ்கிஇருத்தலே ஞானத்தை அடையும் நெறியாகும்.

பேரின்பத்தையே விரும்பிய ஆன்மா, திருவருளின் குறிப்பின் வழியே செயற்பட்டு வருவதனால், தனக்கு உறுதுணையான வீட்டின்பத்தை அடையும். அதனிலும் மேம்பட்ட இன்பம் இல்லையென உணர்ந்த அவ்வான்மா, அத்திருவருளையே சரணாக அடையும்.

**ஞானநிலையை அடைந்த ஆன்மா ஞானமயமாக நிற்றல்:-** மெய்யுணர்வை அடைந்த ஆன்மா, அதன் துணைகொண்டு நோக்க நோக்க, அவ்வான்மாவிற்கு இறைவனிடத்தில் பேரன்பு தோன்றும், இந்தத் தளராத அன்பே, இறைவனோடு அவ்வான்மாவைக் கலந்து அழுந்தச் செய்யும். இங்ஙனம் அன்பு பெருகுதலே, பேரின்பநுகர்வைப் பெருக்குவதற்கு உதவியாகும்.

**திருவருளாகிய மெய்ப்பொருளை அறியும் முறைகளை மீட்டுந் தொகுத்து நோக்குவாம்:-** ஒன்றை ஒன்று ஒவ்வாத புண்ணிய

பாவங்கள் இரண்டையுஞ் சமமாக மதிக்கும் எண்ணம், ஆன்மாவின் உள்ளத்தில் உண்டாக, ஆணவமலம் வலிகெட்டு மலபரிபாகம் ஏற்படத் திருவருட்சத்தி பதிந்து, சத்திநிபாதத்தை அவ்வான்மா அடையும்.

அவ்வாறு அது தான் ஈடேறும் பொருட்டுத், தான்செய்யும் புண்ணிய பாவங்களைத் தமக்கு ஊட்டும் கடவுளையும், தன்னாற் செய்யப்படுகின்ற புண்ணியபாவங்களையும், அப்புண்ணிய பாவங்களினாற் செய்யப்படுகின்ற இன்பதுன்பங்களையும் பொருந்தி நிற்கும். அவ்வான்மா திருவருளோடு கூடியிருக்குந் தன்மை, உடம்பின்கண் உயிர்வேறுபாடின்றிக் கலந்து நிற்குந்தன்மை போன்றதாகும்.

பளிங்கானது தன்னைச் சார்ந்துள்ள பிறபொருள்களையும் அவற்றின் நிறங்களையும் தனது நிறத்தையும் விளக்குவதற்குச் சூரியனது கதிர்கள் காரணமாக இருத்தல் போல, ஆன்மா தன்னையும் தன்னைச் சார்ந்துள்ள பிறபொருள்களையும் அறிதற்கு, இறைவனது அறிவாற்றல்கள் காரணமாகும். தனது செயல்வழி நின்றே தனது புலன்கள் தொழிற்படுவது போலத், தனது செயல்கள் யாவும், இறைவன் செயல்வழி நின்றே நிகழ்வன என ஆன்மா உணரவேண்டும்.

ஞானத்தை, உலகவிடயங்களைப்போல ஆராயாது, அது ஆன்மாவை நாடி வரும்பொழுது, தான் முன்சென்று காணமுயலாது, அது வந்து தோன்றியபொழுதே, ஆன்மா அதனைக் காணுதல்வேண்டும். ஞானத்தை அடைந்தபின் உண்டாகும் பேரின்பத்தையே, அனுபவிக்கும் பொருளாகநினைத்து, ஞானஒளியையே கருவியாகக் கொண்டு, இன்பத்துள் அழுந்தல் வேண்டும். திருவருளாகிய ஞானம் எப்படி வெளிப்பட்டதோ, அப்படியே அதனைக்கண்டு, அறியாமை தோன்றாவண்ணம் ஞானத்தின் வசப்பட்டு இன்பத்தை அனுபவிக்க வேண்டும்.

அன்பர்களே! ஆன்மா மெய்ப்பொருள் அறியும் நிலையைச் சுருக்கமாகக் கூறின். நல்வினை தீவினைகளைச் சமமாக மதிக்கும் இருவினைஒப்பு, அதன் உள்ளத்தில் தோன்றியதும், ஆணவம் வலிகெட மலம் பக்குவப்பட்டு, அவ்வான்மாவில் திருவருட்சத்தி பதிந்து, அதனை இறைவனிடஞ் சேர்க்கும். அப்பொழுது அவ்வான்மா

தனது செயல்கள் யாவுஞ் சிவன்செயலாக நிகழ்வதை உணர்ந்து ஞானம் வெளிப்பட்டு வரும்பொழுது, அதனையே கருவியாகக் கொண்டு பேரின்பத்தில் மூழ்கி, ஞானத்தின் வயப்பட்டு, இன்பமனுபவிக்கும் என்பது தெளிவாகும்.

## திருவருட் பயன் வசனரூபம்

## ஏழாம் அதிகாரம்

## அறியும் நெறியின் நின்று அறிந்தஆன்மா உயிர்விளக்கம் பெறுவதை அதாவது ஆன்மசுத்தி பெறுவதைக் கூறும் உயிர்விளக்கமாகும்.

**ஆன்மா திருவருளை நாடுவதற்குக் காரணம்:-** கொடிய வெயிலிலே அகப்பட்டுத் துன்பப்படுபவன், அத்துன்பத்திினின்றும் நீங்க இயல்பாகவே விரும்புவான். நிழல் மரத்தைக் கண்டவுடன் அவன், வேறுயாருஞ் சொல்லமுன்பே தானாகத் தேடிச்சென்று நிழலை அடைந்து சுகம்பெறுவான். அதுபோல ஆணவமலப் பிணிப்பினாற் தாக்குண்டு, நிலையில்லாத உலக இன்பங்களிலே அழுந்தி, அவற்றை நிலையானது என நினைத்து வருந்தியவன், நிலையான பேரின்பத்தை நல்குந் திருவருளைக் காணும்பொழுது, சுகம்பெறும் பொருட்டுத்தானாகவே தேடிச்சென்று அதனைச் சார்வான். அதனாற் தனது ஆன்ம தன்மைகள் கெடத் திருவருளின் தன்மைகளை அடைவான்.

**திருவருளை ஆன்மா அறியுங்காலம்:-** பித்தநோய் உள்ளவனின் நாவிற்கு, இனியபாலுங் கசப்பாகவே இருக்கும். பித்தநோய் நீங்கியபின், முன்பு கசந்த பாலானது, இனிக்கும் வண்ணம் நா திருந்தி விடுகிறது. அதுபோல ஆன்மாவிற்கு ஆணவமலநோய், உள்ளளவுங் கசப்பாகத் தோன்றிய திருவருளானது, ஆணவமலம் நீங்கியதும் இனியதாகவே தோன்றும், எனவே ஆணவமலம் நீங்கிய காலமே மலநீக்கம் ஏற்பட்டுத் திருவருளை ஆன்மா அறியுங் காலமாகும்.

**திருவருளைத் தான் முயன்று கண்டதாகச் செருக்குறல் தகாது:-** ஆன்மாக்கள் பக்குவம் அடையுந் தன்மையாற் திருவருளை உணரும். அத்திருவருளே தனக்கு ஆதாரம் என்பதையும் உணரும். அங்ஙனம் அறிந்த ஆன்மா, வாசனாமலத் தாக்கத்தினாற் திருவருளை

மறந்து, திருவருளையும் அதுகாட்டும் உண்மைகளையும் தானே முயன்று கண்டதாக நினைக்கும். அது நன்றல்ல.

**திருவருளுக்கும் ஆணவத்திற்கும் உள்ள ஒப்புவமையை ஆன்மா உணருதல்:-** திருவருளும் ஆணவ மலமும் தத்தம் வகையான பொருட்களைக் காட்டி, ஏனையவற்றை மறைக்கின்ற தன்மையால் ஒத்த தன்மை உடையன என்பதை, அறிவு விளக்கம் பெற்ற ஆன்மா உணரும்.

அஃதை விளக்கமாக நோக்கின், திருவருள் தன்னைப் புகல் என்று அடைந்தவர்களுக்கு, மெய்ப்பொருளாகிய சிவத்தைக் காட்டி, உலக இன்பங்களை மறைக்க, ஆணவமலமோ தன்னை விட்டு நீங்காதவர்களுக்கு, பொய்ப்பொருளாகிய உலக இன்பங்களையே காட்டி, முழுமுதலாகிய சிவத்தை மறைத்து நிற்பதை உணரும்.

**இறைவன் தன்னை அணைந்தோருக்கு அருளுதல்:-** தனது உறவினன் ஒருவன், தம்முடன் பேதமின்றி மிகுந்த அன்னியோனியமாகப் பழகியமை காரணமாக, அவன் கடன்பளு, வறுமை முதலியவற்றால் வாடி வருந்தும்பொழுது, அவ்வுறவினர்கள் அன்பு காரணமாக, அவனுடைய வருத்தத்திற்குக் காரணமானவற்றைத் தாமே ஏற்று அவனுக்கு ஆறுதல் செய்தல் போல, இறைவனும் பேரன்பினால் தம்மையே ஆதாரமாகக் கொண்டு ஒழுகுகின்ற அன்பர்கள் வினைப்பயன்களைத்தாமே ஏற்று, அவர்களுக்கு எளிதில் தோன்றி அருள்செய்வார்.

இதனைப் பின்வரும் எடுத்துக் காட்டும் தெளிவாக்கும். பெரும் பண்ணை ஒன்றை நடாத்தும் ஒருவருக்காக, அவருடைய பண்ணையில் வேலைசெய்யும் வேலையாளுடைய முயற்சியால் வரும் லாபநட்டமெல்லாம் அப்பண்ணைக்காரனைச் சார, அப்பண்ணைக்காரன் அவற்றை ஏற்றுக்கொள்வதோடு, அவ் வேலையாளுக்கு வேண்டிய யாவற்றையும் கொடுத்து அவனைப் பாதுகாப்பான். அதுபோல எல்லாஞ் சிவன் செயல் என்று ஒப்படைத்துச் செயலாற்றும் ஓரன்பனுடைய செயல்களால் விளையும் நன்மை தீமைகளெல்லாஞ் சிவனையே சாருதலால், சிவனும் அவ்வன்பனுக்கு வேண்டியவற்றை எல்லாம் அருள்செய்வார்.

**இறைவன் தன்னை அணையாதோருக்கு அருளார்:-** உயிருக்குயிராய் உயிருடன் சேர்ந்து இயக்கும் இறைவனது

தன்மைகளை உணராத ஒருவன், தனது ஆற்றலினாலேயே தனது செயல்கள் எல்லாம் நிகழுகின்றன என்னும் அகங்காரத்துடன் செய்யுஞ் செயல்களால் விளையும் நன்மை தீமைகளினால் வரும் இன்பதுன்பங்களின் பயன்கள், அவனையே சாரும். அதனாலே இறைவன் அவற்றை அவனுக்கு ஊட்டுவதிலேயே செயற்படுவார். திருவருளை நாடி அவ்வழியிற் செல்லாதவர்களுக்குத் திருவருளால் வரும் பேரின்பத்தை அவர்களுக்கு நல்கார்.

மேலும் ஒருவனுடைய மிகச்சிறந்த பொருளைப் பெறவேண்டுமானால், அப்பொருளை உடையவரிடம், அவர் விரும்பும்படி பழகி, அவருடைய துணையினாலேயே அதனை இலகுவில் பெறலாம். வேறுவழிகளால் அதனைப் பெறமுயன்றால், பயன்தராது கஷ்டங்களுக்குள்ளாக நேரிடும். அதுபோல ஆன்மா இறைவனிடமுள்ள பேரின்பத்தை அடையவிரும்பின் பேரின்பத்திற்குத் துணைபுரிகிற திருவருளை நாடி, அதன் துணையாவே பெறுவது பயன்தருவதாகும். திருவருளின் துணையின்றிப் பேரின்பமாகிய இறைவனை அடையமுடியாது.

***திருவருளை அடைந்த ஆன்மாவைத் திருவருள் தன்வயப்படுத்தல்:-*** பளிங்குத் தூணானது, இருளில் இருளாகவே தோன்றும். அதுபோல ஆணவமல இருளினாற் பீடிக்கப்பட்ட ஆன்மா, ஆணவமயமாகவே விளங்கும். சூரியன் உதய்மாகும்பொழுது, பளிங்குத்தூண் சிறிது சிறிதாகத் தனது நிறத்தைக் காட்டிநிற்கும். அதுபோல ஆன்மாவும் ஆணவ வலிகெட்டுத் திருவருள் தோன்றத் தன்னறிவு விளங்கப்பெற்று நிற்கும். சூரியன் வானில் உயர உயரப் பளிங்குத்தூணில் கதிரவன் ஒளி மிகவும் பற்றுதல் போல, ஆன்மாவில் திருவருள் பதியப்பதிய ஆன்மாவிற் சிவபோதம் நன்கு பதியும். சூரியன் உச்சிவானில் வரும்பொழுது, பளிங்குத் தூணின் ஒளி முற்றாகச் சூரிய ஒளியுள் மறையப், பளிங்குத்தூண் முழுவதும் சூரியஒளியாகவே பிரகாசிப்பது போல, சிவபோதம் முற்றாக ஆன்மாவை அடக்கும்போது, அவ்வான்மா முழுவதுஞ் சிவமயமாகவே தோன்றும்.

***ஆன்மா சிவத்தை அடையத் திருவருளை முன்னாகக் கொண்டு நிற்றல்:-*** இராக் காலத்தில் இருளிலே ஒருபொருளை எடுக்க விரும்புகிறவன். தனக்குக் கிடைக்கும் விளக்கைத்,

தனக்குமுன்னே பிடித்துக்கொண்டு, தான் அதன்பின்னாகச் சென்றுதான், அப்பொருளைத் தேடிப்பெறுகிறான்.

அதுபோல ஆணவமல இருளிலே சிக்கிய ஆன்மா, சிவத்தை அடையவிரும்பும் பொழுது, திருவருளைப் பற்றி அதனை முன்னாகக் கொண்டு, தான், அது காட்டிய வழியிலே சென்று, சிவத்தை அடைதல்வேண்டும்.

**அருளுக்கு முன்னே நிற்கும் ஆன்மா சிவத்தைக் காணாமைக்குக் காரணம்:-** ஆன்மா தனது ஐம்புலங்களையும் கருவியாகக் கொண்டு அறியமுற்படுவதே, அவ்வாறு சிவத்தைக் காணாமைக்குக் காரணமாகும். மெய், வாய், கண், மூக்குச் செவியாகிய பொறிகளால் கண்டறிவதற்கு அப்பாற்பட்ட பொருளாகிய சிவத்தை அறிவதற்கு, அத்திருவருளின் துணையே இன்றியமையாததாகும்.

**ஆன்மா சிவத்தைத் தானே தனது வலிமையினால் கண்டேன் எனல் பொருந்தாது:-** ஒருவர் பிரதி உபகாரங்கருதாது தாம் விரும்பிய பொருளை நமக்குத் தருவாராயின், அதற்கு நாம் நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளோம். அவ்வாறன்றி நமது வலிமையினாலே அதனைப் பெற்றோம் என்று கூறுவது சற்றேனும் பொருந்தாது.

அதுபோலத் திருவருளானது தானே விரும்பி, எமக்குப் பேரின்பப் பெருவாழ்வைக் கொடுக்கும் பொழுது, நாம் அதனை மறந்து, நம்முடைய ஆற்றலால் அதனைப் பெற்றோ மென்று எண்ணுதல் பெருந்தவறாகும்.

**ஆன்மா உயிர்விளக்கம் பெறுமாற்றை தொகுத்துப் பார்ப்போம்:-** வெயிலினால் வருந்தும் ஒருவன் நிழலைக் கண்டவுடன் விரைந்தோடிச் சென்று நிழலை அடைந்து சுகம் பெறுவதுபோல, மலங்களின் தாக்கங்களினால் வருந்திய ஆன்மா, திருவருளைக் கண்டவுடன் திருவருளோடு சேர்ந்து, தனது ஆன்மபேதம் கெட்டுத் திருவருளின் தன்மையைச் சாரும். அதனால் அது சிவத்தின் தன்மையை அறியும், திருவருளானது தனக்குத்துணை என்பதையும் அறியும்.

ஆணவமலம் தன்னைச் சார்ந்த ஆன்மாக்களுக்கு முழுமுதலாகிய சிவத்தை மறைத்து, உலக இன்பங்களைக் காட்டத்

திருவருளோ, தன்னைச் சார்ந்த ஆன்மாக்களுக்கு, முழு முதலாகியசிவத்தைக்காட்டி, உலகஇன்பங்களை மறைக்கும் இறைவன் தன்னையே ஆதாரமாகக் கொண்டு, ஒழுகுகின்ற ஆன்மாக்களின் வினைப்பயன்களைத் தாமேஏற்று, அவர்களுக்கு அருள்புரிதலால், எல்லாஞ் சிவன் செயலே என்று ஒப்படைத்தவர் களின் இன்பதுன்பங்கள் அவர்களைச்சாரா. ஆன்மா பேரின்பத்தை அடையவேண்டுமானால், பேரின்பத்திற்குத் துணையாக இருக்கிற திருவருளின் துணையே அதற்கு இன்றியமையாததாகும்.

இருளில் இருக்கிற பளிங்குத்தூண் சூரிய ஒளியைப் பெறும்பொழுது ஒளிமயமாக விளங்கிச் சூரியன் உச்சிப்பொழுதை அடையும்பொழுது, அப்பளிங்குத் தூணின் ஒளி சூரியஒளியுள் மறைய, முற்று முழுதாகச் சூரிய ஒளியாகவே பிரகாசிக்கிறதுபோல, ஆணவ இருளில் மயங்கி இருக்கும் ஆன்மா, ஞானஉணர்வாகிய சூரியன் தோன்ற, ஆணவ வலிகெடத், தன்னுணர்வோடு நின்று, மேலும் மேலும், ஞானஒளியாகிய சூரியன் உச்ச நிலையை அடைய, ஆன்மபேதம் முற்றாகவே கெடச் சிவபோதத்தினாற் பிரகாசம் அடைந்து அதனுள்ளே அடங்கிக் கிடக்கும்.

இராக்காலத்தில் இருளிலே ஒருபொருளைத் தேடியெடுக்க முயல்பவன், விளக்கைமுன்னே பிடித்துத் தான் அதன்பின்னே சென்று, தான்விரும்பிய அப்பொருளைத் தேடி எடுப்பது போல, சிவத்தை அடையவிரும்பும் ஆணவமலத்தாற் பீடிக்கப்பட்ட ஆன்மா, திருவருளாகிய விளக்கை முன்னாகக் கொண்டு, அதன்வழி அதன்பின்னே சென்றாலே சிவத்தை அடையலாம். ஐம்பொறிகளால் கண்டறியும் பொருள்களுக்கு அப்பாற்பட்ட பொருளாகிய சிவத்தை அடைவதற்குத் திருவருளின் துணையேயன்றி, வேறெவையும் பயன்படாவாம்.

திருவருளே சிவானந்தப் பெரும்பேற்றைத் தானாகவே விரும்பிப் பக்குவான்மாக்களுக்குக் கொடுத்தருளும் போது, ஆன்மாக்கள் தாமே தமது வலிமையினாற் பெற்றோமென்பது சற்றேனும் பொருந்தாது.

அன்பர்களே! உயிர்விளக்கத்தின் தன்மைகளைச் சிந்திக்கும்பொழுது, மலங்களின் தாக்கங்களினால் உழலும் நாம், ஆணவமலத்தின் பிடியினின்றும் விடுபடுவதற்குத் திருவருளையே

நாடி, அதன் வழியிற் சென்று, அதன்துணையை இறுகப்பற்று வோமானால், திருவருளால் ஞானஒளிதோன்றப் பெற்று, அறிவுவிளக்கம் பெறுவதுடன், பேரின்பப் பெருவாழ்வையும் பெறுதற்கு வழிபிறக்கும் என்பதை உணர்வோமாக.

## திருவருட்பயன் வசனரூபம்
## எட்டாம் அதிகாரம்
## ஆன்மா உயிர்விளக்கம் பெற்றபின்பு அதனாலடையும் பேறாகியஇன்புறு நிலையாகும்.

**வீட்டின்பத்தைப் பெறுபவர்:-** இது காறும் பெருந்துன்பத்தையே விளைத்து வந்த ஆணவமலமாகிய இருளைப் போக்குவதற்கு எழுகின்ற ஞான சூரியனாகிய விளக்கை, முன்னாகக் கொண்டு தான் அவ்வழியிற் பின்னாகச் செல்கின்றவர்கள் பேரின்பப் பேற்றை அடைந்தே தீருவர்.

ஞான ஒளியைப் பின்னாகக் கொண்டு தாம் முன்னாகச் செல்லுகிறவர்கள், பேரின்பப்பேற்றை அடையாது துன்பத்தையே அடைவார்கள்.

**ஆன்மாக்கள் பேரின்பமடைவதற்குச் சிவானுபவம் வேண்டும்:-** ஒரு பெண்மகள் ஓர் ஆண்மகனுடன்கூடி இன்பமடை வதுதான் நியதி. அவ்வாறன்றிப் பெண்மகளானவள், வேறோர் பெண்மகளுடன்கூடி இன்பத்தைப் பெறமாட்டாள். அதுபோலத் தலைவனாகிய சிவத்துடன் சேர்ந்து பேரின்பப்பேற்றை அடைய வேண்டிய ஆன்மா, திருவருட் சக்தியுடன் சேர்வதால் இன்பத்தைப் பெறமாட்டாது.

பெண் மகளானவள் ஆளுந்தன்மையுடைய ஆண்மகனுடன் சேர்ந்தே இன்பமடைவதுபோல, ஆன்மா திருவருட்சக்தியின் துணையுடன், முழுமுதலாகுந் சிவனாகிய தலைவனுடன் சேர்ந்தே இன்பத்தை அடையும்.

**ஆன்மா சிவானுபவத்துடன் இன்பத்தை அடையும்போது இன்பமடைவது ஆன்மாவே:-** சிவபெருமான் அன்பினாலே தன்னை வந்தடைந்த ஆன்மாக்களுக்குப் பேரின்பத்தை அளிக்கிறார். அங்ஙனம் ஆன்மாக்களுக்குப் பேரின்பத்தை அளிக்கிற திருமேனி, பேரின்பம் நிறைந்த திருமேனியாகும். அதனால் இறைவன் நிறைந்த பேரின்ப

வடிவாகவே இருக்கிறான். ஆதலினால் ஆன்மா இறைவனோடு கலக்கும் பொழுது இன்பத்தை அடைவது ஆன்மாவே, இறைவன் அல்ல.

**சிவனும் ஆன்மாவுங் கலக்கும் முத்தி அத்துவித முத்தியாகும்:-** தாடலை என்னுஞ் சொல்லில், தாள் தலை என்ற இருசொற்கள் சேர்ந்து நிற்றலால் அதனை, ஒரு சொல் என்று கூறவும் முடியாது. தாடலை என்ற மொழி தாள், தலை என்று பிரிந்து இசையாமல், ஒருமொழித் தன்மைப்பட்டு நிற்றலால் அதனை இருமொழிகள் என்று கூறவும் முடியாது.

இங்ஙனம் ஆன்மாவுஞ் சிவமுஞ் சேர்ந்து நிற்கும்பொழுது, ஒரு பொருள் என்று சொல்லவும் முடியாமல், இரு பொருள்கள் என்று சொல்லவும் முடியாமல் இருக்கின்ற இந்நிலையை அத்துவிதம் என்று கூறுவர். அத்துவிதம் என்பது இரு பொருள்கள் பிரிப்பின்றிக் கலந்து ஒருபொருள் போல் இருக்குந்தன்மையாகும்.

**ஆன்மா அடையும் பேரின்பநிலையை அத்துவிதம் என்று கூறுவர்:-** ஆன்மாவும் சிவமும் ஒரே பொருளாயின் பின்னர் இரு பொருள்களாகப், பேரின்பமனுபவிக்கக் கூட வேண்டியதில்லை. மேலும் எல்லாவற்றிற்கும் பதியாக நிற்றல், இயல்பாகவே எல்லாவற்றையும் அறிதல் ஆகிய தன்மைகள் இறைவனிடத்தன்றி, ஆன்மாவிடம் இல்லை. எனவே அவை இரண்டேயாம். ஆன்மாவுஞ் சிவமும் கலக்கும் பொழுது இருபொருள்களாகவே இருப்பின் பேரின்பப் பேறு கைகூடாது. ஆகவே ஆன்மாவுஞ் சிவமும் கலக்கும் பொழுது ஒருபொருளுமல்லாத, இருபொருளுமல்லாத நிலைதோன்றும். அப்பொழுது ஆன்மா தனது ஆன்மபோதத் தன்மை கெட்டுச் சிவபோதம் எய்திக் கலப்பதால் ஒரே பொருளாகவும், பொருள்களின் நிலையை நோக்கும் பொழுது இருபொருள்களாக வேறாகவும், விளங்குகின்ற இந்நிலையை அத்துவிதம் என்பர்.

**பிறவித் துன்பத்தில் நின்றும் நீங்கிப் பிறவி எடாதவர்:-** பேரின்பமுத்தியை அடைந்தவர்களும், அம்முத்தியை அடைதற் கேதுவாகிய சமாதிநிலையை அடைந்தவர்களும், இடைவிடாது சமாதிநிலையை எய்தாமல், கேட்டல், சிந்தித்தல் என்னும் ஞானநிலையை அடைந்தவர்களும் பிறவித்துன்பத்தின் நின்றும் நீங்கியவராவார். எனவே அவர்கள் மேலும் பிறவியெடாதவராவர்.

## எட்டாம் அதிகாரம் இன்புறுநிலை

**சமாதி நிலையை உறுதியாக அடைந்தவர்களின் நிலை:-** பேயினாற் பீடிக்கப்பட்ட ஒருவனின் நிலையில் அவனுடைய செயல்கள் யாவும், பேயினுடைய செயல்களாக மாறுவது போலச் சமாதிநிலையில் இருப்பவர்களின் செயல்கள் யாவுஞ், சிவன் செயல்களாக மாறும்வரையும் அசையாமல் இருப்பதே அந்நிலையாகும்.

**பயன்தரு சமாதிநிலை அடைந்தவர்களின் தன்மைகள்:-** ஒளிமயமாக விளங்கும் பேரின்பப் பேறாகிய ஞானநிலையை அடைந்தவர்களுக்கு, உறுதிப் பொருளாக உள்ளது பேரின்பப் பேறு ஒன்றுமே.

மற்று அவர்கள் இது காறும் ஒழுகிவந்த சரியை, கிரியை யோகங்கள் யாவும், உறங்குவோர் கையிலிருக்கும் பொருள்கள் யாவும், உறக்க நிலையில் அவர்களை அறியாமலே அவர்களை விட்டு நீங்குவது போலச், சமாதிநிலை கைவரப்பெற்றவர்களை விட்டு நீங்கிவிடுவனவாகும். அதாவது உண்மையான சமாதிநிலை அடைந்தவர்களின் சமயாசாரங்கள் யாவும், அவர்களை அறியாமலே நழுவி விடுவனவாம்.

அவ்வாறன்றித் தற்பெருமையினால் ஞானிகள் என்று தம்மைக் கூறிக் கொள்பவர்கள், சமயாசாரங்களைத் தேவையெனக் கொள்வர். அவர்கள் ஆணவ முனைப்புடையவர்கள் ஆவர். ஆணவ முனைப்பற்றவர்கள், யாவுஞ் சிவமாக விளங்கநிற்பவர்கள் ஆதலால், அவர்களுக்கு வேறுபாடுகள் தோன்றாவாம்.

**முத்தியின்ப நிலையை மொழியினால் உணர்த்த முடியாது:-** பேரின்பமாவது இறைவனும் ஆன்மாவும் அத்துவிதமாய்ப் பிரிப்பின்றி இணைந்து நிற்குஞ் சேர்க்கையாகும். அது காண்பவன் காட்சி காட்சிப்பொருள் ஆகிய மூவகைத் தன்மைகளும் வெவ்வேறாகாத தோற்றமாய், ஒன்றுபட்ட தன்மையால் வருவதாகும். அத்தன்மையை மொழிகளினால் விபரித்துக் கூற முடியாததாகும்.

**முத்தியின்பம் அடைவதற்குக் காரணம் மிக்கபேரின்பமே:-** இருவினைஒப்பு மலபரிபாகம் சத்திநிபாதம் எய்துதற்குரிய பேரன்பு ஒருவருக்கு எப்பொழுது உண்டாகிறதோ, அப்பொழுதே பேரின்ப மடைதற்குரியவராவர்.

எவ்வித தடையற்றதும், நிலையானதும், எல்லையில்லாதது

மாய் விளங்கும் பேரின்பத்தை, நாம் நுகரவேண்டுமேயானால், எல்லையற்ற அன்பை அதற்கு ஈடாகக் கொடுக்கவேண்டும்.

**ஆன்மா உயிர்விளக்கம் பெற்று அதனாலடைதற் பாலதாய இன்புறு நிலையைத் தொகுத்து நோக்குவாம்:–** ஆணவமல இருளை நீக்குவதற்கு எழுந்த ஞானஒளியை முன்னேவிட்டு, அதன் பின்னே செல்பவர், பேரின்பத்தை அடைவர். ஓர் பெண்மகளானவள் ஓர் ஆண் மகனுடன் சேரும்பொழுதே, இன்பம் அனுபவிப்பது போல, ஆன்மாவானது, முழுமுதற் கடவுளாகுஞ் சிவனாகிய தலைவனுடன் சேரும் பொழுதே, பேரின்பத்தை அடையும். அன்பினாற் தன்னை அடைந்தவர்களுக்கு இன்பமே திருமேனியாகவுடைய இறைவன், அத்துவித நிலையிற் கலந்து, பேரின்பத்தை அளித்தருளுவார். ஆயினும் தமது திருமேனி முழுவதும் இன்பமயமாக இருக்குந் தன்மையாற் தான் இன்பத்தை அனுபவிப்பவர் அல்லர். ஆன்மாவுஞ் சிவமும் ஒருபொருளுமாகாது. இருபொருளுமாகாது பிரிப்பின்றி நிற்கும் அத்துவிதநிலையை, அத்துவிதம் என்று அழைப்பர். ஆன்மா இறைவனோடு கூடிப் பேரின்பத்தை அனுபவிக்கும் பொழுது தனது ஆன்மபோதத் தன்மை கெட்டுச், சிவபேதம் எய்திக் கலப்புறுந் தன்மையால் ஒன்றாகவும் பொருள்களின் தன்மையால் வேறாகவும் உள்ளதாகும்.

முத்திநிலை அடைந்தோரும் சமாதிநிலை அடைந்தோரும், இடைவிடாத சமாதி நிலையடையாது. கேட்டல், சிந்தித்தல் என்னும் ஞானநிலையை அடைந்தோரும், பிறவித் துன்பத்தில் நின்றும் விடுதலை பெறுவார்கள். சமாதிநிலை கூடினோர் பேயினாற் பீடிக்கப்பட்டோர் செயல்கள் யாவும், பேயின் செயல்களாக மாறுவதுபோல, சமாதிநிலையில் இருப்பவர்களின் செயல்கள் யாவுஞ் சிவன் செயலாக மாறும்வரை செயலற்று இருப்பார்கள். பேரின்பப்பேறாகிய ஞானநிலையை அடைந்தவர்களுக்குப், பேரின்பமொன்றுமே தவிர, மற்றைய சரியை கிரியை யோகங்கள் யாவும், உறங்குவோர் கையிலுள்ள பொருள்கள் யாவும், அவர்களை அறியாமல் நழுவுவதைப் போலத் தாமாகவே அவரைவிட்டு நீங்கிவிடும்.

பேரின்பமானது இறைவனும் ஆன்மாவும் பிரிப்பின்றி இணைந்து நிற்குங் கலப்பினாற், காண்பவன் காட்சி காட்சிப் பொருள்

ஆகிய மூவகைத் தன்மைகளும் வெவ்வேறாகத் தோற்றாமல் இருப்பது போல, ஒன்று பட்டிருக்குந் இன்பமாகும். ஒருவரிடம் இறைவன் மேல் பேரன்பு எப்பொழுது உண்டாகின்றதோ, அப்பொழுதே அவர் பேரின்பத்தை அடைவர்.

அன்பர்களே! உயிர்விளக்கம் பெற்று ஞானஒளி தோன்றப் பெற்ற அடியார்கள், தமது ஆன்ம போதம் கெட்டுச் சிவபோதம் அடைந்து, அத்துவித நிலையிற் சிவத்துடன் கலந்து பேரின்பத்தை அடைவார்கள். பேரின்பத்தை அடைவதற்கு இறைவன் மீதுள்ள பேரன்பே காரணமாகிறது. பேரின்ப நிலையை அடைந்தவரது சமயாசார ஒழுக்கங்கள் யாவும் உறங்குவோர் கையிலுள்ள பொருள் கள் யாவும், அவரை அறியாமலே நழுவுவதுபோல அவரைவிட்டு நழுவிவிடும். இன்புறுநிலை அடைந்தோர் தன்மை இவையென உணர்வோமாக.

## திருவருட்பயன் வசனரூபம்

## ஒன்பதாம் அதிகாரம்

## முத்திநிலை அடைதற்காகச் சமாதிநிலை அடைந்தவரை வந்துதாக்கும் வாசனா மலத்தை நீக்குகின்ற ஐந்தெழுத்தாலாகிய திருவருளின் தன்மைபற்றிக் கூறும் ஐந்தெழுத் தருள்நிலையாகும்.

**திருவைந்தெழுத்தில் வேதாகமங்களின் உண்மைகள் யாவும் அடங்கியுள்ளன:-** இறைவன் ஆன்மாக்களில் இயல்பாகவேயுள்ள கருணையினாற் கூறியருளிய நான்கு வேதங்களும் சிவாகமங்களும் உபாகமங்களும் ஏனைய சமயசாத்திரநூல்களும் ஆகிய எல்லாம் திருவைந்தெழுத்தின் பொருளை உணர்த்துவன எனலாம். திருவைந்தெழுத்தின் பொருள்களாகிய பதி, பசு, பாசங்களை ஆராய்ந்தால், மேற்கூறிய நூல்களெல்லாம் திருவைந்தெழுத்தின் உண்மைகளைக் கூறுவன என்பது புலனாகும்.

**ஐந்தெழுத்தோரெழுத்தாம் ஓங்காரத்துள் (பிரணவத்துள்) அடங்கும் பொருள்கள்:-** சிவமும், திருவருளாகிய சத்தியும் ஆணவ மலமும் திரோதான சத்தியும் ஆன்மாவுமாகிய ஐந்தும், ஐந்தெழுத் தோரெழுத்தாகிய ஓங்காரமாகும் பிரணவத்துள் அமைந்துள்ளன.

பிரணவத்தை ஓங்காரம் என்றுங் கூறுவர்.

**திருவைந்தெழுத்தில் அடங்கும் பொருள்கள் ஆவன:-** பிறவித்துன்பத்தை உண்டாக்கும் திரோதானசத்தியும் மலமுமாகிய நகார மகாரங்கள் ஒருபக்கமாகவும், வீட்டின்பத்தை அருளும் சிவமும் திருவருட்சத்தியுமாகிய சிகார வகரங்கள் மறுபக்கமுமாக அமைய, இவற்றின் நடுவே ஆன்மாவாகிய யகாரம் அமைந்துள்ளது.

"சிவாயநம" என்னும் திருவைந்தெழுத்தில் முதலெழுத்தாகிய சி சிவத்தையும் இரண்டாம் எழுத்தாகிய வா திருவருளையும், மூன்றாம் எழுத்தாகிய ய ஆன்மாவையும், நான்காம் எழுத்தாகிய ந திரோதானசத்தியையும், ஐந்தாம் எழுத்தாகிய ம மலத்தையும் குறிப்பனவாம்.

**திருவைந்தெழுத்தில் அடங்கிய பெத்தநிலையும், முத்திநிலையும்:-** நகரமாகிய திரோதான சத்தி மகரமாகிய மலத்தைக்கூட, மலமானது செயற்பட்டு, யகரமாகிய ஆன்மாவை அருளை அறிந்து உய்யவிடாமல் பெத்தநிலையாகிய பிறவியிற் சேர்க்கும்.

ஆன்மாக்கள் தம்மைப்பற்றிய பெரியபிணியாகிய ஆணவமல இருளை நீக்கினால், திருவருளாகிய வகரத்தின் உதவியுடன் சிகரமாகிய சிவத்தைச் சேரும். இது முத்திநிலையாகும். மலமும் திரோதான சத்தியும் ஆன்மாவை விட்டு நீங்கினால் ஆன்மாவின் ஊனநடனம் நின்றுவிடும். ஊனநடனம் நின்றவுடன், ஆன்மா திருவருட் சத்தியோடும் சிவத்தோடுஞ் சேர்தலாகிய, ஞானநடனத்தைச் சேரும்.

**உபாய மார்க்கமாகிய பெத்த நிலைக்குரிய பஞ்சாட்சரம்:-** மயக்கம் பொருந்திய பிறவிப் பிணியில் ஆன்மாக்களைச் செலுத்துகின்ற திரோதான சத்தியும் மலமுமாகிய நகார மகாரங்கள் ஆகிய இரண்டையும் முன்னாகவைத்து 'நமசிவாய' என்று ஓதினால், மலம் நீங்காது. இது உபாய மார்க்கமாகிய பெத்த நிலைக்குரிய பஞ்சாட்சரமாகும்.

**முத்திநிலையை நோக்கி வழிபடுவோர் ஓதும் பஞ்சாட்சரம்:-** ஆன்மாவிற்கு உறுதுணையாக நிற்கும் சிவத்தை, முன்னாகக் கொண்டு 'சிவாயநம' என்று ஓதிப்பயன் பெறுதலே முத்திநிலையை விரும்புகிறவர்களுக்குரிய நெறியாகும். உண்மை மார்க்கத்தில் நிற்பவர்கள், மீண்டுஞ் சிந்தியாது நகராதி பஞ்சாட்சரமாகிய

'நமசிவாய' என்று ஓதுதல் வருந்தத்தக்கதாகும். முத்திநிலையை விரும்புகிறவர்களுக்கு இது பொருந்தாது. இஃது உலகியலை விரும்புகிறவர்களுக்கே உரியதாகும்.

**திருவருள் ஆன்மாவைச் சிவமாக்கி வீட்டின்பத்துள் இருத்தும்:-** வகரமாகிய திருவருட்சத்தி, சிகரமாகிய சிவத்தைக் காட்டி, யகரமாகிய ஆன்மாவைச் சிவமாக்கி வீட்டின்பத்துள் இருத்தும். அத்திருவருளே, மோட்சத்தில் அவ்வான்மாவிற்குக் குற்றமற்ற திருமேனியாகவும் இருக்கும்.

**மோட்சநிலையை விளக்கும் திருவைந்தெழுத்து:-** மோட்சநிலையை ஆன்மா அடைந்தநிலையில் வகரமாகிய திருவருளினால், யகாரமாகிய ஆன்மா வகாரமாகிய திருவருளுக்கும் சிகாரமாகிய சிவத்திற்கும் நடுவில் அமையப்பெறும் என்பதாம்.

**திருவருட்துணை பற்றி வேதாகமங்களின் கூற்று:-** ஆன்மாவானது முத்திநிலையிற் சிவத்தைவிட்டு ஒருபொழுதும் நீங்காது. அதனோடு கூடியிருக்குந் தன்மையை அறிந்து, வேதசிவாகமங்கள் ஆன்மா முத்தியடைவதற்கு ஏதுவான வழிகள் எல்லாவற்றையும் சொல்லுகின்றன.

எனவே முத்திநிலையிற் திருவருளின் துணை, எப்பொழுதும் ஆன்மாவிற்கு உண்டு என்பது புலனாகிறது.

**முத்தி இன்பங்கூடுதலால் சமாதிநிலை அடைந்தவரை வந்து தாக்கும் வாசனாமலத்தை நீக்குகின்ற திருவைந்தெழுத்தாம் திருவருளின் தன்மைகளைத் தொகுத்து நோக்குவாம்:-** இறைவன் ஆன்மாக்களின் மேலுள்ள கருணையினாற் கூறியருளிய வேத சிவாகமங்களும் ஏனைய சாத்திரங்களும், திருவைந்தெழுத்தின் பொருளையே கூறுவனவாம். சிவமுந் திருவருளும் ஆன்மாவும் திரோதான சத்தியும் மலமுமாகிய ஐந்தும், ஐந்தெழுத் தோரெழுத்தாகிய ஓங்காரமாம் பிரணவத்துள் அடங்கியுள்ளன. திருவைந்தெழுத்தில் வீட்டின்பத்தைக் குறிக்கும் சிவமும் திருவருளுமாகிய சிகார வகாரங்கள் ஓர் பக்கத்திலும், திரோதான சக்தியும் மலமுமாகிய நகார மகாரங்கள் மறுபக்கத்திலுமாக, ஆன்மாவைக் குறிக்கும் யகாரம் அவற்றின் நடுவிலுமாக அவை அமைந்துள்ளன. (சிவாயநம)

திருவைந்தெழுத்தின் முதலெழுத்தாகிய சி சிவத்தையும்

இரண்டாவது எழுத்தாகிய வா திருவருட் சத்தியையும் மூன்றாம் எழுத்தாகிய ய ஆன்மாவையும் நான்காம் எழுத்தாகிய ந திரோதான சத்தியையும், ஐந்தாம் எழுத்தாகிய ம மலத்தையுங் குறிப்பனவாம். திரோதானசக்தி மலத்தைச்சேர, மலந்தொழிற்பட்டு, ஆன்மாவை அருளை அறிந்து உய்யவிடாமல் பிறவித் துன்பத்துள் அழுத்துகிறது. ஆன்மாவைப் பீடித்துள்ள ஆணவமலம் நீங்கினால் ஆன்மா சிவத்தை அடையும்.

மயக்கத்தைத் தருகின்ற பிறவிகளில் ஆன்மாக்களைச் செலுத்துகிற திரோதான சத்தியையும் மலத்தையும் குறிக்கின்ற நகார மகாரங்களை முதலாகஉடைய 'நமசிவாய' என்ற திருவைந்தெழுத்தை ஓதினால், ஆணவமலம் நீங்காது. ஆணவமலம் நீங்கி இன்பமடைய வேண்டுமானால், சிகாரவகாரங்களை முன்னாகவுடைய 'சிவாயநம' என்ற திருவைந்தெழுத்தையே ஓதுதல் முறையாகும். வீட்டின்பத்தை அடைய விரும்புகிறவர்கள், நகாராதி பஞ்சாட்சரத்தை ஓதுதல் தவறாகும்.

வகாரமாகிய திருவருளானது, யகாரமாகிய ஆன்மாவிற்குச், சிகாரமாகிய சிவத்தைக் காட்டி வீட்டின்பத்துள் இருத்தி, அங்கு அவ்வான்மாவிற்குக் குற்றமற்ற திருமேனியாகவும் விளங்குகிறது. மோட்சமடைந்த ஆன்மாவின் நிலையைச், சிற்சத்திக்கும் சிவத்திற்கும் நடுவே அது அமைந்துள்ளநிலை விளங்குவதாகும். ஆன்மா அந்நிலையில் ஒருபொழுதுஞ் சிவத்தை விட்டு நீங்காது அதனோடு கலந்திருக்கும்.

அன்பர்களே! ஐந்தெழுத்தருள்நிலையில், ஓங்காரமாகிய பிரணவம் முக்கியமானது. இதில் ஐந்தெழுத்துக்களும் ஓரெழுத்தாக அமைந்துள்ளன. 'சிவாயநம' என்ற திருவைந்தெழுத்தில் முதலெழுத்தாகிய சி சிவத்தையும் இரண்டாம் எழுத்தாகிய வா திருவருளையும் மூன்றாம் எழுத்தாகிய ய ஆன்மாவையும் நான்காம் எழுத்தாகிய ந திரோதான சத்தியையும் ஐந்தாம் எழுத்தாகிய ம மலத்தையும் குறிப்பனவாம்.

பரமகருணாநிதியாகிய இறைவன் ஆன்மாக்களுக்கு உலக இன்பங்களை அளித்தற் பொருட்டு உமாதேவி சமேதரராகக் கல்யாணசுந்தர மூர்த்தியாகவும், மெய்ஞான மோட்சத்தை அளிப்பதற்காகத் தட்சணா மூர்த்தியாகவும் விளங்கி அருள்

புரிபவராவர். அதற்கேற்ப உலகஇன்பங்களை விரும்புகிறவர்கள், நகாராதி பஞ்சாட்சரமாகிய 'நமசிவாய' என்பதனை ஓதி இறைவனுடைய திருவருளைப் பெறுதல்போல, பேரின்பமாகிய வீட்டின்பத்தை விரும்புகீறவர்கள், சிகாராதி பஞ்சாட்சரமாகிய 'சிவாயநம' என்பதனை ஓதியே இறைவன் அருளைப் பெறுவர் என்பதைத் தெளிவோமாக.

## திருவருட்பயன் வசனரூபம்
## பத்தாவது அதிகாரம்
## ஐந்தெழுத்தருள் நிலையாகிய திருவருளின் தன்மைகளை அடுத்துக் கூறப்படுவது இறைவனை அணைந்தோர் தன்மையாகும்

***இறைவனை அணைந்தவர்களாகிய சீவன்முத்தர்நிலை:-*** சீவன் முத்தர்கள் நிறைந்த ஞானத்தினுள்ளே அமிழ்ந்தித் தம்மறிவினுள்ளே பேரின்பம் தங்கி அடங்கும்படி ஆனந்தநித்திரை செய்வர்.

***சீவன் முத்தர்களின் தொழில்நிலை:-*** சிவபெருமான் செய்யும் படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளலாகிய ஐந்தொழில்களையேனும், பிரமா, விஷ்ணு, உருத்திரன், மகேசுவரன் சதாசிவமாகியோர்களின் தொழிலையேனும் பிறவிக் கேதுவாகிய தொழில்களையேனும் பொருந்தமாட்டார்கள்.

***சீவன்முத்தர் சிவத்தையே காண்பர்:-*** சீவன்முத்தர்கள் எல்லாவற்றையும் அறியுஞ் சிவத்தோடு கலந்து நிற்பினும் சிவத்தையேயன்றி வேறொன்றையுங் காணமாட்டார்கள்.

நிலத்தின் கண்ணே செல்லும் ஆமையானது, ஆரவாரமுள்ள இடத்தில், தனது ஐந்து உறுப்புக்களையும் உள்ளே அடக்கி, அசைவில்லாது கிடத்தல்போலச் சீவன் முத்தர்களும், உலக விஷயங்களாகிய தாக்கங்களிடையே தமது ஐந்து பொறிகளையும் மனத்தையும் அடக்கிச் சிவத்திலே புகுந்து அழுந்தியிருப்பர்.

***சீவன் முத்தரும் சர்வவியாபர் ஆம்நிலை:-*** சிவனாந் தன்மை யைச் சீவன் முத்தர்கள் அடைந்தமையால், எல்லாவிடங்களிலுஞ் சிவன் பரந்து இருப்பதுபோல, அவர்களும் வியாபித்திருப்பர்.

***சீவன் முத்தர்கள் விருப்பு வெறுப்பு இல்லாதவர்:-*** அகமும் புறமும் ஒத்த தன்மையாகக் காணும் ஞானத்தைப் பெற்ற தன்மையினாலே, சீவன் முத்தர்களுக்கு எப்பொருளிலும் விருப்போ வெறுப்போ இல்லை.

***சீவன் முத்தர்கள் செய்யும் வினைகளுக்குப்பயன்:-*** யான், எனது என்னுஞ் செருக்குடன் செய்கிறவர்களுக்குரிய வினையின் பயன், உலகவாழ்க்கையேயாம். அவ்வாறன்றி, யான் எனது என்னுஞ் செருக்குகளின்றி, எல்லாஞ் சிவன் செயல்களே என்று கருதுஞ் சீவன்முத்தர்கள் செய்யுந் தொழிலுக்குரிய பயனாய் அவர்கள் பெறுவது சிவானந்தமேயாகும்.

***சீவன் முத்தர்களது கன்மவினைகள் தீரும் முறை:-*** சீவன் முத்தர்களது பிராரத்துவவினையானது, அவர்களது தூலதேகம் நீங்கும் போதே நீங்கும். அவர்களினால் முத்தியடைதற்கும் தேகம் நீங்குவதற்கும் இடையில் வினை செய்யப்பட்டால், அவ்வினைகள் அவர்களைச் சாரா. அவை இறைவனால் நீக்கப்படும். காரணம் அவர்கள் சிவன்செயலே என்று கருதிச் செய்வதால் அவ்வினைகளின் பயன் அவர்களைச் சாராமையாகும். அவர்களுடைய சஞ்சிதவினை ஏற்கனவே குருவினது நயனதீட்சையினாலே அற்றுவிடும்.

***சீவன் முத்தர்கள் உடலிருக்கும்போதே பரமுத்தியைப் பெறுவர்:-*** தம் செயல்களெல்லாஞ் சிவன் செயல்களாகவே கருதுகிற சீவன்முத்தரை, இம்மை மறுமை அம்மை ஆகிய மூவகைப் பயன்களையுந் தரும் வினைகள் யாவும் அவர்களைத் தாக்கமாட்டா. அத்தன்மையினாலே, ஆணவமலம் நீங்கப்பெற்ற அவர்களுக்குப், பரமுத்தியும் இம்மையில் சரீரம் இருக்கும்பொழுதே கிடைக்கப்பெறும்.

***சீவன் முத்தர்கள் பெத்தான்மாக்களின் நிலைகுறித்து இரங்குபவராவர்:-*** ஆணவமலத்தினால் பெத்தான்மாக்கள் படுந்துன் பத்தை நினைத்து, அவர்கள் மீது கருணையினால் இரங்குவர்.

***இறைவனை அணைந்த சீவன்முத்தர்களது தன்மைகளைத் தொகுத்து நோக்குவாம்:-*** சீவன் முத்தர்கள் திருவருள் ஞானத் துள்ளே அடங்கித், தம்மறிவினுள்ளே பேரின்பந்தங்கி அடங்கும்படி, வேறு செயல்கள் எதுவுமின்றி, ஆனந்த நித்திரை செய்வார்கள். அவர்கள் சிவனாந்தன்மை எய்தினாலுஞ் சிவனுக்குரிய ஐந்தொழில்களையேனும், பிறதொழில்களையேனுஞ் செய்ய

மாட்டார்கள். அவர்கள் ஞானத்திற் கலந்து நிற்கிற தன்மையாற், சிவனையே அல்லாது, வேறு ஒன்றினையுங் காணமாட்டார்கள். அவர்கள் சிவனாந்தன்மை எய்தியதினால், சிவனைப்போல எங்கும் வியாபித்திருப்பார்கள். அகமும் புறமும் ஒத்த தன்மையாகக் காண்கின்ற ஞானத்தை, அவர்கள் பொருந்திய தன்மையினாலே, விருப்பு வெறுப்பு இல்லாதவராவர். யான் எனது என்ற செருக்கின்றி, எல்லாஞ் சிவன்செயலே என்று கருதிச் செய்யும் அவர்கள், அவ்வினையினால் அடையும் பயன் வீட்டின்பமே.

சீவன்முத்தர்களது பிராரத்துவவினை, அவர்களது உடல் நீங்கும்போதே நீங்கும். அவர்கள் செயல்கள் யாவுஞ் சிவன் செயல்களாகக் கருதிச் செய்வதினால், அவ்வினைகளின் பயன் சிவனையே சாரத், திருவருளால் அவை அழிக்கப்படும். அவர்களது சஞ்சிதவினை ஏற்கனவே குருவினது தீட்சையினாலே எரிக்கப்பட்டு விடும்.

அவர்கள், செயல்கள் யாவுஞ் சிவன் செயல்களாகவே கருதிச் செய்தலினால், இம்மை மறுமை அம்மைப் பயன்களைத்தரும் வினைகள், அவர்களைத் தாக்காமையினால், அவர்களுக்குப் பரமுத்தி உடலிருக்கும்போதே இம்மையிலேயே கிடைக்கப்பெறும். அவர்கள் பற்றற்ற நிலையில் பேரின்பத்தை அனுபவித்தாலும், தமது இயல்பான கருணையினாலே ஆணவமலத்தாக்கத்தினால் பெத்தான்மாக்கள் படுந்துயரத்தை நினைந்து இரங்குவார்கள்.

அன்பர்களே! ஆணவமலபந்தத்தினால் பிறவித் துன்பத்துள் அழுந்தி வருந்திக் கொண்டிருக்கும் ஆன்மா, இறைவனாற் கொடுக்கப்பட்ட தனு கரண புவன போகங்களை நன்முறையில் பாவித்தாற், சிவபுண்ணியம் வளர்ந்து நாளடைவில் இரு வினைகளையுஞ் சமமாகப் பாவிக்கப்படும் எண்ணம் தோன்றி எல்லாஞ் சிவன் செயலே என்று செயலாற்ற, ஆணவமலம் வலி கெடும். மலபரிபாகம் ஏற்படும். அப்பொழுது திருவருட்சத்தி பதிதலாகிய சத்திநிபாதம் நிகழும். அதனால் உயிர்விளக்கம் பெறும் இன்புறுநிலை தோன்றும். திருவருட்சத்தி அவ்வான்மாவைச் சிவத்துடன் சேர்க்க, அவ்வான்மா ஆன்மபோதம் கெட்டுச் சிவபோதம் அடைந்து, அத்துவித நிலையில் சிவனுடன் கலந்து பேரின்பப் பெருவாழ்வை அடையும். இதுவே ஓர் ஆன்மா அடையும் இறுதி

நிலையாகும் என்பதை உணர்வோமாக.

## திருவருட்பயன் வசனரூபச் சுருக்கம்

சிவனடியார்களே! அன்பர்களே! சந்தான குரவர்களில் ஒருவராகிய உமாபதி சிவாச்சாரியார் திருவருட்பயனில் கூறியவற்றை வசனரூபத்தில் கூர்ந்து நோக்கினோம்.

"தொட்டனைத் தூறும் மணற்கேணி மாந்தற்குக்

கற்றனைத்தூறும் அறிவு" என்ற தெய்வப்புலவர் கூற்றைச் சிறிது சிந்திப்போம். வல்லிபுரஆழ்வார் கோவிலுக்கு அண்மையில் நாவற்காடு என்னும் ஒரு நாவல்மரக்காடு உள்ளது. அங்கே நாவற்பழம் உண்ணப் போகிறவர்கள், பழங்களை வேண்டியவாறு பறித்து உண்டபின், நாவறட்சி ஏற்படத் தண்ணீரைத் தேடி, அங்கேயுள்ள மணலைத் தோண்டுவர், தோண்டியவுடன் சிறிது நீர்சுரக்கும். அவர்கள் எவ்வளவிற்கு எவ்வளவு தோண்டுகிறார்களோ அவ்வளவிற்குத் தண்ணீர் சுரந்துகொண்டேயிருக்கும். அவர்கள் மகிழ்ச்சிடன் அள்ளிக் குடித்து மகிழ்வர்.

அதுபோலவே அருள்நூல்களைப் படிக்கும்போது, மணற்கேணியில் முதற்தரம் தோண்டியவுடன் சிறிது நீர் சுரப்பதுபோல அந்நூலின் பொருள் ஓரளவே புலனாகும். மணற்கேணியைத் திரும்பத் திரும்பத் தோண்டுதல் போல, அருள் நூலையும் திரும்பத் திரும்ப ஆராய்ந்து கற்கும்போது தான், அந்நூலின் உண்மையான பொருளளவு புலனாகும். அடியேனும் முதன்முதல் இந்நூலைப் படித்தபோது அடைந்த அனுபவமும் இதுவேயாகும்.

திருவருட்பயன் என்னும் நூல் மிகவும் ஆழமான பொருள்பொதிந்த, ஆனால் மனிதரின் நல்வாழ்விற்கு ஆதாரமான பல விடயங்களை அடக்கிய ஓர் அருள்நூலாகும்.

அவ்வகையில் நாம் இதுகாறும் படித்தவற்றை மீட்டுஞ் சிந்திப்பது பயன்தரும் என்று சிந்தித்தே இச்சுருக்கத்தை எழுதலானேன்.

திருவருட்பயன் என்னும் இந்நூல், முழுமுதற் கடவுளாகிய சிவபெருமானுடைய திருவருளை ஆன்மாக்களுக்குப் பயன்படும் வகையில், பத்து அதிகாரங்களைக் கொண்ட நூறுகுறட்பாக்களினால் விளக்குவதாகும்.

**திருவருட்பயனின் முதலாவது அதிகாரமாகிய பதிமுதுநிலையில், இறைவனது இயல்புகளைப் பற்றி விளக்கும் பொழுது:-** "இறைவன் அகரமாகிய உயிர்எழுத்துப்போல உலகெங்கிலுமுள்ள உயிருள்ள உயிரற்ற எல்லாப் பொருள்களிலுங் கலந்து நின்றும், அவற்றை எல்லாங் கடந்து நின்றும் விளங்கும் பரிபூரணனாவர். ஆன்மாக்களுக்கு அருள்புரிகின்ற திருவருட் சத்தியுடன் பிரிப்பின்றிக் கலந்திருப்பவர். எங்கும் நிறைந்து நிற்குந் தன்மைக்கும், எவராலும் அறியமுடியாத அருமைக்கும், ஒருவரால் இலகுவில் பெறமுடியாத அருமைக்கும், தனக்குத் தானேயன்றிப் பிறிதொருவரும் ஒப்பில்லாதவர். ஐந்தொழில்களை நிகழ்த்தி ஆன்மாக்களுக்கு நீங்காத துணையாக நிற்பவர்.

சிவம் சத்தி நாதம் விந்து ஆகிய நான்கு அருவத்திருமேனி களையும், பிரம்மா விஷ்ணு உருத்திரன் மகேசுவரன் ஆகிய நான்கு உருவத்திருமேனிகளையுஞ், சதாசிவம் என்று சொல்லப்படுகின்ற சிவலிங்கமாகிய அருவுருவத் திருமேனியையும், உடையவர் பிறிதொரு தலைவர் இல்லாதவர். தேவர்களாலுஞ் காணமுடியாத அருமையுடையவராயினுந் தன்னைச் சரணடைந்த அடியார்களுக்கு, வெளிப்பட்டுத் தோன்றி நீங்காத துணையாக இருப்பவர். தம்மை வழிபடுவோருக்குப், பேரின்பத்தை அளிப்பவர்" என்பன விபரிக்கப் பட்டுள்ளன.

**இரண்டாவது அதிகாரமாக உயிரவைநிலை என்னும் ஆன்மாக்களின் தன்மைகள் பற்றி விளக்கும் போது:-** "ஆன்மாக்கள் எண்ணிறந்தன. அவை மூன்று மலங்களையுடைய சகலர் எனவும், இரு மலங்களையுடைய பிரளயாகலர் எனவும், ஒரு மலத்தையேயுடைய விஞ்ஞானகலர் எனவும் மூவகைப்படும். நனவிலே காண்பனவற்றைக் கனவிலே மாறிக்காண்கின்றன. கண் முதலிய பொறிகளின்றி ஒன்றையுங் காணமுடியாதன. கண்களில் பார்க்குஞ் சத்தியற்ற குருடர்களுக்கு, உலகம் இருண்டு தோற்றுவது போல ஆணவமல இருளினால் அறிவு மறைக்கப்பெற்ற ஆன்மாக்களுக்கு, இறைவனுந் தத்துவங்களுந் தோற்றுவதில்லை. சார்ந்ததன் வண்ணமாகத் தோன்றுங் கண்ணாடிபோல, ஆன்மா சத்தாகிய சிவத்தைச் சார்ந்து சத்துப் பொருளாகவும், அசத்தாகிய மலங்களைச் சார்ந்து சடமாகவும் விளங்குவதனால் சதசத்து என்று

அழைக்கப்படுகின்றது.

பகலில் கண்ணொளி இல்லாத கூகைக்குச், சூரியஒளி இருளாகத்தோற்றுவது போல, ஆணவமல இருளினால் மறைக்கப்பட்டு அறிவு விளக்கமில்லாத ஆன்மாக்களுக்குத் திருவருளாகிய ஒளி தோன்றுவதில்லை. நீண்டகாலம் பிறவித்துன்பங்களில் அழுந்தியிருக்கும் அவ்வான்மாக்கள் எப்பொழுது பேரன்பு உண்டாகித் திருவருளை உணருகின்றனவோ, அப்பொழுதே அவை பிறவித்துன்பங்களில் நின்றும் விடுபட்டு, வீடுபேற்றை அடைவனவாம்" என்று விபரிக்கப் பட்டுள்ளது.

**திருவருட்பயனின் மூன்றாம் அதிகாரம் இருள்மலநிலை பற்றி விளக்கும் போது:-** "இருள்மலம் எனக்கூறப்படுவது ஆணவமலமே. அதனுடன் கன்மமலம் பற்றியும் மாயாமலம் பற்றியும் கூறப்படுவது ஒற்றுமை பற்றியே. உலகில் உள்ள உள்பொருள்களில், மலங்கள் மூன்றும் அடங்குகின்றன. ஆணவமலம், ஆன்மாக்களின் அறிவை விளக்கம் பெறாது மறைத்து நிற்கிறது. உலகிலுள்ள பொருள்கள் யாவற்றையும் மறைத்துத், தன்னை மாத்திரங் காட்டும் இருளினும் பார்க்க, மறைக்கிற பொருள்களையுந் தன்னையுங் காட்டாத ஆணவமலம் கொடியதாகும். அவ்வாணவமலம், ஆன்மாக் களின் அகத்தில் உள்ளொளியாக விளங்குஞ் சிவத்தைப் பற்றாது அவ்வான்மாக்களையே பற்றிநிற்கும். அவ்வாணவமலம் எண்ணிறந்த ஆன்மாக்களைப் புணர்ந்து நின்றாலும், அவைகளுக்குத் தன்னைக் காட்டாது. ஆன்மாக்கள் மெய்யுணர்வைப் பெறாது மயக்கத்தைப் பொருந்தி நிற்குந் தன்மையை, இவ்வாணவமலமே கொடுக்கிறது.

ஆன்மாக்களை அநாதியாகவே பற்றிநிற்கும் இம்மலம் அவற்றின் குணமல்ல, குற்றமேயாகும். ஆன்மாக்கள் மாயையின் நின்றுந் தோற்றுகின்ற, தனு கரண புவன போகங்களைப் பெற்றபோதிலும், ஞானஉணர்வினைப் பெறாவிடின், ஒருபோதும் ஆணவமலம் அவற்றைவிட்டு நீங்காது.

சூரியன் உதயமாகும்வரை இராக்காலத்தில் சிறிது இருளைவிலக்கக், கைவிளக்கு உதவுவது போலத் திருவருளாகிய ஞானஒளி தோன்றும் வரையும், அவ்வாணவமலத்தின் வலிமையைச் சிறிது குறைக்க, மாயாமலங்களின் நின்றுந் தோற்றுகின்ற தனு கரண புவனங்கள் ஆன்மாக்களின் அறிவைச் சிறிது விளங்க

வைக்கின்றன" என விபரிக்கப்பட்டுள்ளது.

**திருவருட்பயனின் நான்காம் அதிகாரத்தில் திருவருளின் தன்மைகள் பற்றி விளக்கும்போது:-** "திருவருளை அவாவி நிற்கும் ஆன்மாக்களுக்குத், திருவருளே மிகமிகத் தேவையான பொருளாகும். அதனிலும் மேம்பட்ட பொருள் அவற்றிற்குக் கிடையாது. அத்திருவருள் சூரியனுடைய ஒளியைப் போல, எல்லாவிடங்களிலும் பிரகாசிக்கும் இயல்புடையது. ஆன்மாக்கள் மெய்யறிவைப் பெற உதவிப், பேரின்பமடைய வழிப்படுத்துகிறது. ஆயினும் திருப்பாற் கடலிலுள்ள மீன்கள், அதிலுள்ள பாலைப் பருகாது, சிறுபிராணி களைத் தேடி அலைந்துபிடித்து, அவற்றைப் புசிப்பது போலத், திருவருளில் தங்கியிருக்கின்ற ஆன்மாக்கள், திருவருளை வழிபட்டுப் பேரின்பத்தைஅடையமுயலாமல், உலக இன்பங்களிலேயே அமிழ்ந்தி அலைகின்றன.

நிலமானது, தன்மீது உள்ள நல்லனதீயன யாவற்றையும் தாங்கிச் சுமப்பது போலத், திருவருளானது எல்லோரையும் தாங்கிநின்று வழிப்படுத்துகிறது. ஆன்மாக்கள் சிற்றின்பத்தில் ஈடுபட்டு நிற்கும்வரை, திருவருள் அவற்றிற்குத் தோன்றாது. திருவருள் தோன்றுவதற்கு, ஞானநூல்களை மனஅமைதியோடு கேட்கவேண்டும். மனஅமைதியின்றி அவற்றைக் கேட்பது, பாற்குடத்தின் மேலுள்ள பூனை, அதிலுள்ள பாலைப் பருகாது, அயலிலுள்ள பூச்சிகளைப் பிடிக்கப் பாய்ந்து, இலக்குத் தவறிப் பாலையும் பருகாது பூச்சியையும் இழப்பது போலப் பயனற்றதாகும். எனவே ஒருவர் அடையவேண்டிய பேரின்பப் பேற்றிற்கு, ஆரம்பப்படியாக அமையவேண்டியது, திருவருளை அறிதலும் அடைதலுமேயாம்" என விபரிக்கப்பட்டுள்ளது.

**திருவருட்பயனின் ஐந்தாம் அதிகாரத்தில், அருள் உருவாகிய திருவருள் குருவடிவாகி வந்து, அருளுதலை விளக்கும்போது:-** "மக்களுக்குத் தோன்றாத் துணையாக நின்று அருளுகிற திருவருளே, ஆன்மாக்கள் நல்வினை தீவினைகளைச் சமமாகக் கருதி, இருவினை ஒப்பினால் மலபரிபாகம் அடையும்போது, அவைகளை ஆட்கொள்ளும்படி, குருவடிவாகி வந்து அவைகளை விட்டு நீங்காதிருந்து அருள்புரிகிறது.

ஒருவனுக்கு உற்றநோயை, அவனுடன் நெருங்கிப் பழகிறவர்களே அறிவதுபோல, ஆன்மாக்களைப் பீடித்துள்ள உள்

நோயாகிய ஆணவமலப் பிணியின் தன்மையை, ஆன்மாக்களுடன் சேர்ந்தேயிருக்குந் திருவருளே அறிந்து குருவடிவாகவந்து, முன்பு படைத்தல் முதலிய தொழில்களைத் தோன்றாவண்ணம் நின்று செய்ததுபோல, அருளாகிய தொழிலையும் மறைந்தே நின்று செய்கிறது.

காட்டுயானையைப் பிடிக்க விரும்புகிறவன், பார்வை மிருகம் என்று சொல்லப்படுகின்ற பழக்கப்பட்டயானையுடன் சென்றே, பழக்கப்படாத யானையை அணைத்துப் பிடிப்பதுபோல, இறைவனும் மக்களை ஆட்கொள்ளுவதற்கு, மக்களைப் போன்ற மானுடச் சட்டைதாங்கிக், குருவடிவாக எழுந்தருளுகிறார்.

பாம்பினாற் கடியுண்டவனின் விடத்தை, மந்திரவாதி தன்னைக் கீரியாகப் பாவித்துப் பார்வையினாலே நீக்குவது போலப், பக்குவான் மாக்களைப் பீடித்துள்ள ஆணவமலநோயாகிய விடத்தைத், திருவருள் தானே குருவடிவாக வந்து, தனது தீட்சையினாலே நீக்குகிறது.

மலத்தை நீக்கும்போது, விஞ்ஞானகலருக்கு அறிவிற்கு அறிவு வடிவாகி நின்றும், பிரளயாகலருக்கு உருவத்திருமேனியுடன் நேரே வந்தும், அருள்புரிகின்ற இறைவன், மும்மலங்களையுமுடைய சகலர்க்குக், குருவடிவாக வந்து அவர்களின் ஆணவமலப் பிணியை நீக்கிப் பேரின்பத்தை அருளுகிறான். சூரிய ஒளியானது தனக்குமுன் உள்ள சூரியகாந்தக் கல்லிலேயே நெருப்பைத் தோற்றுவிப்பது போலத், திருவருளாகிய குருவடிவும், பக்குவான்மாக்களுக்குத் தமது முன்னிலையிற் பார்வையாகிய தீட்சையினால், ஞானஒளியைக் கொடுக்கிறது" என விபரிக்கப்பட்டுள்ளது.

**திருவருட்பயன் ஆறாம் அதிகாரத்தால் குருவருளினால் மெய்ப்பொருளை அறியும்முறை பற்றிக்கூறப்படுகின்ற அறியும் நெறிபற்றி விளக்குகையில்:-** "ஆன்மாக்களின் உள்ளத்திலே, அவை செய்யும் புண்ணிய பாவங்களினால் வருகின்ற, இன்பதுன்பங்கள் இரண்டையுஞ், சமமாகப் பாவிக்கிறநிலை தோன்றுதலும், ஆணவமலத்தின் வலிமைகெட மலபரிபாகம் ஏற்படும்போது, திருவருட்சக்தி ஆன்மாவிற் பதிதலாகிய சத்திநிபாதம் ஏற்படும். அதனால் ஆன்மாவின் அறிவு விளக்கம்பெறும். தானுந் தன்னாற் செய்யப்படுகின்ற வினைகளும், அவற்றின் பயனாக விளைகின்ற இன்பதுன்பங்களும், அவற்றைச் சேர்ப்பிக்கும் இறைவனும்,

உண்டென்பதை அவ்வான்மா உணரும். தன்னுள் தான் சிவத்தோடு கலந்து நிற்கின்ற தன்மை, உயிர் உடலோடு சேர்ந்திருக்கின்ற தன்மைபோலும் என உணரும். பளிங்கானது தனது நிறத்தையுந், தன்னைச் சார்ந்தவற்றின் நிறத்தையுங்காட்டுவதற்குச், சூரியஒளி காரணமாவது போல, ஆன்மாவானது தனது நிலையையும் திரோதானசக்தி, சிற்சக்தி, சிவத்தின்பேரொளி ஆகியவற்றின் நிலைகளையும், உணருவதற்குத் திருவருளே துணையாவதை உணருகிறது.

சத்திநிபாதத்தின் பின், திருவருட்சக்தி, ஆன்மாவின் அறிவை விளக்கமுறச் செய்து, அதனைச் சிவத்துடன் சேர்க்கத் துணைபுரிகிறது. திருவருட்சத்தியின் துணையைப் பெற்ற ஆன்மாவானது, ஞானம் எப்படிப்பட்டது? எப்படி வந்து சேரும் என்பனவற்றை ஆராயாது, ஞானம் வந்து தோன்றும்பொழுதே, அதனை முன்னாகக் கொண்டு, அதன்பின் உண்டாகும் பேரின்பத்தையே அனுபவிக்கும் பொருளாகக் கருதி, ஞானஒளியைப் பற்றிக்கொண்டு சிவத்துடன் கலந்து பேரின்பத்துள் மூழ்கியிருக்கும்" என விபரிக்கப்பட்டுள்ளது.

***திருவருட்பயன் ஏழாம் அதிகாரத்தால் ஆணவமலநீக்கம் பெற்றுக் குருவருளினால் உயிர்விளக்கத்தில் ஆன்மாஅறிவு விளக்கம் பெறுவதை விளக்குகையில்***~ "வெயிலினது கடும் வெப்பத்தால் வருந்தும் ஒருவன், குளிர்ந்த நிழல்மரமொன்றைக் கண்டவுடன், ஓடிச்சென்று நிழலை அடைந்து மகிழுதல்போல, மலங்களினால் வருந்திய ஆன்மா, திருவருளைக் கண்டவுடன், அதனைச் சேர்ந்து, தனது இயல்பு கெட்டுத் திருவருள் வயப்பட்டுச் சுகம் அனுபவிக்கும். ஆணவவலி கெட்டுத் திருவருட் சக்திபதிதலால் ஆன்மா அறிவு விளக்கம் பெற்றுச், சிவத்தின் இயல்புகளை உணருகிறது. ஆன்மாவின் பக்குவநிலையால், திருவருள் தன்னை ஆன்மாவிற்குக் காட்டிநிற்க, ஆன்மா திருவருளின் தன்மைகளை அறிகிறது. திருவருளே தனக்குத் துணை என்பதையும் அறிகிறது. அதனால் தானே முயன்று திருவருளைக் கண்டேன் என்ற செருக்கை அகற்றுகிறது. அப்பொழுது திருவருள் ஆன்மாவிற்கு உலகஇன்பங்களை மறைத்து, முழுமுதற் கடவுளாகிய சிவத்தைக் காட்டுகிறது.

தன்னையே ஆதாரமாகக் கொண்டு தன்னையே சரணடைந்து, ஒழுகுகின்றவர்களுடைய செயலால் வரும், ஆகாமியவினைப் பயன்களைத் தாமே ஏற்று, இறைவன் நடத்தலால், எல்லாஞ் சிவன் செயலே என்பதை ஆன்மா உணருகிறது. தான் பேரின்பத்தை அடையவேண்டுமாயின், பேரின்பத்திற்குத் துணையாக இருக்கிற திருவருளின் துணையைப் பெறவேண்டும் என்பதையும் உணருகிறது.

பளிங்குத் தூணானது, இருட்காலத்தில், ஒரே இருளாக விளங்குகிறது. சூரியன் உதயமானதும் அது பிரகாசிக்கத் தொடங்குகிறது. சூரியப் பிரகாசம் கூடக்கூடக், பளிங்கினது பிரகாசமுங் கூடி வருகிறது. சூரியன் பளிங்குத்தூணுக்கு மேலாக உச்சியில் பிரகாசிக்கும்போது, பளிங்குத்தூணின் பிரகாசம் எல்லாஞ், சூரிய ஒளியுள் அடங்கி, முழுவதுஞ் சூரியப் பிரகாசமாகவே விளங்குகிறது. அதுபோல ஆணவமயமாகி நிற்கும் ஆன்மா, ஞானஒளியாகிய சூரியன் உதயமாக, ஆணவமலம் வலிகெட்டுப் பளிங்குத்தூண் சூரியஒளியிற் தனது நிறத்துடன் பிரகாசிப்பதுபோலத், தன்னுணர்வோடு பிரகாசித்து, ஞானஒளிப்பிரகாசம் கூடக்கூடத் தன்னறிவு மேலும் பிரகாசிக்க, உச்சிப்பொழுதில் பளிங்குத்தூண் சூரியஒளியுள் தனது பிரகாசம் முழுவதும் அடங்கச் சூரியப் பிரகாசமே முழுவதுமாக ஒளிர்வது போலப் பூரணமான ஞானஒளியுள் சிவபோதம் பிரகாசிக்க, ஆன்மபோதம் முற்றாக அதனுள் அடங்கிவிடத் தானுஞ் சிவபோதமாகப் பிரகாசிக்கிறது.

இராக்காலத்தில் இருளிலே ஒருபொருளை எடுக்கவிரும்பும் ஒருவன் விளக்கை முன்னேபிடித்துக் கொண்டு, தான் அதன்பின்னே சென்று அப்பொருளைத் தேடி எடுப்பது போலச் சிவத்தை அடையவிரும்பும் ஆன்மா, திருவருளாகிய விளக்கை முன்னாகக்கொண்டு, தான் அதன் பின்னே சென்று சிவத்தை அடைகிறது. கருணாநிதியாகிய சிவமே, பக்குவநிலையில் ஆன்மாவிற்குச் சிவானந்தப் பேற்றைக் கொடுக்கிறது" என விபரிக்கப்பட்டுள்ளது.

**திருவருட்பயன் எட்டாம் அதிகாரத்தால் உயிர்விளக்கம் பெற்ற ஆன்மாவின் இன்புறும் நிலைபற்றி விளக்கும் போது:-** "ஆணவமல இருளைப் போக்குதற்கு, ஞானஒளியை முன்னாகவிட்டு, அதன் பின்னே செல்கின்ற ஆன்மா, பேரின்பப் பெருவாழ்வை

அடையும். பெண்மகள் ஒருத்தி ஆண்மகன் ஒருவனுடன் சேரும்பொழுதே இன்பத்தை அடைதல் போன்று, ஆன்மாவாகிய தலைவி சிவமாகிய தலைவனை அடையும்போதே இன்பத்தை அடைகிறது. பேரன்பினால் தன்னை வந்தடைந்த ஆன்மாக்களுக்கு, அத்துவித நிலையிற் கலந்து, பேரின்பத்தை அளிக்கின்ற இறைவன், தான் இன்பத்தை அடைபவர் அல்லர். காரணம், அவரின் திருமேனி முழுவதும் பேரின்ப ஊற்றாய் இருப்பதேயாகும்.

ஆன்மாவுஞ் சிவமும் இருபொருள்களுமாகாது, ஒருபொருளு மாகாது பிரிப்பின்றிக் கலந்து நிற்கும் நிலை, அத்துவிதமாகும். ஆன்மா இறைவனோடு கூடிப் பேரின்பத்தை அனுபவிக்கும்பொழுது, தன்னுடைய ஆன்மபோதத் தன்மைகெட்டுச் சிவத்தன்மை அடையுந் தன்மையால், ஒன்றாகவும் பொருட்தன்மையால் வேறாகவும் தோன்றுகிறது.

சமாதிநிலை அடைந்தோரும், முத்திநிலை அடைந்தோரும், இடைவிடாத சமாதிநிலை அடையாமல் கேட்டல், சிந்தித்தல் என்னும் ஞானநிலை அடைந்தோரும் இனிப்பிறவாதவராவர். இவ்வான்மாக்கள் தமது செயல்கள் யாவுஞ், சிவன் செயல்களாக வரும்வரையும் நிற்கும் நிலையே, சமாதிநிலையாகும்.

ஞானத்தை அடைந்தவர்களுக்கு உறுதியாக உள்ளபொருள் பேரின்பமே. ஒன்றுபட்ட நிலையில் ஆன்மா அடையும் பேரின்பப்பேற்றை, மொழிகளினால் விபரித்துக்கூற முடியாது. ஒருவருக்கு எப்பொழுது இறைவன் மீது பேரன்பு உண்டாகிறதோ, அப்பொழுதே பேரின்பத்தை அடைதற்குரியவராவர்" என விபரிக்கப் பட்டுள்ளது.

**திருவருட்பயனின் ஒன்பதாம் அதிகாரத்தால், ஐந்தெழுத்தருள் நிலையாகிய திருவருளின் தன்மைகள் பற்றி விளக்கும்போது:-** "கருணைக் கடலாகிய இறைவன், ஆன்மாக்களின் மேல் இயல்பாகவே உள்ள பேரருளினாற் கூறியருளிய வேத சிவாகமங்களும், ஏனைய சமய சாத்திரங்களும், திருவைந்தெழுத்தின் உண்மைகளையே கூறுகின்றன.

சிவமுந் திருவருளும் ஆன்மாவும் திரோதானசத்தியும் மலமும் ஆகிய ஐந்தும், ஐந்தெழுத்தோரெழுத்தாம் ஓங்காரமாகிய பிரணவத்துள் அமைந்துள்ளன. திருவைந்தெழுத்தில் (சிவாயநம)

வீட்டின்பத்தைத் தரும் சிவத்தைக் குறிக்கின்ற சிகாரமும், திருவருளைக் குறிக்கும் வகாரமும் ஒருபக்கமாகவும், திரோதான சத்தியைக் குறிக்கும் நகாரமும் மலத்தைக் குறிக்கும் மகாரமும் மறுபக்கத்திலுமாக, ஆன்மாவைக் குறிக்கும் யகாரம் அவற்றின் நடுவே அமைந்துள்ளது. திரோதான சத்தி மலத்தைக் கூட, மலந்தொழிற்பட்டு, ஆன்மாவானது அருளை அறிந்து உய்யாமல், அதனைப் பிறவித்துன்பத்துள் அழுத்துகிறது. ஆன்மா, தன்னைப் பற்றிநிற்கிற ஆணவமலம் நீங்கினாற் சிவத்தை அடையவழி பிறக்கும்.

மயக்கத்தைத் தரும் பிறவித்துன்பத்துள் அழுத்துகிற திரோதான சத்தியும் மலமுமாகிய நகார மகாரங்களை முதலாகவர 'நமசிவாய' என்று ஓதினால் மலமானது நீங்காது. மலம் நீங்கவேண்டுமேயானால், நகார மகாரங்களைப் பின்னாக்கிச் சிகார வகாரங்களை முன்னாக்கி அமையுஞ் 'சிவாயநம' என்னும் திருவைந்தெழுத்தை ஓதுதல் முறையாகும். வீட்டின்பத்தை விரும்புகிறவர்கள் 'நமசிவாய' என்று ஓதுதல் தகாது. அவர்கள் 'சிவாயநம' என்ற பஞ்சாட்சரத்தையே ஓதுதல் முறையாகும்.

வகாரமாகிய திருவருளானது, யகாரமாகிய ஆன்மாவிற்குச் சிவத்தைக் காட்டி, அதனை வீட்டின்பத்துள் இருத்தி அங்கே அதற்குக் குற்றமற்ற திருமேனியாகவும் இருக்கும். மோட்சமடைந்த ஆன்மாவாகிய யகாரம், சித்சத்தியாகிய வகாரத்திற்கும் சிவமாகிய சிகாரத்திற்கும் நடுவேயமையும். இந்நிலையில் ஆன்மா ஒருபோதும் சிவத்தை விட்டு நீங்காது'' என விபரிக்கப்பட்டுள்ளது.

**திருவருட்பயனின் பத்தாவது அதிகாரத்தால் இறைவனை அணைந்தோர் தன்மைகள் பற்றி விளக்கும்போது:-** ''சீவன்முத்தர்கள் சிவானந்தத்தினுள்ளே அமிழ்ந்தி இன்பம் அனுபவித்துக் கொண்டிருக்கிற தன்மையினாலே, பிறசெயல்கள் யாவும்இன்றி, ஆனந்த நித்திரை செய்வார்கள். ஆயின் சீவன்முத்தர்கள், சிவனின் ஐந்தொழில்களையேனும், மும்மல வாசனையால் வருகின்ற தொழில்களையேனுஞ் செய்யார். சிவத்தோடு அத்துவித நிலையிற் கலந்து பேரின்பத்தையே அனுபவிப்பர்.

எல்லாவற்றையும் இயல்பாகவே அறியச்செய்கின்ற ஞான மான்து தோன்றச், சிவத்துடன் இரண்டறக் கலந்து நிற்குஞ் சீவன்

முத்தர்கள், பேரின்பநுகர்ச்சியையே அன்றி, வேறொன்றையும் அறியமாட்டார்கள். பிறதாக்கங்களினாற் தனது ஐந்துறுப்புக்களையும் அடக்கிக்கொண்டு அசையாமற் கிடக்கும் ஆமைபோலத், தனது பொறிகளையும் மனதையும் அடக்கிச், சிவத்திலே புக்கழுந்தி நிற்பார்கள் இச்சீவன்முத்தர்கள். இந்த உலகமானது சிவத்தைவிட்டு நீங்காதது போலச் சிவானந்தத்தை அடைந்த சீவன்முத்தர்களும், சிவத்தைவிட்டு நீங்காது சிவத்தைப் போலவே உலகெங்கணும் வியாபித்திருப்பர்.

சீவன்முத்தர்களுக்கு எல்லாப் பொருள்களுஞ் சிவமயமாகவே தோன்றுவதால், அவர்கள் விருப்பு வெறுப்பு இல்லாதவராகவே இருப்பர். அவர்கள் யான் எனது என்ற செருக்குகளின்றி வினைகளை ஆற்றுவதால், அவற்றின் பயனாக அவர்கள் அடைவது வீட்டின்பமேயாகும்.

சீவன்முத்தர்களது பிராரத்துவவினை அவர்கள் எடுத்த அந்த உடல் நீங்கும்போதே நீங்கிவிடும். அவர்களுடைய சஞ்சிதவினை, ஏற்கனவே குருவின் தீட்சையினால் அற்றுவிடும். அவர்கள் இப்பிறப்பிற்செய்யுஞ் செயல்கள் எல்லாஞ், சிவன் செயல்களாகவே கருதிச் செய்வதினால் ஏற்படும் ஆகாமியவினை, அவர்களைச் சாராது, சிவனையே சாரத், திருவருள் அவற்றை நீக்கிவிடும். அதனாற் சீவன்முத்தர்கள் உடம்போடிருக்கையிலேயே, பரமுத்திப் பேற்றை அடைவர். அவர்கள் ஆணவமலத்தால் தாக்குண்டு வருந்தும் பெத்தான்மாக்கள் நிலையைக்கண்டு கருணையினாலே அவர்கள் மேல் இரங்குவர்" என விபரிக்கப்பட்டுள்ளது.

## திருவருட்பயன் வசனரூபத்தின் பூர்த்தி

அன்பர்களே! இப்பொழுது திருவருட்பயன் வசனரூபத்தை ஓரளவு பயின்றுள்ளீர்கள். ஆகவே எனது முன்னுரையில் எழுப்பப்பட்ட வினாக்களுக்கு அனேகமாக விடைகள் ஓரளவு தெளிவாகி இருக்கும் என நினைக்கிறேன் ஆயினும் அவற்றிற்கு விடைகளை மீட்டும் ஒருகால் சிந்திப்பது பயனுடையதாகும்.

**நாம் யார்?** பதி பசு பாசம் என்று சொல்லப்படுகின்ற முப் பொருள்களில் ஒன்றாகிய பசு என்பதில் அடங்கும் ஆன்மாக்களாவர். மலங்களின் பீடிப்பினால் பதியை விலகிச் சென்று அறிவு மறைக்கப்

பட்டுப் பிறவித்துன்பத்துள் அழுந்துபவராவர். சார்ந்ததன் வண்ணமாகத் தோன்றுங் கண்ணாடிபோல, மலங்களைச் சார்ந்தபோது அறிவற்ற சடப்பொருளாகவும், சிவத்தைச் சாரும்பொழுது அறிவுமயமாகிய சித்தாகவும் விளங்குஞ் சதசத்தாவர். ஆணவமல இருளினால் அறிவு மறைக்கப்பட்டு வருந்துபவர் ஆவர்.

**நமது இறைவனுடைய இயல்புகள் யாவை?** நமது இறைவராகிய சிவபெருமானோ, அகரஉயிர் எழுத்து, எழுத்துக்கள் எல்லாவற்றிலும் கலந்தும், அவற்றின் பேறாகத் தனித்தும் இயங்குவது போல, உலகங்கள் யாவற்றிலுமுள்ள உயிருள்ள உயிரற்ற பொருள்கள் யாவற்றிலுங் கலந்து நின்றும், அவற்றின் வேறாகத் தனித்து நின்றும் எங்கும் எல்லாவற்றிலுஞ் சர்வவியாபகராய் இருப்பவர். ஆயினும், ஆன்மாக்கள் மேல் வைத்த கருணையினால், ஒன்பது வகைத் திருமேனிகளை உடையவராய் ஐந்தொழில்களை நடாத்தி, அணுவில் அணுவாய் அண்டத்தில் அண்டமாய், எக்காலத்திலும் எல்லாம்வல்ல சித்தராய்த் திகழ்பவர். விருப்பு வெறுப்பின்றி, ஆன்மாக்கள் செய்யும் வினைகளுக்கேற்பப், பிறவிதோறும் தனு கரண புவன போகங்களைக் கொடுத்துத், தன்னை நாடிப்பேரன்பு கொள்பவர்களுக்குப் பேரின்பத்தை அளிப்பவராவர்.

**நாம் ஏன் பிறந்தோம்?** ஆணவமலத்தால் அநாதியே பீடிக்கப்பட்டுப் பிறவித்துன்பங்களில் உழலுகின்ற நாம், ஆணவவலிகெட்டு மலபரிபாகம் அடைந்து, சத்திநிபாதம் எய்தி வீட்டின்பத்தை அடையவேண்டும் என்னும் பெருங்கருணை நோக்கால் இறைவன் விருப்பு வெறுப்பின்றி, நாம் முற்பிறவிகளிற் செய்து கொண்ட வினைகளின் ஒரு பகுதியைப் பிராரத்துவவினையாகப் பொருத்தி, அதற்கேற்பப், பிறவிகளுக்குரிய உடம்பு மனம் சித்தி புத்தி அகங்காரம் பூமி போகங்களைக் கொடுத்து எம்மைப் படைக்க நாம் பிறந்தோம்.

**நாம் பிறந்ததின் நோக்கம் நிறைவேற நாஞ்செய்யவேண்டிய வையானவை?** எம்மைப் பிறவித் துன்பத்துள் அழுத்தி, எமது அறிவை மயக்கி, எமது உயிருடன் சேர்ந்திருக்கும் இறைவனை, எமக்குத் தோன்றாவண்ணம் மறைத்து வைத்திருக்கிற ஆணவமலம் வலிகெடும்படியாகத், திருவருளிலேயே நாம் தங்கியிருப்பதை

உணர்த்து, அத்திருவருளிலேயே பேரன்பு பூண்டு எல்லாஞ் சிவன்செயல் என உணர்ந்து, இன்பதுன்பங்களைச் சமமாகப் பாவித்து, மலபரிபாகம் ஏற்படும்வகையில் திருவருளின் துணையைப் பெறுதற்குரிய வழிவகைகளை நாடுவதே.

**இறுதியாக நாம் எங்கே போகப்போகிறோம்?** எமக்குப் பிறவிகளைத் தந்து படைத்த இறைவன், உழவன் ஒருவன், நெற்பயிர்களை நட்டுப் பாதுகாத்து, நெற்பயிர்கள் கதிர்முற்றி விளைந்தபின் நட்ட உழவனே, அவற்றை வெட்டுவது போல, இப்பிறவிக்கென நமக்குக்கொடுக்கப்பட்ட பிராரத்துவவினை முடிவில், தமது அழித்தற் தொழிலை நிறைவேற்ற, அதனாலே நமக்குக் கொடுக்கப்பட்ட தூல உடம்பு அழிதலும், எமது உயிர் சூக்கும உடம்புடனே (கண்ணுக்குத் தெரியாத உடம்புடனே) நாம் இப்பிறவியிற் செய்த வினைகளின் பயனைப் பெறுவதற்காக, ஓர் தொழிற்சாலையில் வேலை செய்யுந் தொழிலாளர் மாதம் முடிவில் தாம் அம்மாதத்தில் செய்த வேலையின் பயனைப் பெறுவதற்கு தொழிற்சாலையின் தலைமைக் காரியாலயத்திற்குச் செல்வதுபோல, ஆன்மகோடிகள் எல்லாஞ் செய்கின்ற வினைகளை எல்லாங் கணக்கிட்டு அவற்றின் நன்மை தீமைகளைத் தவறாது நடுநின்று ஆராய்ந்து பதியும் சித்திரபுத்திரனார் உறையும் இயமபுரம் போய்ச்சேரும்.

***அங்கே நிகழ்வனவற்றைச் சிறிது மனக்கண்முன் சிந்திப்பாம்:-*** சூக்கும சரீரமுடன் செல்லும் ஆன்மாக்கள் ஒவ்வொன்றும் தாம் எடுத்தபிறவிதோறும் செய்த நல்வினை தீவினைப் பயன்களைத் தெளியும். நன்மை தீமைகளின் பலனாக அவை இனி அனுபவிக்கவேண்டிய தீர்ப்பினையும் உணரும். அவை அப்பிறப்பில் செய்துள்ள நல்வினை தீவினைகள், அவை முற்பிறவிகளில் செய்து அனுபவியாது எஞ்சியிருக்கின்ற சஞ்சித வினையோடு சேர்க்கப்பட்டுத் தீர்ப்புக்கேற்ற பிறவிகளில் அனுபவித்தற்காக, அச்சஞ்சித வினையில் நின்றும் ஓர்பகுதி பிரித்தெடுக்கப்பட்டு, அவ்வான்மாக்கள் இனி தீர்ப்பின்படி எடுக்கவேண்டிய பிறவிகளுக்குரிய பிராரத்துவ வினையாகக் இறைவனால் கொடுக்கப்படும். அவை சிவபுண்ணியங்களையே செய்திருந்தால் தேவர்களால் வரவேற்கப்பட்டுத், தேவலோகத்திலோ

சிவலோகத்திலோ சேர்க்கப்பட்டு இன்பத்தை அனுபவிக்கும். நல்வினைகளையே அதிகஞ் செய்திருந்தால் அரசனாகவோ பெருஞ் செல்வனாகவோ பேரறிஞர்களாகவோ உயர்பிறவிகளைப் பெறும். தீவினைகளையே அதிகஞ் செய்திருந்தால் வறிஞராய்க் குருடராய் நொண்டியராயக் குடிகாரராய் மிருகங்களாய்ப் பறவைகளாய்ப் அட்டைகளாய்ப் புழுக்களாய் மரங்களாய் பிறவிகளை அடையும். நமது நீதிமன்றங்களிலே குற்றவாளிகள் செய்குற்றத்திற்கேற்ப உடன் தண்டனைகளையும் ஒத்திவைத்த தண்டனைகளையும் பெறுதல் போல, இயமபுரத்திலும் அவரவர் செய் தீவினைக்கேற்ப உடன் தண்டனைகளையும் பெற்றுப்பின் பல்வேறு பிறவிகளிற் தள்ளப்படுவர். கன்றுக்குப் பால்விடாது ஒட்டக்கறந்தவர், பாலில்நீர் கலந்து மோசஞ்செய்து விற்பவர். உணவுப் பொருட்களில் கலப்படஞ்செய்து துரோகஞ் செய்பவர். கொலையாளிகள், கணவனுக்குத் துரோகஞ் செய்து வாழும் தூர்த்தையர். சொந்த மனைவிக்குத் துரோகஞ் செய்துரோகிகள், பிறர்மனைவியை நச்சிக் கெடுப்பவர், குடிகெடுப்பவர், நண்பர் போல் நடித்து அடுத்துக்கெடுக்கும் சமூகத் துரோகிகள், பெற்ற தாய், தந்தையரை வஞ்சித்து வருத்துபவர்கள் குருத் துரோகிகள், பெண்களை மானபங்கஞ் செய்வோர். பிறர்பொருள்களை அபகரிக்குந் திருடர்கள், பொதுச் சொத்தை அபகரிப்பவர்கள். செய்நன்றிமறந்து துரோகஞ் செய்பவர்கள் முதலானோர் கடுமையான தண்டனைகளை உடன் பெறுவர். உடனடித் தண்டனைகளாக தீக்கிடங்கில் தள்ளப்படுதல் கடுமையான தாங்கமுடியாத கசையடி கொடுத்தல் தீக்கோலால் சுடுதல் அட்டைக் கிடங்கு புழுக்கிடங்கில் தள்ளப்படுதல் தூக்கிலிடப்படுதல் முதலியன செயற்படுத்தப்படும்.

மேலும் இறைவன் அவ்வப் பிறவிக்கெனக் கொடுக்கப்படும் காலக் கெடுவைமீறித் தற்கொலை அவக்கொலை புரிந்தோரின் உயிர்களுக்கு இயமபுரத்தில் உடன் தீர்ப்புக்கொடுக்கப்படுவதில்லை. நமது நீதிமன்றங்களிலே கடுங்குற்றவாளிகளுக்கு நீண்ட காலத்திற்கு விளக்கமறியல் கிடைப்பதுபோல, அவை நீண்டகாலத்திற்கு இருட்டுக் குகையுள் அடைக்கப்படுதல், பேய் பிசாசு முதலிய கெட்ட ஆவி களாக அலைதல் முதலிய தண்டனைகளையே பெறுவர். அதன் காரணமாகவே அப்படியானோர்க்கு இறுதிக் கிரியையாகிய அந்தி

யேஷ்டிக் கிரியை உரியகாலத்திச் செய்யப்படாமல் ஒருவருஷம் ஆறுமாதம் மூன்றுமாதம் நாற்பத்தைந்து நாள் கழித்தே செய்யும் நியதி ஏற்பட்டதெனக்கூறுவர். அக்காலக் கெடுவைத்தவிர்த்து உடன் செய்வதனால் அவ்வுயிர்களுக்கு அச்சாந்திகளுக்கு வரமுடியாமல் போகவே சாந்திக்குரிய செலவுவீணே. அவ்வுயிர்களுக்கு எவ்வித சாந்தியும் ஏற்படாது.

**நாம் ஏன் வருந்துகிறோம்?** நாம் இப்பிறவிகளில் கஷ்டப்படுவதற்குக் காரணம், நாம் முற்பிறப்பில் செய்துகொண்ட தீவினையின் பயன்கள், நமக்கு இப்பிறவிக்குக் கொடுக்கப்பட்ட பிராரத்துவவினையில் அடங்கிச் செயற்படுவதே. "போனநாட் செய்ததவை மண்ணிற் பிறந்தார்க்கு வைத்த பொருள்" என்றும், "செய்தீவினையிருக்கத் தெய்வத்தை நொந்தக்கால் எய்தவருமோ இருநிதியம்" என்றும் ஔவைப் பிராட்டியார் கூறியவை இதனைத் தெளிவாக்குகின்றன.

இதனை நிரூபிக்கும் வகையில் சமகாலத்தில் நடந்த ஓர் விடயத்தை இங்கே தருவாம். சிவபூசையில் மிகுந்த ஈடுபாடுடைய வரும் சிவபூசை முடித்தே உணவுண்ணும் விரதமுடையவருமான ஓர் அன்பருக்கு விதிவசத்தால் ஓர் எலும்புமுறிவு ஏற்பட்டு நடக்கமுடியாமற் தவித்தார். ஆயினும் அவர்செய்து வந்த சிவபூசையை விடாமல் தொடர்ந்தே செய்து வந்தார். அவர் இறைவனிடம் இரந்து வேண்டிய பொழுது, "நீ முற்பிறப்பில் ஓர் பிராமனோத்தமனைக் காலால் உதைத்தாய். அதனால் அவன் பதினைந்து வருடகாலம் கால் முறிந்து நடக்கமுடியாமல் வருந்தினான். அதன் பயனையே இப்பொழுது நீ அனுபவிக்கிறாய். ஆயின் நீ செய்யும் பூசைப்பயன் தலைபோகிற இடத்தில் தலைப்பாகை போகிறமாதிரி உன்னைப் பாதுகாக்கிறது என்று உணர்த்தப்பட்டது. எனவே நாம் துன்பப் படுவதற்குக் காரணம், நாம் முற்பிறப்பிற் செய்துகொண்ட வினைகளின் பயனே என்பது தெளிவாகிறது. மேலும் மாண்டவிய முனிவரின் வரலாறும் இதற்கு ஓர்சிறந்த எடுத்துக் காட்டாகும். தலைசிறந்த முனிசிரேட்டராகிய மாண்டவியமுனிவர், ஓர் பிள்ளையார் ஆலயத்தில் நிட்டையில் இருந்தார். இரவு அரண்மனைக்குத் திருடப்போன கள்வர், அவ்வழியால் போகும் பொழுது, "பிள்ளையாரே! நாம் போகிற

காரியம் வெற்றி பெறச்செய்யவேண்டும். வெற்றி பெற்றால் ஓர் முத்துமாலை தருவோம்" என்று சொல்லிக்கொண்டு போய் வெற்றிகரமாய்த் திருடிக்கொண்டு வந்து திரும்பிப் போகையில் ஓர்முத்துமாலையைப் பிள்ளையாருக்கு வீசிப்போயினர். அம் முத்துமாலை நிட்டையில் இருந்த முனிவர் கழுத்தில் விழுந்தது. அரண்மனைத்தூதுவர் தேடிக் கொண்டுவந்து முத்துமாலையுடன் முனிவரை அரசன் முன் நிறுத்தினர். முனிவர் ஏதும் தெரியாது எனக்கூறவே அரசன் அவரைக்கழுவில் ஏற்றினான். அப்பொழுது ஞான திருட்டியினாற் பார்த்த முனிவர், தாம் முற்பிறப்பில் சிறுபிள்ளையாக இருந்தபோது தும்பிப்பூச்சிகளைப் பிடித்து ஊசி ஏற்றி விளையாடியபயனே, இவ்வாறு அனுபவிக்க நேரிட்டது என்று உணர்ந்தார். எனவே ஒருவர் செய்தீவினை விளையாட்டாக இருந்தாலும் ஒன்றுக்குப் பத்தாகப் பெருகித்துன்பத்தைத்தரும்.

**நாம் துன்பங்களை நீக்க வழியாது?** திருவருளிற் தங்கியிருக்கின்ற நாம், கத்தியென்னுங் கருவி தீமைக்கு உதவுவது போல நன்மைக்கும் உதவுவதைச் சிந்தித்து, இப்பிறவிக்கென இறைவனாற் தரப்பட்ட தனு (உடம்பு) கரணம் (அந்தக்கரணம்) புவனம் (பூமி) போகம் (அனுபவிக்கும் இன்பம்) என்பவற்றைத் தீயவழிகளில் பயன்படுத்தாது, சிவபுண்ணியம் போன்ற நல்வழியிற் பயன்படுத்தித் திருவருளைத் துணையாகப் பற்றுவதே துன்பங்களில் நின்றும் நீங்கும் வழியாகும். திருவருள் கிட்டுமாயின் சூரியனைக் கண்ட பனிபோலத் துன்பங்கள் அகலும்.

**பேரின்பத்தை அடைய யாது செய்தல்வேண்டும்?** எமது உயிருக்குள் உயிராகி நின்று இயக்கும் இறைவனது திருவருளை நாடிப்பேரன்பு பூண்டு அவரவர் தகுதிக்கேற்றவாறு சிவபுண்ணியங் களைச் செய்து பேரின்பத்தை அடையும் வழியை நாடிப் பின்பற்று வதே செய்யத்தக்கதாகும்.

## நிறைவு

அன்பர்களே! முன்னுரையில் எழுப்பப்பட்ட வினாக்களுக்கான விடைகளை ஓரளவில் அறிந்தோம். திருவருட்பயன் என்னும் அருள்நூல் முக்கியமாக, ஆணவமலச் சேர்க்கையால் பிறவிப் பிணியில் அழுந்தி வருந்தி நிற்கும் நமக்குத் திருவருளின் துணையைப் பெற்றுப் பேரின்பம் அடையும் வழியை உணர்த்தி

நிற்கிறது. அவ்வழியிற் செல்வோர் ஒருசில நாட்களிலோ, ஒருசில வாரங்களிலோ ஒருசில மாதங்களிலோ ஒருசில வருடங்களிலோ ஒருசில பிறவிகளிலோ அவரவர் பக்திநிலைக்கேற்பப் பேரின்பத்தை அடையலாம் என்பதை வரலாறுகள் கூறுகின்றன. குடுமித்தேவரை வழிபட்ட கண்ணப்பநாயனார் ஆறுநாட்களில் முத்தியடைய, அப்பெருமானை ஆகம விதிப்படி பூசித்த சிவகோசரி என்பவர் ஆறுவருடங்களின் பின்பே முத்தியடைந்தார் என்ற வரலாறு அதனை நிதர்சனப்படுத்துகிறது.

நாம் திருவருட்பயன் காட்டிய வழியில் முற்றாகச் செல்லமுடியாவிட்டாலும் இயன்றவரை அதனை விளங்கி இயலத்தக்க வகை கைக்கொண்டு, எமது உயிருக்குயிராகிய இறைவனது திருவருளை நாடி அவரிடத்திற் பேரன்பு பூண்டு, சிவபுண்ணியங்களைச் செய்து வழிபாடியற்றி உய்வதே செய்யத் தக்கதாகும்.

திருவருட்பயன் வசனரூபம் முற்றிற்று

சுபம்

## அனுபந்தம்

# இந்நூலாசிரியர் அமரர் திருமதி மாதேவிப்பிள்ளை கதிர்காமத்தம்பி பற்றிக் காலத்திற்குக் காலம் பற்பல அறிஞர்கள் வெளியிட்ட கருத்துகள்

சந்நிதியான் ஆச்சிரமத்தில் 3.8.2001ல் நிகழ்ந்த சத்தி சிவன் நூல் வெளியீட்டு விழாவின்போது,

1. யாழ்பல்கலைக்கழகப் **பேராசிரியர் கலாநிதி அ. சண்முகதாஸ்** அவர்கள் தமது வாழ்த்துரையின்போது,
"................... சத்தி சிவன் பூசையுடன் ஆரம்பித்த இந்நூல் வெளியீட்டு விழாவில் சத்தி சிவன் இருவரையும் இங்கு நேரே காணக்கூடியதாக இருக்கிறது. கவிஞர் கதிர்காமத்தம்பியின் இவ்வித சிவப்பணிக்கு அவரின் பாரியார் மாதேவிப்பிள்ளை சத்திபோல் அவரோடிணைந்து செய்துவரும் சிவப்பணிக்கு **அவரது சிவபக்தியும் சமய அறிவும் பதிபக்தியுமே காரணம்**.........." எனக் குறிப்பிட்டிருந்தார்.

2. யாழ்பல்கலைக் கழகப் பேராசிரியர் **கலாநிதி S. சிவலிங்கராசா** அவர்கள் தமது உரையின் போது, "................ இவ்வித சிவப்பணி சிறப்பாக நடப்பதற்குக் கலைஞரின் சிவபக்தியோடு அவரின் **பாரியாரின் சமயஞானமும் சமயப்பற்றும் பதிபக்தியுமே** உறுதுணையாக விளங்குவதைக் காணக்கூடியதாக இருக்கிறது. ............." எனக் குறிப்பிட்டிருந்தார்.

3. யப்பான் பல்கலைக்கழகப் பேராசிரியர் **கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ்** அவர்கள் தமது வாழ்த்துரையில் "................. கவிஞர் கதிர்காமத்தம்பிஐயா அவர்கள் எனது ஆரம்பக் கல்விக்கு வித்திட்ட எனது குருவாவர். அவரது தர்மபத்தினியார் மாதேவிப்பிள்ளையைப் பார்க்கும் போது பெருமைப்படுகிறேன். அவர் தமது கணவரோடிணைந்து **தமது பொருளையும் காலத்தையுஞ் செலவிட்டுச் சிறந்த பதிபக்தியுள்ள பத்தினியாக விளங்குவது எம்மனோர்க்கு ஓர் சிறந்த வழிகாட்டலாகும்**............." எனக் குறிப்பிட்டிருந்தார்.

4. யாழ்பல்கலைக்கழகப் பேராசிரியர் கலாநிதி ப. கோபால கிருஷ்ண ஐயா தமது மதிப்பீட்டு உரையின்போது, ....... கவிஞர் கதிர்காமத் தம்பியின் பாரியார் கவிஞரின் சிவப்பணியில் இணைந்து செயற்பட்டுப் பதிபக்தியுடன் ஒழுகிவருவது போற்றத்தக்கதாகும்.........." என்று குறிப்பிட்டிருந்தார்.

5. சித்தாந்த ஞானதேசியபானுவும் சித்தாந்த சாகரமும் வல்வை முத்துமாரி அம்பாள் தேவஸ்தானப் பிரதம குருவுமாகிய சிவஸ்ரீ சோ. தண்டபாணிகதேசிகர் தமது வாழ்த்துரையின் போது, "...........கவிஞரும் அவரின் துணைவியார் மாதேவிப்பிள்ளையும் அம்பாள் ஆலயத்தில் மிகுந்த பக்திசிரத்தையுடன் சரியைத் தொண்டுகள் பலவருடகாலம் செய்து வந்ததை நான் அவதானித்துள்ளேன். மாதேவிப்பிள்ளையின் சிறந்த சமய ஞானமும் சமயப்பற்றும் பதிபக்தியுமே கவிஞரின் சிவப்பணிகளுக்கு உரமூட்டுவனவாக உள்ளன..............." எனக் குறிப்பிட்டிருந்தார். இது 23.7.2002இல் வல்வை முத்துமாரி அம்மன்கோவிலில் நூல் வெளியீட்டு விழாவின் போது நிகழ்ந்ததாகும்.

6. 16.5.2003 திருவிளையாடற் பூசைப் பாலகர் நூல் வாழ்த்துரையின் போது யாழ்பல்கலைக்கழக இந்துநாகரிகத்துறை முதுநிலை விரிவுரையாளர் திருமதி நாச்சியார் செல்வநாயகம், "........... கவிஞர் ஐயாவின் சிவப்பணிகளுக்கு உறுதுணையாக விளங்குபவர் அவரது தர்மபத்தினி என்பது புலனாகிறது. அவரது சமயஞானமும் பதிபக்தியும் பாராட்டிற்குரியது..........." எனக் குறிப்பிட்டுள்ளார்.

7. யாழ்பல்கலைக்கழக இந்து நாகரிகத்துறைத் தலைவர் திருமதி கலைவாணி இராமநாதன் மேற்படி நூலின் வாழ்த்துரையில்

"பத்தினியாலே - இந்தப்
பாரினிலே என்றும் மேன்மைகள் - கோடி
சித்தம் தெளியும் - இங்குச்
செய்கை அனைத்திலுஞ் செம்மை விளங்கும்"

என்னும் பாரதியார் வாக்கிற்கு **இலக்கணமாக இப்பக்திப் பெருந்தொண்டில் அருந்துணையாக உடனிருந்து கணவன் பாதம் பணிந்து ஆற்றும் கவிஞரின் தர்மபத்தினியாரின் பங்கும்** பாராட்டற்குரியது........ என்று குறிப்பிட்டிருந்தார்.

8. முதுகலைமாணி அருட்கவி **சீ. விநாசித்தம்பி புலவர்** தமது ஆத்மசாந்திப் பாவில் 13.6.2005இல்

கலைவாற்றல் கதிர்காமத்தம்பிக் கேற்ற
**கற்பகமாய் மனைமாட்சி ஒருங்கேயமைந்த**
**நிலைகொள்ளும் குணம் படைத்த ஞானச்செல்வி**
**அன்புநிறை முகப்பொலிவும் அறம்பொருந்தும்**
**அமுதமொழிப் புன்சிரிப்பும்** மாணவர்க்குப்
பொன்பெருகப் போதிக்கும் தாய் போற்பண்பும்
புருடன் குறிப்பறிந்து பயிலும் மாண்பும்
என்புருகத் தெய்வங்கள் தொழும்சிறப்பும்
இணைந்த நல்ளாள் மாதேவிப்பிள்ளை

எனப் பாடியுள்ளார்.

9. ஓய்வுபெற்ற நீதிபதி **விகடகவி மு. திருநாவுக்கரசு** தமது ஆத்மசாந்திப்பாவில்

**அன்பொடு பண்பும்**
**அறநெறி வாழ்வும்**
**தன்னிரு கண்களாய்**
**தூய நல் வாழ்வு**
**துலங்கிட வாழ்ந்த**

**அன்பின் பிறப்பிடம்**
**அறிவின் பொக்கிஷம்**
**அன்னையாம் எங்கள்**
**அற்புதத் தமிழ்மகள்**
**கவிஞரின் துணைவி**

**கவின்துறை மாது**
வள்ளுவனோடு வாசுகியம்மை
இன்புறக்கண்ட இணையிலா வாழ்வை
மண்மிசை கண்டீர் மாண்பதும் கண்டீர்
அல்லும் பகலும் அயராதுழைத்து
சொல்லரும் சேவை ஆற்றிய தாயே!

எனப்பாடியுள்ளார்.

10. யா /வல்வெட்டி இந்துதமிழ் கலவன் பாடசாலை **அதிபர், ஆசிரியர், பாடசாலை அபிவிருத்திச் சங்கம். பாடசாலை பழையமாணவர்சங்கம்,** விடுத்த அஞ்சலியில்

எமது பாடசாலை போற்றுகின்ற **நல்லாசானாய்**
பாடசாலை வளம் பெறும் **நல்லதிபராய்**
சிறந்த நற் சமூக சேவகராய்த் துலங்கி
எம்மைக் கண்ட போதெல்லாம்
இன்முகத்தைக் காட்டி
இனியபல வார்த்தைகள் பேசி
அழைக்கின்றபோது **அன்னைக்கு நிகராய்**
அரவணைப்பைச் செய்து நின்று
அனுதினமும் ஆன்மீக நெறிமிளிர
ஆலயங்கள் தோறுந் தவறாதே சென்று
ஆண்டவனைத் தொழுது நின்று
நல்வழி காட்டிய **மாதேவிப்பிள்ளை அன்னை"**

என வாழ்த்தினர்.

2 4 DEC 2006
3440